www.tamilarangam.net

$1.00 $

# தேடல்



RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மனைவியை துன்புறுத்துதல் குற்றம்

## மௌனத்தை உடையுங்கள்

உங்கள் உதவிக்கு

Ontario Women's Directorate

480 University Ave.
2nd Floor
Toronto, Ontario M5G 1V2
(416) 597-4500

107C, Johnson Ave.
Thunder Bay, Ontario
P7B 2V9
(807) 345-6084

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தேடல் 8 வைகாசி 1991

THEDAL

## தேடலின் உள்ளே

ஆசிரியர் குழு 2
ராஜீவ் காந்தி கொலையும் இந்திய அரசியல் பின்னணியும் 3
பாரதி ஓர் மார்க்சீய வாதியா? 4
பாலஸ்தீனமும் இஸ்ரேலும் 8
சின்னத்துப்பாக்கி 11
சிங்கள தமிழ் உழைக்கும் மக்களின் ஒற்றுமை சாத்தியமில்லை. 15
ஆரூரானின் பக்கங்கள் 22
புத்தாண்டு 23
பாதையில் 24
தேடலின் பக்கங்கள் 26
விடிவுக்காய் 29
அடைப்புக்குறிக்குள் உட்படுத்தப்பட்ட வாழ்க்கை 30
வெறும் சமாதியல்ல தான் 34
தாயகம் சில கருத்துக்கள் 36
பெரிய இடத்து அன்பு 37
சனே அறியாத பலாபலங்கள் 40
மடிப்பிச்சைகள் பாடமாகட்டும் 45

நாம் போருக்குத் தள்ளப்பட்டிருக்கிறோம்
எனவே போருக்கான ஆயுதத்தையும்
போரை எதிர்நோக்கும் துணிவையும்
தவிர எமக்கு வேறு வழியில்லை

சேகுவேரா

www.tamilarangam.net

# இந்திய விஸ்தரிப்புவாதமும் பசப்பு நடவடிக்கைகளும்

இலங்கை தமிழ் மக்களின்மேல் அன்பும் பாசமும் கொண்டவர்கள்போல் பாசாங்கு செய்து முதலில் உணவுப் பொதிகளை வீசியும், இறுதியில் தமிழ் பிரதேசங்களை ஆக்கிரமித்து போராளிகளிடமிருந்து ஆயுதங்களை பறித்தெடுக்க யுத்தம் புரிந்த இந்திய இராணுவம் முக்காடு போட்டுக் கொண்டு வெளியேறி ஓர் ஆண்டு பூர்த்தியாகிவிட்டது.

பெரும்பான்மை தமிழ் மக்கள் நினைத்ததுபோல் நீதியை நிலைநாட்டவோ தமிழ் மக்களுக்கு உரிமைகளை பெற்றுத் தரவோ இந்திய இராணுவம் இலங்கைக்கு வரவில்லை.

இலங்கையை ஆக்கிரமிக்கவும் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை போராட்டத்தை நசுக்கவும் வந்தது. இந்த ஆக்கிரமிப்பு இராணுவத்தின் வெறிச்செயல்களால் தமிழ் மக்கள்பட்ட துன்பங்கள் வேதனைகள் வரலாற்றிலிருந்து மறைந்துவிடப் போவதில்லை. ஆக்கிரமிப்பு இராணுவம் நடத்திய அரசியல் வன்முறைகள், படுகொலைகள், மிருகத்தனமான பாலியல் வன்முறைகள், கொடுமையான அடக்குமுறை நடவடிக்கைகளை; தமிழ் துரோக குழுக்களும், L.T.T.E. போன்ற சந்தர்ப்பவாத தலைமைகள் மறந்தாலும்; போராளிகளும் தமிழ் மக்களும் மறந்துவிடப் போவதில்லை. இந்த கொலைகார இராணுவத்திற்கு ஆதரவு கொடுத்த தமிழ் குழுக்களையும் வரலாறு மன்னிக்க போவதில்லை.

இந்தியா தம் மண்ணில் போராடும் தேசிய இனங்களை ஒடுக்குவது, தேசிய வெறி யுத்த வெறியை தூண்டுவது, பிராந்தியத்தில் உள்ள அண்டை நாடுகளின் உள்விவகாரங்களில் மூக்கை நுழைத்து தனது ஆதிக்கத்தை நிலைநிறுத்த முற்படுவது என்ற கொள்கைகளையே தொடர்கிறது.

இலங்கையில் இருந்து இந்திய இராணுவம் வெளியேற்றப்பட்டாலும், தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை முறியடிக்க இந்தியா எந்நேரமும் வரலாம் என்ற அபாயம் காத்திருக்கிறது.

தமிழ் மக்களின் மீதோ, அவர்களது போராட்டத்தின் மீதோ இந்தியாவுக்கு என்றுமே அனுதாபமோ ஆதரவோ இருக்கவில்லை. இந்தியாவுக்கு இருப்பதெல்லாம் பிராந்திய ஆதிக்க வெறி மட்டுமே.

* தமிழ் மக்களை தேசிய இனமாக அங்கீகரிக்காமல்
* தமிழ் மக்களின் பாரம்பரிய நில உரிமையை ஏற்றுக்கொள்ளாமல்
* தமிழ் மக்களின் சுய நிர்ணயத்தை அங்கீகரிக்காமல்

தமிழ் மக்கள் மீது அனுதாபம் இருப்பதாயும் தமிழ் மக்களின் போராட்டத்திற்கும் போராளிகளுக்கும் ஆதரவு காட்டுவது போல் இந்தியா நடந்து கொள்வது தனது விஸ்தரிப்பு நடவடிக்கைகளை மறைத்திடும் நடவடிக்கையே ஒழிய வேறொன்றுமில்லை!

ஆசிரியர் குழு

www.tamilarangam.net

# ராஜீவ் காந்தி கொலையும் இந்திய அரசியல் பின்னனியும

மே 21 ராஜீவ் காந்தியும் மற்றும் பதினைந்து பேரும் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் இன்றைய இந்திய அரசியல் வாழ்வில் கலந்திருக்கும் வன்முறையின் கடைசி உதாரணமாகும். சென்னைக்கு 25 மைல்கள் தொலைவில் இருக்கும் ஸ்ரீபெரும்புதூரில் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டிருக்கும் போது சக்திவாய்ந்த குண்டு ஒன்று வெடித்ததில் ராஜீவ் காந்தி பலியானார். இக்கொலைகளுடன் தேர்தல் பிரச்சாரத்தில் இடம் பெற்ற கொலைகளின் உத்தியோகபூர்வ எண்ணிக்கை 200ஐ தாண்டிவிட்டது. தேர்தல் தொடர்பான கொலைகளில் மேலும் பல மக்கள் கொல்லப்பட்டு வருவதுடன், எதிர் வரும் வாரங்களில் கொலைகள் அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது. அர்த்தமற்ற இந்தச் செயலை செய்தவர்கள் வன்மையாக கண்டிக்கப்பட வேண்டியவர்கள்.

தனிநபர் ஒருவரின் கொள்கைகளை மற்றொருவர் எவ்வளவு தூரம் ஆதரித்தாலோ அல்லது எதிர்த்தாலோ படுகொலை எந்தச் சந்தர்ப்பத்திலும் ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல. இந்தச் சம்பவத்தின் சூத்திரதாரிகள் இந்திய மக்களுக்கு கெடுதியை ஏற்படுத்தும் நோக்கத்திலேயே செயல்பட்டிருக்கிறார்கள் என்பது தெளிவு. தமது அன்னையார் கொலை செய்யப்பட்டு ஆறரை வருடங்களின் பின் நடைபெற்ற ராஜீவின் மரணம், இந்திய அரசியல் (crimnalisation) வன்முறை மயப்படுத்தப பட்டதன் விளைவாக ஏற்பட்டுள்ள மரணங்களுள் ஒன்று. இவ்வாறன கோழைத்தனமான கொலைகளுக்கு இந்தியாவில் முன்னுதாரணங்கள் இல்லாமல் இல்லை. அரசியல் எதிரிகளைக் கொலைசெய்வது குறிப்பாக "தீவிரவாதிகள்", "நக்சலைட்டுக்கள்" மற்றும் (fundame ntaliata) "அடிப்படைவாதிகள்" எனமுத்திரை குத்தப்படுவோர் கொலைசெய்யப்படுவது நீண்ட காலமாக நடைபெற்று வருகின்றது. இவ்விதம் திட்டமிட்ட அரசியல் படுகொலைகளை அவர்களுடன் நிகழ்ந்த மோதல்களில் நடைபெற்றதாக போலியான தகவல்களைக் கூறி பொலிசும், இராணுவமும் மறைத்துவரும் செயல் நாடுமுழுவதும் நடைபெற்று வருகிறது. இக்கொலைகளுடன் ஏனைய சமூக விரோத நடவடிக்கைகளுடனும் மக்கள் பிரதிநிதிகளாக (M.P.) தெரிவு செய்யப் படுவோர் பலர் சம்பந்தப்பட்டுள்ளனர்.

அமைதியான வழியில் மக்கள் பிரச்சனைகளை தீர்க்க முடியாத பொருளாதார அரசியல் அமைப்பின் வடிவமே இந்திய அரசியலின் வன்முறை மயப்படுத்தல் ஆகும். ஆளும் குழுக்களுக்கும் அதிகாரத்துக்காக போட்டி போடும் பல்வேறு குழுக்களும் அரசியல் கட்சிகளும் மிகவும் குறுகிய சுயநல நோக்கமுடையனவாக இருக்கின்றன. அரசியல் சித்தாந்த வேறுபாடுகளை தீர்ப்பதற்கும் அரசியல் இலக்குகளை சுலபமாக அடைவதற்கும் வன்முறையை விரும்பத்தக்க ஊடகமாய் பாவிக்கும் போக்கு அதிகரித்து வருகிறது.

ராஜீவ் காந்தி அதிகாரத்தில் இருந்த போது வன்முறை மயப்படுத்தல் தீவிர மாற்றத்தை அடைந்தது என்பது மிகவும் பிரசித்தமானது. 1984 நவம்பரில் டில்லியிலும் ஏனைய இந்திய மாநிலங்களிலும் பரவலாக நடைபெற்ற சீக்கிய படுகொலைகளைத் தவிர பல அரசியல் ஊழியர்கள் காஸ்மீர், பஞ்சாப், அசாம், பீகார் மற்றும் தமிழ் நாடு போன்ற இடங்களில் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இந்தக் கொலைகளுக்குப் பொறுப்பானவர்கள் நீதிமன்றத்திற்கு முன் நிறுத்தப்படுவதில்லை. பாராளுமன்றத்தில் உள்ள எந்தவொரு அரசியல் கட்சியும் இப்படுகொலைகளை கண்டிக்கவில்லை. ஏனைய நாட்டு அரசாங்கங்கள் கூட இதுபற்றி வாய்திறப்பதில்லை. ஜோர்ச்புஸ், கோர்பச்சோவ், ஐ.நா.ச.செயலாளர் நாயகம் பேரஸ் டீ குயேயர் மற்றும் பலரிடமிருந்து அனுதாபச் செய்திகள் குவிந்த வண்ணமிருக்கின்றன. தொடர்ந்து வந்த இந்திய அரசாங்கங்களுடன் வல்லரசுகளும் ராஜீவின் மரணத்திற்கு வழிவகுத்த செயற்பாட்டிற்கு காரணமாய் இருக்கும்போது, அதேவல்லரசுகள் அவரின் மரணம் குறித்து வேதனையை தெரிவிப்பதும் ஆச்சரியம் தருவதாயிருக்கிறது. .....


நாட்டில் அராஜகமும், வன்முறையும் கொண்ட சூழ்நிலையை உருவாக்கியவர்களும், பயங்கரவாத குழுக்களுக்கும், மக்களைப்

தொடர்ச்சி, 14ம் பக்கத்தில்

www.tamilarangam.net

# பாரதி ஓர்

## மாக்ஸ்சிச வாதியா?



பாரதியார் ரஷ்யப் புரட்சியினைப் பாராட்டி வரவேற்று 'புதிய ரஷ்யா' என்னும் கவிதையில் பின்வருமாறு பாடுகின்றார்.

"குடிமக்கள் சொன்னபடி
குடிவாழ்வு மேன்மையுறக்
குடிமை நீதி கடியொன்றிலெழுந்தது பார்
குடியரசென்று உலகறியக் கூறிவிட்டார்.
அடிமைக்குத் தளையில்லை யாருமிப்போது
அடிமையில்லை அறிக என்றார்.
இடிபட்ட சுவர் மேலே
கவிபாழ்விழுந்தாள்
கிருதயுகம் எழுக மாதோ."

இதன் மூலம் ரஷ்யப் புரட்சியினை இனங்கண்டு கொண்டு, முதன் முதலாகப் பாடிய இந்தியக் கவிஞரென்ற பெருமையினையும் பாரதியாரே தட்டிக்கொள்கின்றார். பாரதியின் மாதர் விடுதலை பற்றிய கவிதைகள்; கட்டுரைகள்; திருச்சின் என்னும் வீரமாதினைப் பற்றிய கட்டுரைகள், அம்மாதின் கவிதை மொழிபெயர்ப்புக்கள், புதிய ருஷ்யாவைப் பற்றிய கவிதை, செல்வம், தொழிலாளர் என்னும் தலைப்பிலான கட்டுரைகள்; மற்றுமவர் தத்துவப் பாடல்கள் இவையாவுமே நமக்குக் கூறி நிற்பவைதானென்ன? பாரதி ஒவ்வொரு விடயத்தினைப் பற்றியும் பல்வேறு வகைப்பட்ட கருத்துக்களையும் வெகு நுணுக்கமாகப் பரிசீலித்துள்ளாரென்பது மட்டுமல்ல, சமகாலத்து உலகியல் நடப்புகளையும் அறிந்துள்ளார் என்பதையும்தான். இன்றைய உலகில், முற்போக்குச் சிந்தனையாளர்களும், பிற்போக்குச் சிந்தனையாளர்களும் தங்கள் தங்கள் பார்வைகளில் பாரதியினைக் கண்டு புளகாங்கிதம் அடைந்து கொள்கின்றார்கள். பாரத சமுதாயம்" என்னும் கவிதையில் பின்வருமாறு பாடுகின்றன்;

"முப்பது கோடி ஜனங்களின் சங்கம்
முழுமைக்கும் பொது உடமை.
ஒப்பில்லாத சமுதாயம்
உலகத்துக் கொரு புதுமை
மனித உணவை
மனிதர் பறிக்கும் வழக்கம் இனியுண்டோ?
மனிதர்க்காக
மனிதர் பார்க்கும் வாழ்க்கை இனியுண்டோ?
பலனில் வாழ்க்கை இனியுண்டோ?

இவ்விதம் பாரதியாரின் கவிதைகள் பொதுவுடமையினையும், சமத்துவத்தையும் வரவேற்றுப் பாடுகின்றன. இவ்விதம் பொதுவுடமைக் கருத்தினை வரவேற்றும், ஆயுதம் தாங்கி நிகழ்த்தப்பட்ட ரஷ்யப் புரட்சியினையும் வரவேற்றுப் பாடிட்ட பாரதியினை மார்க்சிய வாதிகள் புரட்சியினை, ஆயுதப் புரட்சியினை வரவேற்றிடும் ஒரு கவிஞனாக எண்ணியே இறும்பூதெய்தி விடுகின்றார்கள்.

ஆனால் உண்மை இதுவா? பாரதியாரின் ஆவேசத்தினையூட்டிடும் சுதந்திரப் பாடல்களையும், பாப்பாப் பாட்டில்.....

"பாதகஞ் செய்பவரைக் கண்டால் நாம்
பயங்கொள்ளலாகாது பாப்பா!
மோதி மிதித்துவிடு பாப்பா!
அவர் முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா!"

என்று பாடுவதனையும் பார்த்துவிட்டு அவர் வன்முறையின் மூலம் தீர்வு காண்பதனையே விரும்புவதாக ஒரு சிலர் துள்ளிக் குதிக்கின்றார்கள். ஆனால் இவை எல்லாவற்றையுமே தவிடுபொடியாக்கி விடுகின்றது, பாரதியின் "செல்வம்" என்ற கட்டுரை. அதில் அவர் பின்வருமாறு கூறுகின்றார்;

"ஏற்கனவே ரஷ்யாவில் ஸ்ரீமான் லெனின் ஸ்ரீமான் மின்த்ரோஸ்கி முதலியவர்களின் அதிகாரத்தின் கீழ்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஏற்பட்டிருக்கும் குடியரசில் தேசத்து விளைநிலமும் பிற செல்வங்களும் தேசத்தில் பிறந்த அத்தனை ஜனங்களுக்கும் பொதுவுடமையாகிவிட்டது. இக் கொள்கை ஜெர்மனியிலும் ஆஸ்திரேலியாவிலும், துருக்கியிலும் அளவற்ற வன்மை கொண்டு வருகின்றது. ருஷ்யாவிலிருந்து இது ஆசியாவிலும் தாண்டிவிட்டது. வட ஆசியாவில் பிரமாண்டமான பகுதியாக நிற்கும் சைபீரியாதேசம் ருஷ்யாவின் ஆதிக்கத்தைச் சேர்ந்ததாதலால் அங்கும் இந்தமுறைமை அனுஷ்டானத்திற்கு வந்துவிட்டது. அங்கிருந்து இந்தக் கொள்கை மத்திய ஆசியாவிலும் பரவிவருகின்றது. ஐரோப்பாவிலுள்ள பிரான்ஸ், இங்கிலாந்து முதலிய வல்லரசுகள் இந்த முறைமை நம் நாடுகளுக்குள்ளும் பிரவேசித்து வரக்கூடும் என்று பயந்து அதன் பரவுதலைத் தடுக்குமாறு பலவிதங்களில் பிரயத்தனங்கள் புரிந்து வருகின்றார்கள். ஆனால் இந்த முறையை போர் கொலை பலாத்காரங்களின் மூலமாக உலகத்தில் பரவிவருவது எனக்குச் சம்மதம் இல்லை. எந்தக் காரணத்தைக் குறித்தும் மனிதருக்குள்ளே சண்டைகளும் கொலைகளும் நடக்கக் கூடாதென்பது என்னுடைய கருத்து. அப்படியிருக்க சமத்துவம், சகோதரத்துவம் என்ற தெய்வீக தர்மங்களைக் கொண்டோர் அவற்றைக் குத்துவெட்டு பீரங்கி துப்பாக்கிகளினால் பரவச்செய்யும்படி முயற்சி செய்தல் மிகவும் பொருந்தாத செய்கையென்று நான் நினைக்கின்றேன்." இதே கட்டுரையில் இன்னுமோரிடத்தில் பின்வருமாறு கூறுகின்றார். "கொலையாளிகளை அழிக்க கொலையைத்தானே கைக்கொள்ளும்படி நேருகின்றது. அநியாயம் செய்வோரை அநியாயத்தாலேதான் அடக்கும்படி நேருகிறது." என்று ஸ்ரீமான்லெனின் சொல்லுகிறார். இது முற்றிலும் தவறான கொள்கை. கொலை கொலையை வளர்க்குமே ஒழிய அதை நீக்க வல்லதாகாது. அநியாயம் அநியாயத்தை விருத்தி பண்ணுமே யொழிய குறைக்காது. பாபத்தை புண்ணியத்தாலே தான் வெல்ல வேண்டும். பாபத்தை பாபத தால் வெல்லுவோம் என்பது அறியாதவர் கொள்கை. இவ்விதமாகக் கூறுபவர் இன்னுமோரிடத்தில் பின்வருமாறு கூறுகின்றார்.

மேலும் ருஷ்யாவிலுங்கூட இப்போது ஏற்பட்டிருக்கும் சோஷலிசம்' ராஜ்யம் எக்காலமும் நீடித்து நிற்கும் இயல்புடையதென்று கருத வழியில்லை. இவையெல்லாம் நமக்கு காட்டி நிற்பவைதான் யாதோ? பாரதியார் புதிய ருஷ்ய சமுதாய அமைப்பில் வரவேற்கின்றார் என்பதையல்லவா. அந்தக் காலகட்டத்தில் இன்றைய நிலையில் போலி மார்க்ஸிச தத்துவங்களை விபரித்திருக்கும் நூல்கள் வெளிவராத நிலை, இந்நிலையில் பாரதியாரால் மார்க்ஸிய தத்துவத்தின் பூரணமாகவே அறிந்திட முடியாதொரு நிலையிருந்ததை நாம் கவனத்தில் கொண்டிட வேண்டும். எனவே அவராகவே சமுதாயத்திலிருந்து ஏழ்மையை அகற்றிடச் சில கருதுகோள்களை ஊகிக்கவேண்டியிருந்ததென்பதனையும், அவை நடைமுறையில் பயனற்றவை மென்பதனையும் இன்றைய ருஷ்ய, சீனச் சமுகங் காட்டி நிற்கின்றன. "செல்வம்" என்ற கட்டுரையில் ஒரு பகுதியில் பாரதியார் பின்வருமாறு எழுதுகின்றார்.

"முதலாவது இந்தியாவிலுள்ள நிலவான்களும் முதலாளிகளும் ஐரோப்பிய முதலாளிகள் நிலவான்களைப் போல ஏழைகளின் விஷயத்தில் அத்தனை அவமதிப்பும் குரூர முத்தமும் பூண்டோரல்லர். இவர்களுடைய உடமைகளைப் பிடுங்க வேண்டுமென்றால் நியாமாகாது. அதற்கு நம் தேசத்திலுள்ள ஏழைகள் அதிகம் விரும்பவும் மாட்டார்கள். எனவே கொள்ளைகளும, கொலைகளும் சண்டைகளும் பலாத்காரங்களுமில்லாமல் ஏழைகளுடைய பழு தீர்ப்பதற்குரிய வழியைத்தான் நாம் தேடிக் கண்டு பிடித்து அனுஷ்டிக்க முயலவேண்டும். செல்வர்களுடைய உடமைகளைப் பலாத்காரமாகப் பறித்துக் கொள்ள முயலுதல் இந்நாட்டிலே கால்மேற் கூறியபடி பொருந்தவும் செய்யாது சாத்தியமும் இல்லை."

மேலுள்ள பாரதியாரின் கூற்றினை வாசிப்பவர், பாரதியாரின் முரண்பட்ட மனப்போக்கினை வெகு இயல்பாகவே விளங்கிக் கொண்டிட முடியும். பொதுவுடமையினைப் போற்றிப் பாடிடும் பாரதியார் "இவர்களுடைய உடமைகளைப் பிடுங்க வேண்டு மென்றால் நியாயமாகாது. அதற்கு நம் தேசத்திலுள்ள ஏழைகள் அதிகம் விரும்பவும் மாட்டார்கள்" என்று கூறுவது தனியுடமை' ஆதரிப்பதாகுமென்றே எனக் கேட்கலாம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆனால் இன்னுமோரிடத்தில் "செல்வர்களுடைய உடமைகளைப் பலாத்காரமாகப் பறித்துக் கொள்ள முயலுதல் இந்நாட்டிலே நான் மேற் கூறியபடி பொருந்தவும் செய்யாது" என்று கூறுவது மறைமுகமாகக் கூறிநிற்பது தான் எது? செல்வர்களுடைய உடமைகளைப் பலாத்காரமாகப் பறித்துக் கொள்ள முயலுதல் தான் கூடாது. ஆனால் அமைதியான வழியினில் பறித்துக் கொள்ளலாம் என்பதனையல்லவா. ஆரம்பத்தில் செல்வருடைமையைப் பறிப்பது கூடாதென்றவர் பலாத்காரமாகப் பறிப்பதனையே கருதியிருக்க வேண்டும் போல்படுகின்றது. அதனால்தான் 'பிடுங்க' வேண்டுமென்ற சொல்லினைப் பாவித்துள்ளார் போலும். இதே மாதிரியானதொரு தடுமாற்றத்தினை 'தொழிலாளர்' என்ற கட்டுரையிலும் காணக்கூடியதாகவுள்ளது. அக்கட்டுரையில் ஓரிடத்தில் பின்வருமாறு கூறுகின்றார்;

"எனவே இந்தியாவில் முதன்முதலாக தொழிலாளர் கிளர்ச்சி தோன்றியிருக்கும் இந்தச் சமயத்தில் நம்முடைய இனத் தலைவர்கள் முதலாளிகள், தொழிலாளிகள் என்று இருநிறத்தவரையும் ஆதரவுடன் கலந்து புத்தி சொல்லி மனஸ்தாபங்களை ஏறவொட்டாதபடி முளையிலேயே கிள்ளிவிட முயற்சி செய்யவேண்டும். தொழிலாளரை முதலாளிகள் இகழ்ச்சியுடன் கருதி நடத்துவதை உடனே நிறுத்துவதற்குரிய உபாயங்கள் செய்யவேண்டும். ஆரம்பத்திலேயே நாம் இதற்குத் தகுந்த ஏற்பாடுகள் செய்யாவிடின், நாளடைவில் ருஷ்யாவிலுள்ள குழப்பங்களெல்லாம் இங்குவந்து சேர ஹேது உண்டாய் விடும்." இங்கு ஒன்றினைக் கவனிக்கக் கூடியதாகவுள்ளது. 'ருஷ்யாவிலுள்ள குழப்பங்களை'த்தான் எண்ணி அவர் அஞ்சுகின்றாரேயன்றி வேறல்ல. இதே கட்டுரையின் இன்னுமொரு பகுதியில் அவர் பின்வருமாறு கூறுகின்றார்.

"ஆரம்பத்திலேயே நாம் இதற்குத் தகுந்த ஏற்பாடுகள் செய்யாவிடின் நாளடைவில் ருஷ்யாவிலுள்ள குழப்பங்களெல்லாம் இங்கு வந்து சேர ஹேது உண்டாய்விடும். ருஷ்யாவில் சமீபத்திலே அடுக்கடுக்காக நிகழ்ந்து வரும் புரட்சிகளின் காரணத்தால் அவ்விடத்து சைனியங்களில் பெரும்பகுதியார் தொழிற்கட்சியையும் அபேதக் கொள்கைகளையும் சார்ந்தோராய் விட்டனர். இதினின்றும் அங்கு சர்வதிகாரம் தொழிற்கட்சிக்குக் கிடைத்துவிட்டது. தேசத்து நிதியனைத்தையும் சகல ஜனங்களுக்கும் பொதுவாகச் செய்து எல்லோரும் தொழில் செய்து ஜீவிக்கும்படி விதித்திருக்கின்றார்கள். தேசத்துப் பிறந்த ஸர்வ ஜனங்களுக்கும் தேசத்து செல்வம் பொது என்பது உண்மையாய் விடின, ஏழைகள் செல்வர் என்ற வேற்றுமையினால் உண்டாகும் தீமைகள் இல்லாமல் போகும்படி ஸகலரும் தொழில் செய்துதான் ஜீவிக்கவேண்டும் என்ற விதி வழங்குமானால் தேசத்துத் தொழில் மிகவும் அபிவிருத்தியடைந்து ஜனங்களின் ஸௌக்யமும் சுகங்களும் மென்மேலும் மிகுதியுறும் எனவே ருஷ்யாவிலுள்ள அபேவாதிகளுடைய கொள்கைகள் அவ்வளவு தீங்குடையன வல்ல. ஆனால் அவற்றை விளங்கப்படுத்தும் பொருட்டு அவர்கள் நாட்டில் ஏற்படுத்தியிருக்கும் தீராச் சண்டையும் அல்லதுமே தீங்கு தருவனவாம். ருஷ்யக் கொள்கைகள் இப்பொழுது அனுஷ்டிக்கப்படும். ருஷ்யமுறைகளின்படி உலகத்தில் ஸ்தாபனம்பெற்று வெற்றி பெற வேண்டுமானால் அதற்குள்ளே முக்காற்பங்கு ஜனம் கொலையுண்டு மடிந்து போவார்கள். வெளிநாட்டுப் போர் அத்தனை பெரிய விபத்தன்று. நாட்டுக்குள்ளேயே செல்வர்களும், ஏழைகளும் ஒருவரையொருவர் வெடிகுண்டுகளாலும், துப்பாக்கிகளாலும், பீரங்கிகளாலும், தூக்கு மரங்களாலும் கொல்லத் தொடங்குவார்களாயின் அது தீராத தொல்லையாய் விடுமன்றோ?" இவையெல்லாம் தெளிவாக உணர்த்தி நிற்பவைதானென்ன? இவற்றில் காணப்படும் பாரதியாரின் தடுமாற்றமான போக்கினை வெளிப்படுத்தி நிற்பவைதான் யாதோ?

சமுதாயப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ருஷ்யாவின் கோட்பாடுகளை பாரதியார் ஏற்றுக் கொள்கின்றார். ஆனால் அதனை அடைவதற்கு ருஷ்யா கைக்கொள்ளும் ஆயுதப்புரட்சியினையும், பாட்டாளிவர்க்கச் சர்வதிகார் போக்கினையும் தான் கடுமையாகவே எதிர்க்கின்றார். இந்த எதிர்ப்பின் விளைவே அவரது கற்பனாவாத சோஷலிசமான 'ஏழை,பணக்காரன்,' 'தொழிலாளி, முதலாளி' என போரிற்கிடையிலான இணக்கம் பற்றிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கோட்பாடுகள் இதன் காரணமாகவே செ. கணேசலிங்கன் 'பாரதி கண்ட கனவுப் பெண்' என்னும் கட்டுரையில் கூறுவதுபோல் (மேகம், நவம்பர் டிசம்பர் 1982) "பாரதியின் போக்கு இந்திய தேசிய முதலாளிகளின் புரட்சியோடு ஒன்றி நிற்பதுபோல் படுகின்றது"

ஆனால் செ.கணேசலிங்கன் பாரதி இந்திய தேசிய முதலாளிகளின் புரட்சியோடு ஒன்றி நின்றதாகக் கூறுகின்றார் அது தவறு. உண்மையில் பாரதி முதலாளித்துவப் புரட்சியொன்றினை எதிர்பார்த்திடவில்லை என்பதையே; அவரது 'சுதந்திரப் பள்ளு' என்னும் கவிதையும், 'விடுதலை' என்னும் கவிதையும் ' பாரத சமுதாயம் ' என்னும் கவிதையும் புலப்படுத்தி நிற்கின்றன.

அதேசமயம் மானுடத்தின் முழுவிடுதலை இத்தகைய சமுதாய அமைப்புதனை அடைவதோடு மட்டும் நின்றுவிடவில்லை. அதற்கும் மேலாக அகவிடுதலையினைப் பெறுவதன் மூலம், மனிதன் இயற்கையுடன் இணக்கமாக வாழ்வதன் மூலமேயே மானுடத்தின் பிரச்சினைகள் யாவுமே தீரும் என்று கூறுகின்றார். அவரது ' சர்வமத ஸமரசம்' என்னும் கவிதை, 'தாய்ப் பண்பு', 'அன்பு செய்து' முதலான கவிதைகள் இதனை உணர்த்தி நிற்கின்றன.

ஆனால் பாரதியின் இந்த நிலைப்பாடு விரிவாக ஆராயப்பட வேண்டியதொன்று. சரி இனி விடயத்திற்கு வருவோம். பாரதியாரின் போக்கு "இந்திய முதலாளிகளின் புரட்சியோடு ஒன்றியிருப்பது போல் தெரிவதற்குக் காரணம் தான் யாது? இதற்கு விடையை செ.கணேசலிங்கனின் மேற்குறிப்பிட்ட கட்டுரையே கூறிவிடுகின்றது. அதில் செ. க. பின்வருமாறு எழுதுகின்றார்.

"விஞ்ஞான பூர்வமான சோஷலிசத்தைப் பாரதி அறிந்திருக்க வில்லை. சோஷலிச அமைப்பில் சாதி, சமய, பெண்ணடிமைப் பேதங்கள் எப்படி முழுமையாக நீக்கப்படும் என்பதை அவன் தெரிந்திருக்கவில்லை."

இவ்விதமாக மார்க்ஸியக் கோட்பாடுகளைப் பற்றிய பூரண அறிவினை பாரதியார் அடையமுடியாமல் இருந்ததற்கு அன்றைய சூழ்நிலையே காரணம். மார்க்ஸியம் சம்பந்தமான போதிய நூல்கள் அவரது கைக்குக் கிடைக்காததே காரணமாகும். ஆக ' பாரதியின் ' இந்திய முதலாளிகள் புரட்சியோடு ஒன்றியது போல் தோற்றும் போக்கிற்கு பாரதியின் ' மார்க்ஸியம்' பற்றிய பூரண விளக்கமின்மையே காரணம் தவிர வேறெதுவுமல்ல.

"மார்க்ஸிச தத்துவ விளக்கங்களைப் பற்றிப் பூரணமாக அறிந்திருந்த பின்னர் அவர் முதலாளிகள் தொழிலாளர்க் கிடையிலான இணக்கம் பற்றிய கற்பனாவாத சோஷலிசத்தைப் பற்றிக் கூறியிருந்தா ரென்றால் பாரதியார் இந்திய முதலாளிகளின் புரட்சியுடன் ஒன்றியிருந்தாரென்று" செ. கணேலிங்கன் கூறியதுபோல் கூறிவிடலாம்.

ஆனால் பாரதியாரோ 'மார்க்ஸிய தத்துவஞானம் பற்றிய பூரணமான விளக்கமெதனையுமே அறியாத நிலையிலிருந்தார். இந்நிலையில் அவர் வாழ்ந்த இந்தியச் சூழ்நிலைகளின் விளைவாக அவர் வந்தடைந்த தீர்வே அவரது ஏழை, பணக்காரன், முதலாளி, தொழிலாளியிற் கிடையிலான இணக்கம் பற்றிய கற்பனாவாத சோஷலிசக் கோட்பாடாகும்.

இந்நிலையில் பாரதி ஒரு மார்க்ஸியவாதியா என்ற கேள்வியே அர்த்தமற்றது. ஆனால் பாரதியின் மேதமை, அவரது காலகட்டச் சூழலுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில்தான் எத்தனை மகத்தான தென்பது புலப்படும். அதனை விட்டுவிட்டு இன்றைய சூழ்நிலையிலிருந்து கொண்டு அன்றைய காலகட்ட பாரதியினை, செ. கணேசலிங்கன் முதலியோர் அலசுவது போல் அலசுவது பயனற்றதே. உண்மையில் பாரதியார் அன்றைய சூழலில் 'ருஷ்யா'வைப் பற்றிய தனது நோக்கினைத் திருப்பியதும், பெண்களைப்பற்றிய ஆய்வினை நடாத்தியதும், 'கியூசென்' என்ற சீன மாதினைப் பற்றி எழுதியதும், இந்தியத் தத்துவநூல்களை விரிவாக ஆராய்ந்ததும் இவை யாவுமே மகத்தான விஷயங்களாகும். அவர் வாழ்ந்த சூழலில் அந்த அளவிற்கு மீறி அவர் சிந்தித்ததே மாபெரும் அற்புதமெனலாம். இதுவே சரியான நிலையாகப்படுகின்றது.

*வ.ந.கிரிதரன்*

www.tamilarangam.net

# பாலஸ்தீனமும் இஸ்ரேலும்

## 1.புவியியல்

| பாலஸ்தினம் | இஸ்ரேல் |
|---|---|
| தற்பொழுது WEST BANK, GAZA ஆகிய பிரதேசங்களில் வாழ்கிறார்கள். இன்று முக்கிய பிரச்சனைகளுக்குரிய இடமாகிய ஜெருசலம் கிழக்கு பகுதி பாலஸ்தீனத்தையும் மேற்கு பகுதி இஸ்ரேலையும் சேரலாம். | எகிப்து, யோர்மன், சிரியா,லெபனுன் ஆகிய நாடுகளை எல்லையாகக் கொண்டது. இஸ்ரேலுக்கான குடிநீரில் மூன்றில ஒரு பகுதி வெஸ்ட பாங்கிலிருந்து பெற்ப்படுகி றது. |

## 2.பிரதான மொழி

| | |
|---|---|
| அராபிய மொழி (ARABIC) | யூத மொழி (HEBREW) |

## 3.சனத்தொகை

| | |
|---|---|
| பிரதானமாக அராபியக் குடிகளும், சில யூத குடிகளும் உள்ளனர். மொத்த 61 இலட்சத்தில் 23இலட்சம அராபியமொழி பேசுவோர். | 46 இலட்சம் பாலஸ்தீனிய பகு திகளில் 15 இலட்சம் ஆகும். ஏனைய 38 இலட்சம் யூதர்களாரின் பிறப்பு விகிதம் அதிகரிப்பதால் 2000 ஆண்டள வில் 45% அராபியர்களையும் 55% யூதர்க ளாவும் வரலாம். |

## 4. மதம்.

| | |
|---|---|
| பிரதான மதமாக முஸ்லீமும், கிறி ஸ்தவர்களும், சில யூதர்களும் உள் ளனர். | யூதம், சில கிறிஸ்தவர்கள், முஸ் லீம்கள், DRUZE ஆகிய மதத்தவர் களும் உள்ளனர். (பாலஸ்தீனியக் குடியிரு ப்பு பகுதிகள் தவிர்ந்த) |

## 5. அரசியல்.

| | |
|---|---|
| | பாரளுமன்ற ஜனநாயக 120தொகுதிகள். பாராளுமன்றம் KNESSET என என அழைக்கப்படும். லிக்குட்(LIKUD)இ ஆகியன பிரதான கட்சிகளாகும். |

## 6. வேலை வாய்ப்பு.

| | |
|---|---|
| 62% சாதாரண தொழிலாளிகள்.<br>20% வேலையற்றோர். | 19% சாதாரண தொழிலாளிகள்.<br>8.3% வேலையற்றோர். |

## 7. வெளிநாட்டு உதவி

| | |
|---|---|
| அராபிய நாடுகள் பிரதான உதவியை வழங்குகின்றன. | 1987வரை $ 3.6 பில்லியன (3600 இலட்சம்) ஐக்கிய அமெரிக்கா அளித்தது. இதில் $1.8 பில்லியன் இரா ணுவ உதவியாகவும்,$ 1.2 பில்லியன பொருளாதார உதவி. 1986 ல் ஐக்கிய அமெரிக்காவின் |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வெளிநாட்டு உதவிக்கான திட்டமிடப்பட்ட பணத்தில் 25% ஐ இஸ்ரேல் பெற்றுக் கொண்டது. 45 ஆபிரிக்க நாடுகள் 7% ஐ பெற்றுக் கொண்டன.

8.அகதிகள்.

| | |
|---|---|
| யோர்மன். | 845, 542 |
| வெஸ்ட் பாங். | 373, 586 |
| காசா. | 445, 397 |
| லெபனுன். | 278, 609 |
| சிரியா. | 257, 989 |
| மொத்தம் | 2201, 123 |

(1987ன் தரவின் படி)

## பாலஸ்தீனியம் இஸ்ரேல் வரலாறு ஓர் பார்வை

* கி. மு 70ம் ஆண்டளவில் ரோமர்கள் ஜெருசலேத்தை ஆக்கிரமித்த பொழுது யூதர்கள் பாலஸ்தீனத்தைவிட்டு புகலிடம் தேடத் தொடங்கினுர்கள். இறுதியாக 1896 ம் ஆண்டளவில் நூற்றுக் கணக்கானேர் ரஷ்யாவில் கொல்லப்பட்டார்கள்.

* இவ்வாறு நாடுவிட்டு நாடு திரிந்தோருக்கு பாலஸ்தீனம் "ஓர் நிலம் இல்லாமல், நிலம் இல்லாமல் நிலத்தை தேடும் மக்களுக்காக" எனப்பட்டது. இவர்கள் தமது கனவை நனவாக்கத் தொடங்கினுர்கள். இவர்கள் அங்கு கூட்டுப்பண்ணைகளை அமைத்தார்கள். ஆனுல் இறுதியில் இவர்கள் குடியேறிய இடத்தில் வாழ்ந்தோருக்கும் இவர்களுக்குமிடையில் கலவரங்கள் மூளத் தொடங்கியது. இவர்கள் வெளியேற்றப்பட்டார்கள்.

* 1914 1918 ன் போதின் பின்னர் BALFOUR மாநாடு யூதர்களுக்கு பாலஸ்தீனியத்தில் ஓர் தனி நாடு தருவதாக உறுதியளித்தது. 1920ல் நேச நாடுகள் பாலஸ்தீனியத்தில் பிரித்தானியாவின் அதிகாரத்தை அங்கீகரித்தது.

* 1930றகும் 1940க்கும் இடைப்பட்ட காலத்தில் பாலஸ்தீனியத்தில் யூதர்களின் எண்ணிக்கை அதிகரித்தது. குறிப்பாக நாசிகளின் வெறியாட்டத்தின் பின்னர் இது மிகவும் அதிகரித்தது. அராபிய நாடுகள் பிரிட்டனுக்கு எதிராக தமது கடுமையான ஆட்சேபத்தை தெரிவித்தனர். 1947ல் ஐக்கிய நாடுகள் பாலஸ்தீனத்தை இரு பகுதிகளாக பிரிக்கும் ஆலோசனையை முன்வைத்தது. இதை பாலஸ்தீனியர்கள் நிராகரித்தார்கள். அவர்கள் தமது நாடு இரண்டாக பிரிவதை விரும்பவில்லை.

* 1948 ம் ஆண்டு BEN GURION ஒரு தலைப்பட்சமாக இஸ்ரேலை தனிநாடாக அறிவித்தார். இதற்கிடையில் யூதர்கள் பாலஸ்தீனியர்களை அழிக்கத் தொடங்கினர். பாலஸ்தீனியர்கள் வேறு நாடுகளுக்குச் செல்லத் தொடங்கினுர்கள். இவரது தனி நாட்டு அறிவித்தலையடுத்து அராபிய நாடுகளின் இராணுவம் பாலஸ்தீனியத்துக்குள் புகுந்தது. எனினும் இவர்கள் தோற்கடிக்கப்பட்டார்கள். பாலஸ்தீனியர்கள் வெஸ்டபாங், காசா ஆகிய பகுதிகளில் குடியேறினுர்கள். இதில் காசா எகிப்தின் எல்லையில் அமைந்துள்ளது.

* புதிய இஸ்ரேல் தனதுறவை மேற்கு நாடுகளுடன் அதிகரிக்கத் தொடங்கியது. அதேசமயம் சோவியத் யூனியனுடன் அராபிய நாடுகள் தமது நட்பை வளர்க்கத் தொடங்கினர்.

* 1956ல் எகிப்தின் மீதான ஆக்கிரமிப்பை பிரித்தானியா உற்சாகப்படுத்தியது. அமெரிக் காவின் பார்வை இக்காலகட்டத்தில் இஸ்ரேலின் மீது விழத் தொடங்கியது. இஸ்ரேலும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அமெரிக்காவும் தமது உறவை உறுதியாக்கின்றார்கள். உண்மையில் இது சோவியத் யூனியனுக்கு எதிரான ஒர் நடடிக்கையாகவும் அமைந்தது.

* இஸ்ரேலில் வசிக்கும் 160,000 பாலஸ்தீனியர்கள் தமது பிரதேசத்தின் 4.5 பகுதியை இழந்த பின்னர் 1948ம் ஆண்டளவில் புதிய சட்டங்கள் மூலம் இரண்டாந்தர பிரஜைகள் ஆக்கப்பட்டார்கள். இவர்களது வாழ்க்கைத் தரம் ஏனைய யூதர்களைவிட 40% குறைவானது. இவர்கள் யூத சிறிய, பெரிய நகரங்களில் வேலைக்கு வைக்கப்பட்டனர்.

* பாலஸ்தீனியர்களின் வீழ்ச்சி புதிய பாலஸ்தீனத்திற்கான அத்தியத்தை தொடங்கிவைத்தது. பாலஸ்தீனிய தேசிய அமைப்பின் (PALESTINE NATIONAL COUNCIL) முதலாவது கூட்டம் 1946ல் கூட்டப்பட்டது. இவர்கள் பாலஸ்தீனிய விடுதலை இயக்கத்தை (PALESTINE LIBERATION ORGANISATION - P.L.O.) உருவாக்கினர்கள். இவர்கள் ஆயுதப் போரராட்டத்தின் மூலம் தமது நாட்டை மீளப்பெறுவது என முடிவெடுத்தனர்.

* 1967ல் எகிப்தின் மீதான 6 நாட்கள் போரின் பின்னர் வெஸ்ட் பாங், காசா ஆகிய பகுதிகளில் வாழும் பாலஸ்தீனியர்களுக்கு எதிராக புதிய தடைகள் கொண்டு வரப்பட்டன. குறிப்பாக இவர்கள் வேறு நகரங்களுக்கு செல்ல அனுமதி பெறவேண்டும்.

* 1967 பாலஸ்தீனியர்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டது.

* 1977ல் "பெகின்" ஆட்சியில் பாலஸ்தீனிய பிரதேசங்களில் யூதர்களின் குடியேற்றத் திட்டங்கள் அதிகரிக்கத் தொடங்கின. இது உண்மையில் ஓர் திட்டமிடப்பட்ட செயலாகும். இதன் மூலம் பாலஸ்தீனியர்களை அகற்றுவது அல்லது அவர்களை பலவீனப்படுத்துவது என்ற நோக்கத்துடன் திட்டமிடப்பட்டது. ஆனல் 1982ல் நிலைமைகள் சற்று மாறி பாலஸ்தீனியர்கள் யூத நகரங்களில் போய்வரக்கூடியதாகவும், வேலை பெறக்கூடியதாகவும் இருந்தது.

* 1987ல் பாலஸ்தீனியர்களின் எழுச்சி வளரத் தொடங்கியது. பாலஸ்தீனியர்களின் தீவிர எழுச்சி, இஸ்ரேலுக்குள் உள்நாட்டு பிரச்சினையை கூர்மைப்படுத்தியது. ஆளும் லிக்குட் கட்சிக்கு எதிராக சிறுபான்மை எதிர்க்கட்சி குரல் கொடுக்கத் தொடங்கியது. பாலஸ்தீனிய குடியிருப்புக்களை விட்டு வெளியேறுமாறு வலியுறுத்தியது. தேசிய உணர்வு பாலஸ்தீனியர்களுக்கும் இஸ்ரேலியர்களுக்குமிடையில் வளரத் தொடங்கியது.

* 1988ன் நடுப்பகுதியில் 663 பேர் தீவிர எழுச்சிகள் காரணமாக கைது செய்யப்பட்டார்கள்.

* 1990ம் ஆண்டளவில் குவைத்தில் தனது படைகளை விட்டு நாட்டை ஆக்கிரமித்ததன் மூலம் ஈராக் அமெரிக்காவிற்கு எதிரான பகையைத் தொடங்கியது.

* 1991ன் ஆரம்பத்தில் ஆரம்பமான அமெரிக்க ஈராக் யுத்தத்தில் பாலஸ்தீனிய பிரச்சினையை ஈராக் தனக்கு சாதகமாக பயன்படுத்தியது.

* 40 ஆண்டுகளில் முதற்தடவையாக அராபிய நாடு ஒன்று தனது ஏவுகணைகளை இஸ்ரேல் மீது ஏவியது. இந்நாடு ஈராக் ஆகும்.

(புரட்டாதி மாத NEW INTERNATIONALIST(1989) சஞ்சிகையில் இருந்து முக்கிய தகவல்கள் பெறப்பட்டன.)

*ரேவதி*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சின்னத் துப்பாக்கி

குமார் மூர்த்தி



குனிந்து குனிந்து மண்ணை வெட்டி வெளியே எறிந்து கொண்டிருந்தான் மணிவண்ணன். வியர்வைத்துளிகள் ஒன்றிரண்டு மண்வெட்டிப் பிடியிலும் வெட்டிய மண்ணிலுமாக விழுந்து கரைந்தது. வெளியே வெய்யில் எரித்துக் கொண்டிருந்தாலும், எந்த நோக்கமும் இல்லாமல் அலைந்து கொண்டிருக்கும் மேகங்கள் கொஞ்ச நேரம் நிழலைக் கொடுப்பது அவனுக்கு பெரிய ஆறுதலாக இருந்தது. வயதுக்கு அதன் வளர்ச்சி போதுமானதாகத்தான் இருந்தது. இன்னும் அவன் நீளக்களிசான் போட்டுக் கொள்ளத் தொடங்கவில்லை. போடுவதற்கு ஆசையில்லாமல் என்ன? இதற்காக அம்மா சிபாரிசு பண்ணியும்கூட அடுத்த வருடம் பத்தாம் வகுப்பில் போட்டுக் கொள்ளலாம் என்று அப்பா கண்டிப்பாகச் சொல்லிவிட்டார். அப்பா எப்போதும் சரியானதையே செய்வார் என்று வீட்டில் இருந்தவர்களுக்கெல்லாம் இருந்த நம்பிக்கை போலவே அவனும் இருந்துவிட்டான். மரவேரில்ப்பட்டு மண்வெட்டி "ணங்" என்று எகிறிக் குதித்தது. தடுமாறி விழப் போனவன் சுதாகரித்துக் கொண்டான். தண்ணீர் தாகத்தினால் வாய்க்குள் எச்சில் களிபோல் திரண்டு திரண்டு வந்தது. கண்ணீரா, வியர்வைத் துளிகளா என்று பிரித்து அறிய முடியாதபடி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அரும்பு மீசையூடாக வாய்க்குள் விழும் ஒரிரு துளிகள் உப்புக் கரித்தன.

என்னைக் கொல்லப் போகிறார்கள். நான் சாகப்போகிறேன். இதோ! இந்தக் குளியில் தான் என்னைப் புதைக்கிறார்கள் என்று எண்ணம் மறுபடியும் வந்ததும் ஓ! வென்று கத்தவேண்டும் போல் இருந்தது. ஆனால் அது ஒரு கணநேரத்தில் கரைந்தது. சாவென்றால் என்ன? செத்தபின் எப்படி இருப்பேன், மேல்லோகத்தில் என்னவெல்லாம் கிடைக்கும், தாத்தாவும், பெரியம்மாவும் இருப்பார்களா? என்ற ஆராய்ச்சியில் எங்கேயோ தொலைதூரம் போய்விட்டான்.

தலையை லேசாக நிமிர்த்திப் பார்க்கிறான். மண் அள்ளிப் போடும் திசைக்கு எதிர்த் திசையில் இப்போதும் முரளி அந்த சின்னத் துப்பாக்கியை இறுக்கிப் பிடித்தபடி பக்கத்தில் இருந்தவர்களுடன் சிரித்துக் கதைத்துக் கொண்டிருந்தான். ஆகா! எவ்வளவு அழகான துப்பாக்கி. கருகரு வென்ற அதன் பிடியும் கையடக்கம் !

மீண்டும் அவன் எண்ணங்கள் துப்பாக்கியைச் சுற்றி வட்டமடிக்க தொடங்கிவிட்டன. அந்தத் துப்பாக்கியை சினிமாவில் பார்த்து ஏங்கிய காலம், நல்லூர்த் திருவிழாவின் போது பொம்மைத் துப்பாக்கி வாங்கித்தரச் சொல்லி அப்பாவிடம் கேட்டு, "நறுக்"கென்று குட்டு வாங்கியது. பின் அண்ணாவுக்கு மாமா வாங்கிக் கொடுத்த துப்பாக்கியை திருடி பாடசாலைக்கு கொண்டு போனது. அண்ணனிடம் உதைபட்டது. எல்லாம் திரைப்படம்போல் வந்துபோனது. ஆனால் அவன் உண்மைத் துப்பாக்கியை நேரில்ப் பார்த்த நாள். அது நடந்து எத்தனை நாட்கள் ஆகிவிட்டன; இருந்தும் அதை எப்படி மறக்க முடியும். அவன் இலட்சியக் கனவின் ஆரம்ப நாளல்லவா?

தெருவை அடைத்துக் கொண்டு வியர்க்க வியர்க்க பந்து விளையாடிக் கொண்டிருந்த அந்த பொன்மயமான மாலைப் பொழுதில்த்தான் சைக்கிளில் வந்த வாலிபன் சாரத்திற்கு வெளியில் செருகியிருந்த அந்த சின்னத்துப்பாக்கியைக் கண்டான் மணிவண்ணன். மணிவண்ணன்தான் முதலில் கண்டவன், கண்டவுடன் திகைப்பூண்டில் மிதித்து விட்டவன்போல் உடம்பெல்லாம் நடுங்கியது. அடுத்த கணம் வெறிபிடித்தவன்போல் சயிக்கிள் வேகத்தைவிட அவனின் வேகம் அதிகமானதாகவேயிருந்தது. ஆனால் சயிக்கிள் வாலிபனோ இவனைக் கவனித்ததாக தெரியவில்லை. இதோ! அவனின் இலட்சியக் கனவுக்கும் அவனுக்கும் பத்தடி தூரம் ஆகிவிட்டது. அது குறுகி ஆறடி ஐந்தடி என்று வந்திருக்க வேண்டும்.அவன் சர்வநாடியும் கண்களுக்கூடாக அந்தக் கறுத்த சின்னத் துப்பாக்கியை ஸ்பரிசித்த வேளை;கால்ப்பெருவிரல் இரண்டாப் பிள ந்தது போல் ஒரு உணர்வு சட். வெறுங்கல்லு சனியன், சபித்துக் கொண்டே காலைப் பார்த்தான். துரத்தல் நாடகம் ஒரு வழியாக முடிவுக்கு வந்ததையிட்டு அவனுக்கு மகாகோபம். அந்த துப்பாக்கி அவன் கையில் இருந்தால் அந்த கல்லையே சுட்டுத் தள்ளியிருப்பான். ஆனால் துப்பாக்கி கண்காணாத தூரம் போயே! போய்விட்டது. அப்புறம் என்ன பள்ளிக்கூடத்தில் வகுப்பில் துப்பாக்கிதான் பிரதானமாக இடம் பிடிக்கும் கதாநாயகன். ஒருநாளைக்கு ஒரு தரமாவது துப்பாக்கிக் கதை கதைக்காவிட்டால் அவனுக்கு மண்டையே வெடித்து விடும்போல் இருக்கும், இப்படி எத்தனை நாள் அவஸ்தைப்பபட்டிருப்பான் என்பது பற்றி சொல்லவே முடியாது. ஆனால் அந்த துப்பாக்கியைக் கண்ட நாள்முதல் எதையோ பறி கொடுத்தவன் போல....! வாழ்க்கையில் இருந்த எல்லாவற்றையும் இழந்து விட்டவன் போல எப்போதும் மந்தமாகவே இருந்தான். அவன் கனவில் "தெருவில் எல்லாம் துப்பாக்கிகள் கிடப்பது மாதிரியும். மாடும், ஆடும் அதை ஏறிமிதித்துக் கொண்டு போவது மாதிரியும்; நாயும், பூனையும் கடித்துக் கடித்து விளையாடுவது மாதிரியும். அதைப் பார்க்கும் அவனுக்கு தாங்கமுடியாத வேதனையா யிருக்கும். ஆனால் அப்பாவோ சற்றும் இரக்கமில்லாமல் கைகட்டிக் கொண்டு வேடிக்கை பார்ப்பார்!! பிறிதொரு கனவில் ஆளுக்கொரு துப்பாக்கி எல்லோரிடமும் இருக்கும் ஆனால் இவனிடம் இருக்காது. எல்லோரும் இந்தா! என்று நீட்டுவார்கள், ஆனால் குடுக்காமல் ஏமாற்றுவார்கள். அவனுக்கு அழுகை அழுகையாக வரும்!

எப்படியோ! அந்தச் சின்னத் துப்பாக்கி அவனை நன்றாகவே ஆக்கிரமித்து விட்டிருந்தது. அவன் துப்பாக்கி பற்றி சிந்திக்காமல் இருந்தால் அவன் அவனையே சந்தேகிக்கும்படியாக ஆகிவிட்டது. சர்வமும் அதுதான். அது இருந்தால் சகலமும் காரிய சித்தியமாகும், அதை ஆட்காட்டி விரலுக்குள் போட்டு சுழற்றி பெருவிரலால் பிடித்தால்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்று கற்பனை பண்ணும்போதே தேக்கமரத்துக்கும், தென்னைமரத்துக்கும் மேலாக வெண் பஞ்சு மேகத்தோடு மிதப்பது போல இருக்கும் அவனுக்கு!

எப்போதென்று சரியாக சொல்ல முடியாத ஞாபகமறதியாகிப் போன ஒரு நாள் அவன் பாடசாலைக்குப் போகும்போது அதிகாலையிலேயே மாதா கோவில் சுவரில் ஒட்டியிருந்த அந்த சுவரொட்டி அவனைத் தடுத்து நிறுத்தியது. வழவழப்பான வண்ண வண்ணப்படத்தில் வாட்ட சாட்டமான வாலிபன். இரண்டு கைகளாலும் சின்னத் துப்பாக்கியைப் பிடித்து குறிபார்த்துக் கொண்டிருந்தான். தன்னையே குறிபார்ப்பது போலப் பட்டதும் ஒரு கணம் திடுக்குற்று சற்று விலகிக் கொண்டான். பின்தன் அறியாமையையும், மடத்தனத்தையும் நினைத்து மனதுக்குள் வெட்கப்பட்டுக் கொண்டான். அந்தத் துப்பா க்கியையும், அதைப் பிடித்திருந்த கைகளை யும் விட்டு அவன் கண்கள் நகரவேயில்லை. வீடு, பாடசாலை சூழல் எல்லாம் மறந்து அந்த சுவரொட்டி வாலிபனாகவே பாவனை செய்து கொண்டான் தன்னை. கால்வலித்தபோது மாற்றி மாற்றி விட்டுக் கொண்டது, உடம்பின் இச்சையிற் செயல் என்றுதான் சொல்ல வேண்டும். சுவரொட்டிக்கு கீழே எழுதியிருந்த வசனங்களைக்கூட அவன் பார்க்கவில்லை. எப்போதுமே அவன் அதைப் பார்ப்பதில்லை. திடீரென காதில் ஏற்பட்ட வலிதான், அவனை இந்த உலகத்துக்கே கொண்டுவந்ததெனலாம். அந்தக் காது முறுக்கலும்கூட அவனுக்கு பரிச்சயமானது ஒன்றுதான். அது வகுப்பு மாஸ்ரரினுடையது. காதலியைப் பிரிந்த காதலன்போல் அன்று அவன் போன கோலம் பாடசாலை முடியும் வரைக்கும் அவன் தவித்த தவிப்பு அதை மறுபடியும் பார்ப்பதற்கு அவனிடம் இருந்த துடிப்பு எல்லாமே ஒரு கணத்தில் தவிடு பொடியாகிவிட்டது. யாரோ பாபிகள் சாணி அபிஷேகம் செய்து அவனை ஏமாற்றி விட்டிருந்தார்கள். ஆனால் அவன் உள்ளத்தில் எரியும் கொழுந்தை அவர்களால் அணை க்க முடியுமா? உலகம் எவ்வளவு, வஞ்சகத்தனமானதென்பதை அன்று அவன் உணர்ந்து தானிருந்தான். தன்னை வஞ்சிப்பதற்காகத்தான் இந்த சாணித் திருவிளையாடல் நடந்திரு க்கிறதென்பதை அவன் திட்டவட்டமாகவே உறுதி செய்துவிட்டான். எங்கெங்கேயாவான தேடல் முயற்சிகள், பரிமாற்றங்கள் எல்லாம் சேர்ந்து அந்தத் துப்பாக்கி வைத்திருப்பவனிடம் அறிமுகமாக்கியது. அந்தத் துப்பாக்கியை அவன் கையில் வாங்கியதும் அந்த இரும்பைப் போலவே அவனும் ஒரு கணம் ஜில்லிட்டுப் போனுன். கண்கள் பளபளவென்று ஒளியைக் கக்கி, மூச்சு விடுவதே ஒரு ஆனந்தமாக...! தன்னைப் போல் தன்னைச் சுற்றியுள்ள பொருள்கள் அனைத்தும் சந்தோஷமாக இருப்பதாக, தன்னைப் பார்த்து எல்லாம் பணிந்து வணங்கிக் கொண்டிருப்பதாக...! இவர்கள் எல்லாரையும்விட ஆயிரம் மடங்கு பெரிய பலசாலியாக தான் இருப்பதாகவும், அவன் சிறகடித்தான்.

வீட்டுக்கு வந்தபோது அப்பா ருத்தரதாண்டவம் ஆடினுர். அவன் ஒரு நமட்டுச் சிரிப்புடன் குசினிக்குள் சென்றுவிட்டான். இரண்டொரு நாளில் அப்பா அடங்கி விட்டார். அவர் அடங்கினுரா? அல்லது அடக்கினுர்களா? என்பதில் அவன் அவ்வளவாக அக்கறை கொள்ளவில்லை. ஆனுல் அந்தச் சாசுவதமான பொருள் இருந்தால் எந்தப் பெரிய எதிரியும் அடங்கிப் போவான் என்று கண்முன்னே நிருபணம் ஆகியவுடன் அந்தப் பொருளின் மேல் அவனுக்கு இன்னும் வாஞ்சை கூடியது. அது அவனின் எல்லா முமே ஆகிவிட்டதோடு உலகத்தின் எல்லாமுமே ஆகிவிட்டதோடு உலகத்தின் எல்லா முமே அதுவாகி விட்டதாக அவன் நிச்சயித்துக் கொண்டான்.

"டேய் கெதியாய் வெட்டடா?" என்ற குரல் அவன் எண்ணத்தையெல்லாம் மீண்டும் குழிக்குள் கொண்டு வந்தது. சாகப்போகிறமே என்கிற நினைப்பு மறுபடியும் வந்தவுடன் துக்கம் தொண்டையை அடைத்தது. சிரிப்புக் கலந்த குரலில்த்தான் இப்போது முரளி சொன்னுன் என்பதை நினைத்தவுடன் மணிவண்ணனுக்கு கொஞ்சம் தெம்பு வந்தது. முரளி நல்ல பெடியன் என்னை ஒன்றும் செய்யமாட்டான், என்னை வெருட்டுவதற்குத்தான் இப்படிச் செய்கிறன், பின் விட்டுவிடுவான் என்று அவன் மனம் ஒரு முறை பேதலித்து ஆசுவாசப்படுத்திக் கொண்டது.அவனுக்கு முர ளியை நீண்ட நாட்களாகத் தெரியும். நெருங்கிப் பழகாவிட்டாலும் அடுத்தடுத்த வகுப்புத் தான். கன்ரீனிலும்,லைபிறறியிலும், பிளேகிறவுன்டிலும் சிரித்து ஒரிரு வார்த்தைகள் கதைப்பதுண்டு. ஆனுல் பக்கத்தில் நிற்பவர்கள் கொஞ்சம் முரட்டுத்தனமாய், முன்பின் தெரியாதவர்கள். சிவா, கரி என்று பேச்சுவாக்கில் காதில்

www.tamilarangam.net

விழுந்தது மட்டும் ஞாபகம். ஆனால் அவர்களிருவரும் நீளமான துப்பாக்கி வைத்திருக்கின்றார்கள். ஏதேதோ பேசிக் கொள்கிறார்கள். துரோகி, கைக்கூலி, எதிர்ப்புரட்சிக்காரன் என்று அடுக்கடுக்காய்ச் சொல்லிக் கதைத்துக் கொண்டார்கள். ஆனால் மணிவண்ணனுக்கு இது அவ்வளவாக விளங்கவில்லை. தனக்கும் இதுக்கும் சம்பந்தமில்லை என்பது போல அவன் மனம் மீண்டும் சின்னத்துப்பாக்கியை நோக்கியே தாவியது.

பசியும், தாகமும், களைப்பும் மேலிட மணிவண்ணன் அண்ணாந்து கெஞ்சுபவனைப போல் அவர்களைப் பார்த்தான். அவன் கண்கள் பஞ்சடைந்தது போல் வெளிறி ஓரங்களில் நீர்திரையிட்டது. முழங் கால்களும் கொஞ்சமாக மண்டியிட்டன, கைகள் இரண்டையும் கூப்பி தண்ணீர் கேட்கும் பாவனை காட்டியது. வாய் ஏங்கிக் காணக்கூடாத காட்சியைக் கண்டது போல் கண்கள் மிரட்சியுடன் சுற்றிச் சுற்றிப் பார்த்தது. அதே நேரத்தில் முரளியின் கையிலிருந்த சின்னத் துப்பாக்கி அந்த வண்ண ப்படத்தில் இருந்ததுபோல் அவனுக்கு நேராக உயர்ந்தது. முன்னையைப்போல் சற்றுத் தள்ளிக்கொள்ள எத்தனித்தபோது அந்த சின்ன துப்பாக்கி சின்னதாய்ச் சீறியது. குழிக்குள் இருந்து "அம்மா" என்றதொரு சின்னக்குரல் குழியை விட்டு மேலெழும்பி மரத்தின் இலையைத் தொட்ட போது மரங்கள் அதைப் பத்திரப்படுத்திக் கொண்டன.

● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ●

3ம் பக்க தொடர்ச்சி......

பிளவுபடுத்தும் சக்திகளுக்கும் நிதி யளிப்பதும் அவர்களே.

மேலும் நிதி தரும் ஸ்தாபனங்களாயும், ஆயுத விற்பனையாளர்களாயும் காட்சிய ளிக்கும் இவர்கள் மறுநாள் அமைதி பாதுகாப்பவர்களாயும் காட்சியளிக்கிறார்கள். ஆப்கானிஸ்தான், அங்கோலா, லெபனான், ஈராக் போன்ற நாடுகளிலும் இவ்விதமான அணுகுமுறையை கையாண்டார்கள். நாங்கள் இப்படியான நாடுகளில் நடக்கும் சம்பவங்களில் இருந்து பொருத்தமான படிப்பினைகளை பெற்றுக் கொள்ள வேண்டும்.

இந்திய அரசியல் வாழ்வு வன்முறை மயப்படுத்தப்பட்டதும், அதன் தரம் குறைக்கப்பட்டதும் சஞ்சய் காந்தி மற்றும் அந்துலே போன்றவர்களுடன் தொடங்கி இன்றைய தேவிலால், சவுத்தாலா வரை வந்துள்ளது. இந்த செயல்பாடு பற்றி நிறைய உதாரணங்களைக் கொடுக்கமுடியும். இந்தச் செயற்பாட்டின் மூலம் மக்கள் தமது அடிப்படை பிரச்சினைகளுக்குக் தீர்வு காணமுடியாமையும் அவர்கள் தூரத்தே வைக்கப்பட்டிருக்கும் நிலைமையையுமே நாம் இங்கு கவனிக்க வேண்டிய முக்கிய விடயங்களாகும். உதாரணமாக இந்திரா காந்தி படுகொலை செய்யபடமால் இருந்திருப்பாரானால் 1984 தேர்தலில் அவர் தோற்கடிக்கப்பட்டிருப்பார் என்பதை எல்லா அரசியல் ஆய்வாளர்களும் ஒப்புக் கொள்கின்றனர். மக்கள் தாம் தீர்ப்பதற்கு பிரச்சினைகளிலிருந்து கவனத்தை அவரது படுகொலை திசைதிருப்பி விட்டது. பதிலாக ராஜீவ் காந்தி, வி.பி.சிங், சந்திரசேகரின் ஆட்சியின் கீழ் 6வருடங்கள் வேதனைப்பட வேண்டி ஏற்பட்டதுடன் இந்திரா காந்தி தொடக்கிவிட்ட அரசியல் பொருளாதார கொள்கைகள் தங்குதடையின்றி தொடர்ந் தன. அதேமாதிரியான நிலைமை இன்று உருவாகியுள்ளது. கடந்த பாராளுமன்றத தில் பிரதிநிதித்துவம் பெற்றிருந்த அனைத்து அரசியல் கட்சிகளையும் மக்கள் நிராகரிப பதற்கு தயராக இருந்தனர் என்பதற்கான தேர்தலுக்கு முன்னர் தென்பட்டன. எந்தவொரு கட்சியும் அறுதிப் பெரும்பான்மை பெறக்கூடிய வாய்ப்பு இருக்கவில்லை.

ராஜீவ் கொலை இவை எல்லாவற்றையும் மாற்றிவிட்டது. இந்திரா காங்கிரசுக்கு சார்பாக அனுதாபத்தை உருவாக்க எல்லாவிதமான முயற்சிகளும் உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. வல்லரசுகள் கூட இப்பிரச்சாரத்துக்கு உதவி செய்து வருகின்றன. இந்திரா காங்கிரசோ, ஏனைய கட்சிகளோ மக்களின் உண்மையான பிரச்சினைகளை கடந்த காலத்தில் எவ்வாறு தீர்த்தனவோ! அல்லது எதிர்காலத்தில் எவ்வாறு தீர்க்க இருக்கின்றனவோ என்ற அடிப்படையில் இன்றி வெறும் அனுதாபத்தின் அடிப்படையில் வாக்குகளை சேகரிக்க முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

தொடர்ச்சி 28ம் பக்கம்

www.tamilarangam.net

# சிங்கள சமூகம்; பௌத்த சிங்கள இனவாதக் குழியிலிருந்து மீட்கப்படும் வரை சிங்கள தமிழ் உழைக்கும் மக்களின் ஒற்றுமை சாத்தியமில்லை. தவிர்க்கமுடியாமல் தமிழ் மக்களின் தனிநாட்டுக் கோரிக்கைப் போராட்டமே இதைச் சாதிக்கமுடியும்.

* முதலாவது பகுதி

## காலனித்துவ எதிர்ப்பும் சிங்கள பௌத்தவாதமும்

* பிரிட்டிஷ் ஆட்சி இலங்கையை ஓர் பெருந்தோட்ட பொருளாதாரமாக மாற்றியமைத்ததால் சில சமூக மாற்றங்கள் ஏற்பட்டன. முதலாவது பொருளாதார ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த தேயிலை, றப்பர் உற்பத்தியின் பெரும்பகுதி, பெருவர்த்தக நிலையங்களின் பெரும்பகுதி வங்கிகள் அனைத்தும் வெள்ளைக்காரர்களின் கைகளின கட்டுப்பாட்டிலிருந்தன. மேல்தட்டு இலங்கையர்களும் பெருந்தோட்டங்களின் உடமையாளர்களாய் இருந்தன. தென்னைப் பெருந்தோட்டங்கள் உள்நாட்டவர் கைகளிலேயே இருந்தன. இந்தச் சிறிய தொகையினரான இலங்கையரின் வர்க்க நலன்கள் ஆட்சியாளர்களின் நலன்களுடன் இணைந்திருந்தன. வெளிநாட்டு வர்த்தகத்தின் ஒரு பகுதியை பிரிட்டிஷ் காலனியர் வேரூன்றி இருந்த இந்திய பெருவர்த்தக நிறுவனங்கள் கட்டுப்படுத் தின. மொத்தத்தில் பொருளாதாரத்தின் முக்கிய கேந்திரங்கள் வெள்ளையர், ஒரு சில இந்தியர், ஒரு சில இலங்கையர் கைகளில் இருந்தன. இவர்கள் அனைவரும் வர்க்க நலன்களால் ஒன்றிணைந்திருந்தனர்.

* இரண்டாம் தரமான சிறிய அளவிலான பொருளாதாரச் செயற்பாடுகளே உள்நாட்டவர்களுக்கு மிஞ்சி இருந்தன. இவை பெருமளவிற்கு உள்நாட்டு வர்த்தகம் சிறிய பண்ட உற்பத்தி சார்ந்தவைகளாய் இருந்தன. இத்துறைகளில் இலங்கையர்களின் மிதமிஞ்சிய போட்டி ஆரம்பித்தது. இங்கு குறிப்பாக உள்நாட்டு சிறு வியாபாரத் துறை யில் தமிழர்களும், முஸ்லீம்களும் பரவலாக ஈடுபட்டிருந்தனர். இவர்களுக்கெதிராக சிங்கள வியாபாரிகள் போட்டியிட வேண்டியிருந்தது. முஸ்லீம் வியாபாரிகள் கிராமப்புறத்துக்கும், நகரத்துக்குமிடையே யுள்ள வர்த்தகத்தில் குறிப்பிடத்தகுந்த பங்கு வகித்தனர். இந்தியச் சிறிய வர்த்தகர்களும், செட்டியார்களும் வட்டிக்குப் பணம் கொடுப்பதில் ஈடுபட்டிருப்பதை குறிப்பிடவேண்டும்.

* காலனித்துவ அரச சேவையின் பல மட்டங்களிலும் குறிப்பான லிகிதர்கள், நிர்வாக உத்தியோகத்தர்கள், தொழில் நுட்பவியலாளர்கள் தமிழர்களோடு சிங்களவர்கள் போட்டியிடவேண்டியிருந்தது.

* பெருந்தொகையான சிங்களவர்களும் தமிழர்களும் சிறிய பண்ணை விவசாயிகளாய், குத்தகையாளர்களாய் கஸ்டப்பட்டனர். நகர்புறத்தில் குறிப்பாக கொழும்பில் கிடைக்கக்கூடிய குறுகிய வேலைவாய்ப்புக் களுக்காக இலங்கையருடன் (சிங்களவர் தமிழர், முஸ்லீம்கள்) தென் இந்தியாவிலிருந்து வந்த தமிழர், மலையாளத் தொழிலாள ர்களும் போட்டியிட்டனர். தோட்டத் தொழிலாளா களாகப் பெருந்தொகையான இந்தியர்கள வரவழைக்கப்பட்டதற்கு அடிப்படைக் காரணம் உள்நாட்டில் தொடர்ச்சியாக தொழிலா ளர்கள் கிடையாமையே ஆயினும் காலப்போக்கில் சிங்களக் கிராமங்களில் வேலையின்மையும் பொருளாதார நெருக்கடியெல்லாம் எழுந்த போதெல்லாம் சிங்கள பௌத்தவாதிகள் இதற்கும் தப்பான வியாக்கியானம் கொடுத்தனர்.

* இங்கு முக்கியமாகக் குறிப்பிட வேண்டியது இதுதான். முதலாளித்துவ வளர்ச்சிக்குரிய இயக்க சக்திகள் குன்றிய பொருளாதாரம் பெருந்தொகையானோருக்குச் சிறிய வாய்ப்புக்களை மட்டும் கொடுத்தது. சிறிய பண்ட உற்பத்தி, பரவலாகும் பண்ட மயமாக்கல் இவையோடு சம்பந்தப்பட்ட குட்டி முதலாளி வர்க்கத்தின் பரிணமைப் படிகளைத் தடைப்படுத்திய சுழற்சி வணிக மூலதனத்தின் ஆதிக்கம் இவற்றின் தெட்டம் தெட்டமான தாக்கங்கள் இவையே காலனித்துவ எதிர்ப்பின் புறநிலை சார்ந்த தளம் இந்தப் புறநிலையோடு ஓர் அங்கமாய் இருந்தது கிறிஸ்தவ மயமாக்கல் இயக்கம். இவற்றுடன் இலங்கை சமூகத்தின் இன, மத வேறுபாடுகளையும் சேர்த்து தன் இயக்க ரீதியான பரிணமைத்தைச் சிங்கள

www.tamilarangam.net

பௌத்த தேசியவாதம் உருவாக்கியது.

* காலனித்துவத்தின் அனுசரணையுடன் கிறிஸ்தவ மயமாக்கலில் ஈடுபட்டிருந்த மிஷனரிமாருக்கு எதிராக ஆரம்பித்த பௌத்த மறுமலர்ச்சி இயக்கம் விரைவில் நடைமுறையிலும், பிரச்சாரத்திலும்; தமிழர் முஸ்லீம்களை எதிர்க்கும் இயக்கமாகவும் உருவெடுத்தது.

* கலாச்சாரத் தேசியவாதமே ஒருகுறுகிய அடித்தளத்தைக் கொண்ட கருத்ததமைவு. இலங்கை போன்ற பல மதங்களும் இனங்களும் கொண்ட நாட்டில் சிங்கள பௌத்தம் என்ற அடிப்படை மற்றைய இன,மத இலங்கையர்களான தமிழர்களையும் முஸ்லீம்களையும் வெளிவாரிப்படுத்தியது மட்டுமில்லாது எதிர்க்கப்பட வேண்டியவர்களாயும் காட்டியது.

சிங்கள பௌத்த மறுமலர்ச்சியின் பெரும் தலைவராக விளங்கியவரான அநாகரீக தர்மபாலா (1864 1933) பௌத்த புனித நகரான அநுராதபுரத்திலிருந்து கிறிஸ்தவ கோயில்களை மட்டுமல்லாது மதுக்கடைகளையும், முஸ்லீம்களின் கசாப்புக் கடைகளையும் அகற்ற வேண்டுமென பிரச்சாரம் செய்தார். அவரது பேச்சிலும் எழுத்திலும் சிங்கள பௌத்தர் அல்லாதோர் குறிப்பாகத் தமிழர் முஸ்லீம்கள், மலையாளத்தார் எல்லோரும் வந்தேறு குடிகள், வெளியார் அகற்றப்பட வேண்டியவர்கள் என்ற கருத்தே வலுப்பெற்றிருந்தது. இவர்கள் சிங்கள புத்த நாகரீகத்தை அழிக்க முயன்ற எதிரிகளின் பரம்பரையினராகக் கண்ட தர்மபாலா முஸ்லீம்களை வியாபாரம் செய்ய வந்த அழையா விருந்தினர்களாய்ச் சிங்களத் தீவில் தங்கிவிட்டவர்களாகக் குறிப்பிட்டார்.

இலங்கையின் உண்மையான உரிமையாளர்கள் சிங்கள பௌத்தர்களாயிருக்கும் போது அவர்களுக்குரிய இடங்களைத் தமிழர்கள், முஸ்லீம்கள், கிறிஸ்தவர்கள் பெற்றிருப்பது அநியாயம் என்ற செய்தியை ஜனரஞ்கப்படுத்துவதற்கு உதவியாக தர்மபாலா போன்றோர் சில புராணக் கதைகளின் உதவியை நாடினர்.

1. விஜயன் ஒரு வட இந்திய இளவரசன், ஒரு ஆரியன், அவனும் அவனுடைய உயர்வம்ச சகாக்கள் எழுநூறு ஆண்களும், தர்மபாலாவினால் 1902 ம் ஆண்டு அமெரிக்காவில் வெளியிடப்பட்ட பிரசுரமொன்றின்படி 'இரண்டாயிரத்து நானூற்றி நாற்பபத்தாறு' வருடங்களுக்கு முன் இலங்கையில் வந்திறங்கினர்.... இன்னோர் ஆரிய மன்னனும் மதுரைப் பாண்டியனின் மகளை மணம் செய்தான். இதே மன்னன் விஜயனின் சகாக்களும் 699 உயர்வர்க்கக் கன்னிகளை மணம் செய்ய அனுப்பி வைத்தானும். ஆகவே இரண்டு ஆரிய குடும்பங்களின் சேர்க்கையினால் எழுந்தது சிங்கள இனம்.'

தர்மபாலா தன் வசதிக்கேற்ப மதுரை மன்னனையும் ஆரியனாக்கிவிட்டார். விஜயன் கதை கூறும் மகாவம்சத்திலும் இந்தத் தகவல் இல்லை. இது தர்மபாலாவின் கண்டுபிடிப்பு. பாண்டியன் ஆரியராக்கப் பட்டால் அவருடைய ஆரிய சிங்களத் தூய்மைக்கதைக்கு அடிப்படையில்லை. அத்துடன் பாண்டியன் திராவிடன் எனக் குறிப்பிட்டால் சிங்கள இனத்தின் ஆரம்பமே ஒரு தமிழ் தாயின் கர்ப்பத்தில் என்றாகிவிடும். இப்படி ஆகிவிட்டால் சிங்களவரும் தமிழரும் ஒரு குலத்தோர் எனவும், 'சம உரிமையாளர்' எனவும் ஆகிவிடும். இவையெல்லாம் தர்மபாலாவின் நோக்கத்துக்குத் தடைகள். இவற்றை ஒரே அடியில் மாற்றிவிட்டார் அவர்.

2. சிங்களவர் பரிசுத்தமான ஆரிய இனத்தைக் கொண்ட உடன் பிறப்புகள் என்பதாகும். தர்மபாலா காலத்தில் ஆரியர் மற்றைய இனங்களை வெற்றி கொண்ட உயர் இனத்தவர் என்ற கருத்துகள் வெளிவரத் தொடங்கிவிட்டன. இதற்கேற்பக் கர்ண பரம்பரைப் புராணக்கதைகளுக்குப் புத்துயிரும், புது உருவமும் கொடுப்பதில் வெற்றி கண்டார்கள் தர்மபாலா போன்றோர். சிங்கள இரத்தத்தின் தூய்மை பற்றி பெருமைப்பட்ட தர்மபாலா தம் இனத்தவர்களிடம் 'அடிமை இரத்தம்' இல்லை என்றும்; இவர்களை புறமதத்தினரான தமிழரோ அல்லது கலாச்சார சின்னங்களை அழித்தொழிக்கும் ஐரோப்பியர்களாலோ ஒரு போதும் வெற்றி கொள்ளமுடியவில்லை என்றும் கூறினர்.

3. ஆரிய மனப்பாங்கினைப் பரப்பி சிங்களவர்கள் மற்ற இலங்கையர்களையும் விட விசேடமான உயர் இனத்தவர் என்ற சிந்தனையை ஆழமாக்கி, சிங்களவர்களின் தனித்துவத்துக்கு ஒருவித தார்மீக ஆளுமையும் கொடுக்கும் நோக்குடன் ஒன்றுவது புராணக்கதையையும் பயன்படுத்தினர். அதுவே புத்த பகவானின் இலங்கை விஜயமாகும். புத்த பகவானே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நேரில் வந்து ஆசீர்வாதித்து அருள்பாலித்த விசேடமான சிங்கள பௌத்தர்களின் நாடு இலங்கை என்பது ஜனரஞ்சக வரலாறுயிற்று.

* இந்தப் பிரச்சாரத்தின் நடைமுறை சிங்களக் குட்டி முதலாளி வர்க்கத்தினதும் காலனித்துவக் கல்விக் கூடாக வளர்த்து வரும் நடுத்தர வர்க்கத்து புத்திஜீவிகளினதும் வாழ் நிலைப் பிரச்சினைகளோடு ஒட்டியிருந்தது. சிங்கள பௌத்தர்களின் நாட்டில் வந்தேறு குடிகளான 'தமிழர், முஸ்லீம்கள் அரசாங்கப் பதவிகளையும், உள்நாட்டு வர்த்தகத்தையும் பிடித்துக் கொண்டனர்; இவர்களை அகற்றி அனைத்தையும் சிங்கள பௌத்த மயப்படுத்தல் வேண்டும். இதுவே மேற்குறிப்பிட்ட வர்க்கங்களின் முக்கிய நோக்காயிருந்தது. இலங்கையரல்லாத இந்திய வர்த்தகர்களின் (செட்டிமார்கள் உட்பட) ஆதிக்கமும் இந்த எதிர்பிற்கு காரணம் ஆகும்.

* சிங்கள பௌத்த' என்ற பெயரில் தர்மபாலா வெளியிட்ட பத்திரிகை சிங்கள வர்த்தகர்களை தேசபக்தர்கள் என்றும், நியாயமான வழியில் பணம் சம்பாதிப்போர் என்றும் புகழ்ந்தது. அதே தர்மபாலா பம்பாய், தென்னிந்தியா போன்ற இடங்களிலிருந்து வந்த வியாபாரிகளையும் முஸ்லீம்களையும் அநியாமாகப் பணம் சம்பாதிப்போர் எனச் சாடினுர். புத்தமத்தை சார்ந்த பத்திரிகைள், வெளியீடுகள் முஸ்லீம் கடைகளைப் பகிஷ்கரிக்கும்படி சிங்கவர்கள் மத்தியில் பிரச்சாரம் செய்தன.

* இந்த கலாச்சார தேசிய வாதத்தின் வெளிப்பாடுகளைக் கவிதைகள், நூல்கள், நாடகங்களில் நன்கு காணக்கூடியதாய் இருந்தது. சிங்கள பௌத்தர்களை பெருமைக்குரிய வீரமிகுந்த பூமிபுத்திரா ளாகத் காட்டிய சில படைப்புகள் மற்றைய இனங்களை கேவலப்படுத்தின. பேராசிரியர் சரத்சந்திராவினுல் சிங்கள நாவலின் தந்தை எனக்கூறப்படும் பியதாச சிரிசேன 'சிங்கள ஜாதிய' என்ற பத்திரிகையை நடாத்தினுர். இதில் இவர்மேலைத் தேசக் கலாச்சாரத்திற்கு எதிராக பிரச்சாரம் செய்த அதே வேளையில் சிங்கள பௌத்தர்கள் அல்லாதவர்களையும் தாக்கினுர்.

* சிங்கள பௌத்தர்களின் தனித்து வத்தை இனவாதப் போக்கில் வலுப்பெறச் செய்த, குறுகிய பின்னோக்கிய கற்பனைகளில் ஊறிப்போன கலாச்சார மறுமலர்ச்சி வாதம் காலனித்தவ இலங்கைச் சமூகத்தின் ஒர் முழுமைத்துவமற்ற குழப்பம் நிறைந்த பிரதிபலிப்பாகவே இருந்தது.

* பெரும்பான்மை இனத்தின் நடுத்தர கீழ்மட்ட மக்களின் உணர்வுகளைத் தட்டி அவர்களை நெருங்கிய சிங்கள பௌத்த தேசியவாதத்தின் சில செயற்பாடுகள் சில சந்தர்ப்பங்களின் பரந்த ஏகாதிபத்திய எதிர்ப்புத்தன்மை கொண்டதாய் இருந்திருக்கலாம். ஆனுல் இந்த தேசியவாதம் இனம், மதம் என்ற அடிப்படையில் தனக்குத்தானே வகுத்துக்கொண்ட வரையறைகளோ அதன் தடையாயின. ஏகாதிபத்தியத்தை எதிர்க்கும் தமிழர்களோ அல்லது முஸ்லீம்களே தங்களை இத்தகைய ஒரு இயக்கத்திற்கு இனங்காண முடியாதவர்களாய் இருந்தார்கள்.

* இலங்கையின் வரலாற்றிலேயே இரு இலங்கைச் சமூகங்களிடையே ஏற்பட்ட முதலாவது கலவரம் 1915ம் ஆண்டின் சிங்கள முஸ்லீம் கலவரமாகும். சில இடது சாரிகளும் இன அடிப்படையிலும், 'வர்க்க' 'ஏகாதிபத்திய எதிர்ப்பு' அடிப்படையிலும் முஸ்லீம்கள் மீதான தாக்குதல்களை நேரடியாகவும், மறைமுகமாயும் நியாயப்படுத்தியுள்ளனர். 1915ம் ஆண்டின் கலவரங்கள் சிங்கள பௌத்த இயக்கத்தின் உள்நாட்டு இனவாத த்தின் ஒரு பயங்கரமான வெளிப்பாடு மட்டுமே என்பதில் சந்தேகமில்லை.

* 1915 க்கு பின் தோன்றிய இலங்கை தேசிய காங்கிரசில் சிங்கள தமிழ் உயர்நடுத்தர வர்க்க புத்திஜீவிகள் அங்கம் வகித்தனர். இதன் முதல் தலைவராகப் பொன்னம்பலம் அருணுசலம் தெரிவானுர். அந்தச் சந்தர்ப்பத்தில் அவர் செல்வாக்குள்ள ஓர் பரந்த தேசியவாதியாக விளங்கிய போதும் மிகவும் குறுகிய காலத்தில் சிங்களவர் தமிழர் முரண்பாடு சட்டசபை நியமனங்கள் பற்றி வலுத்துத் தலைமைப் பதவியிலிருந்து விலகிக் கொண்டார். தேசிய காங்கிரஸ் பிளவுண்டது. காலனித்துவ தேசாதிபதி மானிங்என்பவரின் பிரித்தாளும் சுதந்திரம் சுலபமாக வெற்றிகண்டது.

* 1921ல் தமிழ் மகாஜனசபை உருவா கியது. சட்டசபை அரசியல் இன அடிப்படையில் அமைந்த அரசியலாயிற்று.

* 1935 ல் இலங்கையின் முதலாவது இடதுசாரி கட்சியான சமசமாஜக் கட்சி இன ஐக்கியம், பூரண சுதந்திரம் மொழிச் சமத்துவம் என்ற அடிப்படையில் நாட்டின் பல பகுதிகளிலும் இயக்கம் நடாத்தியது. இனவாத

www.tamilarangam.net

அரசியலை ஸ்தாபன ரீதியாக எதிர்த்தது.

* 1940 களில் சமசமாஜக் கட்சியிலிருந்து ஒரு குழுவினர் பிரிந்து கம்யூனிஸ்ட் கட்சியை அமைத்தனர். இவர்களும் இனவாத எதிர்ப்பு கொள்கைகளை பின்பற்றினர். இடதுசாரிகளின் ஸ்தாபனரீதியான வேலைகள் நகர்புறத்தில் தொழிற்சங்களை அமைப்பதிலேயே செறிந்திருந்தன. இங்கு அவர்கள் ஏற்கனவே இனவாதச் சேற்றுக்குள் விழுந்துவிட்ட A.E. குணசிங்காவோடு மோதினார்கள்.

* இளமைக் காலத்தில் தீவிர பிரிட்டிஷ் எதிர்ப்பாளராயும் சிறந்த தொழிற்சங்கவாதியாகவும் ஆரம்பித்த A.E, குணசிங்கா தேர்தலை மனதிற் கொண்டு இனவாதப்பிரச்சாரத்தில் ஈடுபட்டார். தேர்தல் அரசியல் இனவாத அரசியலாக நாடெங்கும் பரவி உருவியெடுத்தது. இடதுசாரிகள் எதிர்நீச்சல் போட முற்பட்டனர்.

* பிரிட்டிஷ் ஆட்சியின் இறுதித் தசாப்தங்கள் சர்வஜன வாக்குரிமை அரசியலில் சிங்கள தமிழ் வகுப்புவாத சக்திகளின் வளர்ச்சியைக் கண்டன. பல சந்தர்ப்பங்களில் தமிழ் அரசியல்வாதிகள் அர்த்தமில்லாத ஐம்பதுக்கு ஐம்பது போன்ற கோரிக்கைகளை வைத்து தமிழ் அரசியலை வகுப்புவாதக் குட்டைக்குள் இழுத்துச் சென்றனர்.

* சிங்கள பௌத்தவாதத்தின் செல்வாக்கு அரசியலில் வளர்ந்த அதே கட்டத்தில் அதே கட்டத்தில் அதற்கெதிரான தமிழ் வகுப்புவாதமும் தோன்றியது.

* 1931 48 கால வெளியில் இடம பெற்ற ஒரு முக்கிய அரசியல் நிகழ்வு 1948 ல் இலட்சக்கணக்கான தோட்டத் தொழிலாளர்கள் D.S. சேனநாயக்கா அரசாங்கத்தினால் நாடற்றவர்கள் ஆக்கப்பட்டதாகும். சிங்கள இனவாத அரசியலின் வளர்ச்சியல் 1915 ம் ஆண்டையும்விட 1948ன் இந்த இரத்தம் சிந்தாத வெற்றி மிகவும் முக்கியம் பெறுகிறது.

* இடதுசாரிகள் இதனை தீவிரமாக பாரளுமன்றத்தில் எதிர்த்தனர்.

* கண்டிய சிங்கள பிரதேசவாதிகள் தமிழ் தொழிலாளர்கள் சிங்கள மண்ணில் வாழ்ந்து வந்த சிங்கள விவசாயிகளின் வேலை வசதிகளைப் பறித்துக் கொண்டனர் என்ற பிரச்சாரத்தை ஆரம்பித்தனர். 1951ல் வெளிவந்த கண்டிய விவசாயிகளின் ஆணைக்குழுவின் அறிக்கையிலும் இத்தகைய பிரச்சாரத்தின் வெளிப்பாடுகளை காணலாம்.

## சுதந்திரத்திற்கு பின் பெருந்தேசிய இனவாதத்தின் ஸ்தாபன மயமாக்கல்

* 1948 சுதந்திரத்திற்குப் பின்பான வரலாறு இலங்கையரின் அபிலாஷைகளைப் பொறுத்தவரை மிகவும் ஏமாற்றம் தருவதாய் அமைந்துவிட்டது. சிறுபான்மை மக்களையும் இடதுசாரி இயக்கத்தையும் பொறுத்தவரை கடந்த மூன்று தசாப்தங்களின் மொத்த விளைவு துக்கரமானது. இக்காலகட்டத்தில்தான் சிங்கள பௌத்த தேசியவாதம் சிங்களப் பெருந்தேசிய இனவாதமாகப் பூரணமாக ஸ்தாபன ரீதியான வளர்ச்சியையும் ஆட்சிச் செல்வாக்கையும் பெறுகிறது.

* 1956 தேர்தல் களத்தில் முழுக்க முழுக்க சிங்கள பௌத்த தோற்றத்துடன் பண்டரநாயக்காவின் தலைமையிலமைந்த புதிய கூட்டான மக்கள் ஐக்கிய முன்னனி இறங்கியது. இக்கூட்டில் இலங்கையின் மார்க்சிச இயக்கத்தின் தந்தை என வர்ணிக்க ப்படும் பிலிப் குணவர்த்தனவின் புரட்சிகர சமசமாஜகட்சி அங்கம் வகித்தது. தமிழர்களைக் காலிமுகத்திடலில் போட்டுத் தோலுரிப்பேன் என்று சபதம் செய்த K.N.P, ராஜரத்தினவின் குழுவும் இதில் சேர்ந்திருந்தது.

* 1956 தேர்தலில் சமசமாஜிகளும் கம்யூனிஸ்ட்களும், சிங்களத்துக்கும் தமிழருக்கும் சம உரிமை கொள்கையை முன்வைத்தனர். பண்டரநாயக்காவின் 24 மணித்தியலாங்களில் சிங்களம் மட்டும் என்ற கர்ஜனை 1953க்குப் பின் எழுந்த போது யூ. என்.பி.யும் தனது கொள்கை சிங்களம் மட்டுமே என கூற ஆரம்பித்தது.

* மக்கள் ஐக்கிய முன்னணி வெற்றி பெற்றது. 1956 யூன் சிங்கள மட்டும் சட்டம் பாரளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இடதுசாரிகளும், தமிழ் அங்கத்தவர்களும் எதிராகவும் வாக்களித்தனர்.

* தமிழ் அங்கத்தவர்கள் காலி முகத்திடலில் சத்தியாக்கிரகம் செய்தனர். இவர்கள் அரசாங்க ஆதரவாளர்களான சிங்களக் குண்டர்களால் தாக்கப்பட்டனர்.

* சிங்கள பௌத்தவாதமும் பொருளாதாரக் கொள்கையும் இணைந்த இன்றோர் முக்கிய பகுதி விவசாயக் குடியேற்றத் திட்டங்களாகும். வரண்ட பிரதேசத்தில் காடுகள் வெட்டப்பட்டு நிலம் அபிவிருத்தி செய்யப்பட்டு நீர்பாசன

www.tamilarangam.net

வசதிகளுடன் அரச செலவில் நிலமற்ற விவசாயிகளைக் குடியேற்றும் கொள்கை சுதந்திரத்திற்கு முன்பிருந்தே ஆரம்பித்தது. 1938ம் ஆண்டில்தான் இக்கொள்கை அப்போது விவசாய அமைச்சராகியிருந்த D.S. சேனநாயக்காவினால் முழு உருப்பெற்றது. சுதந்திரத்திற்குப் பின் சகல அரசாங்கங்களும் இக்கொள்கையைப் பின்பற்றின. சிங்களப் பிரதேசங்களில் உள்ள பெரும்நிலச் சொந்தக்காரர்களின் உடைமை உறவுகளை மாற்றுவதைத் தவிர்க்கும் ஓர் வழியாகவும் இந்தக் கொள்கை அமைந்தது. நிலமற்ற சிங்கள விவசாயிகளை அரசு செலவில் அரச செலவில் அரச காணிகளில் குடியேற்றும் திட்டங்கள் பல சந்தர்ப்பங்களில் வேண்டுமென்றே தமிழ்ப் பிரதேசங்கள் புவியியல் ரீதியான தொடர்பிலான பல இடங்களில் இழந்துள்ளன.

* இக்குடியேற்றத் திட்டங்கள் சிங்கள பௌத்தர்கள் தங்களின் பழைய நாகரீக ஸ்தாபனங்களுக்குத் திரும்பும் ஓர் சரித்திர கைங்கரியமாக ஆளும் கட்சிகளினால் எழுதப்படுகிறது. தமிழர்கள் மத்தியில் குடியேற்றப்படும் சிங்கள விவசாயிகளுக்கு இன ஐக்கியம், சகோதரத்துவம் பற்றிய சிந்தனைகளை ஊட்டுவதற்கு மாறாகச் சிங்களப் பெருந்தேசிய இனவாதச் சிந்தனைகளையே ஊட்டியுள்ளனர். பல சிங்கள பௌத்த ஸ்தாபனங்களைச் சேர்ந்தோர், பல சந்தர்ப்பங்களில் அரச அதிகாரிகளும் இத்தகைய பிரசாரங்களில் ஈடுபடுவதுண்டு.

* குடியேற்றத் திட்டங்களினால் தமிழ்ப் பகுதிகளில் ஏற்பட்ட சிங்கள தமிழ் குரோத உணர்வுகள் பரம்பரையாகப் பல்லாண்டுகள் தமிழ்ப் பிரதேசங்களில் வாழ்ந்து வந்த சிங்கள மக்களுடனான உறவுகளை பாதித்துள்ளன.

* தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலான பிரதேச ஒருமைப்பாட்டினை முறியடிப்பதே "அவர்களின் சுயாட்சி, சமஷ்டி பிரிவினைக் கோரிக்கைகளை" முறியடிக்க மிகவும் உறுதியான வழி என்பதைச் சிங்கள இனவாத அரசாங்கங்கள்நன்கு உணர்ந்து செயல்பட்டு வந்திருக்கின்றன. இந்த நீண்ட கால அரசியல் சதியில் நிலமற்ற வறிய சிங்கள விவசாயிகள் பகடைக் காய்களாகவும் பயன்படுகிறார்கள். துரதிஸ்டவசமாக தமிழ் பிரதேசங்களில் குடியேற்றப்படும் சிங்கள விவசாயிகளை 'பாதுகாப்பு' என்ற காரணத்தினால் பொலிசாரும் ஆயுதப்படையினரும் தம் வசமாக்கியுள்ளனர். இன ஒடுக்கலின் கருவிகளான இவ்விரு படைகளும் பல சந்தர்ப்பங்களில் சிங்கள விவசாயிகளை தமிழருக்கு எதிராகத் தூண்டிவிட்டுள்ளன. தொடர்ந்தும் இதைச் செய்கின்றன. ' இனம் மதம் நாடு ' என்ற சிங்கள பௌத்தப்பிரச்சாரம் மறுபுறம் ஆயுதப்படைகளின் தூண்டுதல் இவற்றிற்கிடையே அடிபட்டுள்ள சிங்கள மக்கள் தமிழர்களை எதிரிகளாகக் கருதுவது இயற்கையே.

## இனவாதமும் கலாச்சார அமைப்புகளும்

* 1956 லிருந்து இன்று வரையிலான வரலாற்றில் சிங்களப் பெருந்தேசிய இனவாதத்தின் மிகவும் ஒழுங்கான தொடர்ச்சியான வளர்ச்சியைக் கலாச்சாரத் துறைகளிலேயே காணலாம்.

* சிங்களம் அரச கரும மொழியான பின் சிங்கள, தமிழ் மொழிகள் பாடசாலைகளில் போதனா மொழிகள் ஆகின. பாலர் வகுப்பிலிருந்து பல்கலைக்கழகப் புகுமுக வரை பாடப்புத்தகங்கள் சுய மொழிகளில் ஆக்கப்படும்வரை பணியினைக் கல்வி அமைச்சு மேற்கொண்டது.

* பாடநூல்களில் வகுப்புவாதம் சம்பந்தப்பட்ட ஆய்வுகள் சில சமீப காலத்தில் நடைபெற்றுள்ளன. இவை முன்பிருந்தே நம்பப்பட்ட பல உண்மைகளை மிகவும் ஆதாரபூர்வமாக வெளிப்படுத்தியுள்ளன.

* இது தொடர்பாக ஓர் அறிக்கையும், சில கட்டுரைகளையும் ஓர் குறிப்பிட்ட ஆய்வுக்குழுவின் தலைவரான றெஜி சிறிவர்த்தன வெளியிட்டுள்ளார்.

* இந்த ஆய்வுகளின்படி சிங்களக் குழந்தைகள் தொடர்ச்சியான ஓர் சிங்கள இனவாதச் சிந்தனை மாற்றத்திற்கு ஆளாகிவிடுகிறார்கள். சிங்கள பௌத்த வாதத்தின் ஆரியவாதம் ஊட்டப்பட்டு அடிப்படையிலான வரலாற்று வியாக்கியானமும் சமூகக் கல்வியும்; இளம் தலைமுறைக்கு ஊட்டப்பட்டுவருகிறது. அதே நேரத்தில் தமிழ் பாட நூல்களில் தேசிய ஒருமைப்பாடு பற்றி அழுத்தமாகக் கூறப்படுகிறது.

* றெஜி சிறிவர்த்தனவின் ஆய்வுக்களின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கருத்துப்படி சிங்கள நூல்களில் தமிழர்கள் மரபுரீதியான எதிரியாகவே இனம் காட்டப்பட்டுள்ளனர்.

* புதிதாக எழுதப்பட்டுள்ள பாடநூல்களில் இதே தன்மை தொடர்வதையும் சிறிவர்த்தன சுட்டிக் காட்டியுள்ளார். ஒரு சிங்கள நூலில் தீபாவளி பற்றிய பாடம் இடம் பெறுகிறது. இதுபற்றி சிறிவர்த்தன பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

'ஒரு புத்தகத்தில் தீபாவளி பற்றி ஒரு பாடம் இருக்கிறது. முதற் பார்வையில் இது தமிழ்க் கலாச்சாரத்தை சிங்களக் குழந்தைகளுக்கு அறிமுகம் செய்யும் ஓர் வரவேற்கக்கூடிய புது உத்தி என்றேபடுகிறது. ஆயினும் இந்தப் பாடத்தை வாசிக்கின்ற போது, இதிலிருக்கும் ஒரு விடயத்தினால் இந்த நோக்கம் திசை திருப்பப்படுகிறது. தீபாவளி இந்தியாவில் இருந்த வந்த தமிழர்களின் சந்ததியினரான இலங்கையில் வாழும் மக்களால் கொண்டாடப்படுவது என்றே குறிப்பிடப்படுகிறது. இந்த வசனத்தில் ஒரேயடியில் தமிழர்கள் இந்த நாட்டை சேராத ஒரு வெளியார் பிரிவு என்று சிங்களக் குழந்தைக்கு அறிமுகப்படுத்தப்படுகின்றனர்.'

* 1956 க்குப் பின் சிங்கள கலை இலக்கியத்திற்கு விசேச ஊக்குவிப்பு வழங்கப்படுகிறது. இதன் செல்வாக்கு மிகுந்த போக்கு சிங்கள பௌத்த இனவாதத்தின் கருவியாகவே அமைந்துள்ளது. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமும் பல ஜனரஞ்சகப் பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் இனவாதப் பிரச்சார சாதனங்களாக இயங்குகின்றன.

* பிரபல சிங்களப் பாடகி நந்தமானி பல ஆண்டுகளுக்கு முன் மிகவும் நன்றாகப் பாடியுள்ள 'இது எங்கள் சிங்கள நாடு' என்ற பாடல் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினால் தினமும் ஒலிபரப்பப்பட்டு ஜனரஞ்சப்படுத்தப்பட்டுள்ளது. இதே நந்தமாலினி 1977 க்குப் பின் சிங்கள இளைஞர்களுக்கு சிங்கத்தின் வீரத்தை நினைவூட்டும் இனவாதகப் பாடல்களை பாடியுள்ளார். நந்தமாலினி ஒரு உதாரணம் மட்டுமே, அவர் போன்று பலர் உள்ளனர்.

* முற்போக்காளர் என்று பிரபல்யமான சில இளம் கலைஞர்கள்கூட இத்தகைய பிரச்சாரங்களில் ஈடுபடுதல் வருந்தத்தக்கது.

* கல்வி கலாச்சார சாதனங்களுக்கூடாகப் புகுத்தப்படும் இனவாத உணர்வு சமூக மட்டத்தில் ஆரம்பித்து அரசியலின் உதவியுடன் ஒரு வித சுயாதீன இயக்கப்பாட்டினை பெற்றிருப்பதை அவதானிக்கலாம்.

* இன்றைய முக்கிய அரசியல் கட்சிகள் அதாவது பாராளுமன்ற அரசியலில் சிங்கள பௌத்த தனித்துவம் என்ற அடிப்படை மீறி ஆளும் கட்சிகளாவது சுலபமான காரியமில்லை.

* சிங்கள சமூக உணர்வின் தலையாய அம்சமாக இத்தகைய ஓர் வெறி மிகுந்த தனித்துவம் அரசோச்சும்வரை வர்க்கப் போராட்டம் மழுங்கடிக்கப்படும். இன்றைய இலங்கை அரசியலில் பாட்டாளி வர்க்க இயக்கங்களின் வீழ்ச்சிக்குப்பின் ஓர் முக்கிய காரணம் வர்க்க உணர்வுகளை மழுங்கடிக்கும் இனவாதத்தின் ஆதிக்கமே. இங்கு விவரிக்கப்பட்டது போல் இந்த ஆதிக்கம் வெறும் மேடைப்பேச்சு மட்டத்தில் மட்டுமல்ல இளம் சந்ததிகளின் அன்றாட சமூக வாழ்வில் அவர்களின் சமூக நோக்கில் அவர்களின் தம்மைப் பற்றிய மற்றைய இனத்தவர் பற்றிய கணிப்பீடுகளில் எல்லாம் பரந்த முற்போக் கானவாக்கப் பார்வைக்கு இடமில்லாத வகையில் இனவாதக் கருத்தமைவு மேலாதிக்கம் செய்கிறது.

* ஒரு இனத்தை ஒடுக்கும் பிறிதோர் இனமும் தனது சுதந்திரத்தை இழந்து விடுகிறது. தமிழ் மக்களை கொடுமையாக அடக்கும் ஒரு அரசினால் சிங்கள மக்களை யும் அடக்காமல் இருக்கமுடியாது. தமிழ்மக்களின் உரிமைகளை மறுக்கும் ஓர் அரசி னால் இறுதியில் சிங்கள மக்களையும் திருப்திப்படுத்தமுடியாது. இன்று ஒடுக்குமுறைக்குள்ளாகி போராடும் தமிழர்கள் நாளை போராடும் நிர்ப்பந்தத்திற்குள்ளாகும் சிங்களவர்களின் உடனடி நண்பர்கள் என்பதை சிங்கள இனவாதம் திரை போட்டு மறைத்துள்ளது.

* அரசியல் நேர்மையையும், புரட்சிகர சிந்தனையும் கொண்ட சகல சிங்களவர்களும் தமிழ் மக்களின் மத்தியில் உருவாகி வரும் தேசிய விடுதலை இயக்கத்தை ஆதரிக்காமல் இருக்கமுடியாது.

* வரலாற்றுச் சூழ்நிலைகளால் தமிழ் மக்களிடையே ஜனநாயகப் உரிமைப் போராட்டம், ஏகாதிபத்திய எதிர்ப்பினையையும் முற்போக்கு சிந்தனைகளையும் தொடர்ச்சியாக உள்வாரிப்படுத்தி வருகிறது. இன்றைய அரசின் நடைமுறை அதன் சர்வதேச உறவுகள் தமிழர்களின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போராட்டத்தை மேலும் மேலும் ஏகாதிபத்திய எதிர்ப்புத் தன்மை கொண்டதாக்கும் என்பதில் சந்தேகமில்லை.

* சிங்கள முற்போக்காளர்கள் இதன் ஆகாஷனத்தால் பெரும் தேசிய இனவாத்தை எதிர்த்தும் போராட மேலும் சக்தி பெறுவார்கள். ஒவ்வொரு சிங்கள சகோதரனின் ஜனநாயக உணர்வினை, மனிதத்துவத்தைப் பரீட்சிக்கும் போராட்டம் அமைந்துள்ளது. சிங்கள மக்கள் பெருந் தொகையில் இந்தப் பரீட்சையிலும் தேர்வு பெறும் காலம் அவர்களினதும் தமிழ் மக்களினதும் விடுதலையின் வருகையைப் பறைசாற்றும்.

* இரண்டாவது பகுதி

சமுத்திரனின் கட்டுரையில் சிங்கள பௌத்த இனவாதம் எவ்வாறு சிங்கள சமூகத்தில் புரையோடியிருக்கிறது என்பதையும், வளர்க்கப்படுகிறது என்பதையும் இனம் காட்டுகிறது. இந்த இனவாதக் குழிக்குள் சிக்கி இருக்கும் சிங்கள மக்கள் இதில் இருந்து மீட்கப்படும் போதே தமிழ் மக்களுடன் ஐக்கியப்பட முடியும். சிங்கள மக்கள் இனவாதத்தில் இருந்து மீட்கப்படாதவரை இந்த ஐக்கியத்தைப் பற்றி பேசுவது 'கனவு' உலகில் உள்ளவர்களின் கற்பனையே.

இலங்கை இனவாத அரசு இனவாதத்திற்கு வேண்டிய நேரம் எண்ணெய் ஊற்றியும் தன்னை பாதுகாத்துக் கொள்வதுடன் சிங்கள மக்களை இனவாதத்தில் இருந்து மீளமுடியாதவாறும் பார்த்துக் கொள்ளும். இந்நிலையில் தமிழ் மக்களின் ஒடுக்குமுறைக்கு நிரந்தரத் தீர்வு காணப்படும் வரை சிங்கள மக்கள் இன வாதத்தில் இருந்து மீளமுடியாது.

தமிழ் மக்களின் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வை இலங்கை அரசுகள் முன்வைக்கப் போவதில்லை என்பது கண்கூடு. இந்நிலையில் தமிழர்களின் தனிநாட்டு கோரிக்கை அவர்களது உரிமைகளுக்கான தவிர்க்க முடியாத கோரிக்கை ஆகிறது. இவ்வாறு தமிழர்கள் பிரிந்து செல்வதன் மூலமே சிங்களவர்கள் தமது உண்மையான எதிரியை பின்னர் உணர்ந்து கொள்வார்கள்.

இக் கட்டுரையின் முதற்பகுதி சமுத்திரன் எழுதிய புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டு நன்றியுடன் இங்கு பிரசுரமாகிறது. இரண்டாவது பகுதி கட்டுரையாளர் அகிலனால் எழுதப்பட்டது.

சிங்கள தமிழ் உழைக்கும் மக்களின் ஒற்றுமை சாத்தியமற்றதா என்ற பேரவையின் கட்டுரைக்கு பதிலாக இக்கட்டுரை எழுதப்பட்டிருக்கிறது தமிழ் மக்கள் பாதுகாப்புப் பேரவையின் கட்டுரைசம்பந்தமாகவும் இக்கட்டுரை சம்பந்தமாகவும் உங்கள் கருத்துக்களை தேடல் எதிர்பார்க்கின்றது

வானும் மலையும் நிலமும் நதியும்
மரமும் இலையும் மலரும் சருகும்
பனியின் பிடியில் உருகும் மறையும்
விழிகள் தொழிலின் திறமை அழியும்
விடியும் பனியின் பிடியும் தளரும்
பள்ளத்தாக்கில் ஒதுங்கி ஒடுங்கி
மெல்ல மறையும்
கொடுமைகள் இதுபோல்
மீள்வது நிசமென
மனம் தளர்ந்திடலாம்
ஒழிவது நிசமென
துணிவுடன் எழலாம்

*சிவசேகரம்*

www.tamilarangam.net

# ஆரூரானின்

" புதுக்கவிதைதான் எழுதவரும் " சென்ற இதழ் கட்டுரை தொடர்பாக விமர்சனங்கள் அடிக்காத குறையாக இருந்தது. குறிப்பாக இளைய தலைமுறைக் கவிஞர்களின் உற்சாகத்தை குறைக்கும் விதமாக இருந்ததென குறிப்பிட்டுள்ளார்கள்.

திரும்பவும் எழுதுகின்றேன். குறை சொல்வதற்காகவோ அல்லது வேறு காரணங்களுக்காகவோ அக்கட்டுரை எழுதப்படவில்லை. புதுமைப்பித்தன் சொல்வது போல "அண்ணுந்து விட்டது எல்லாம் கூறு தமிழ் பாட்டாச்சே" என்ற நிலைமை இருக்கப்படாது என்பதற்காகவே.

நான் குறிப்பிடாத சில கவிஞர்களின் பெயர்கள் இருக்கத்தான் இருக்கின்றார்கள். குறிப்பாக குமாரி மொனிக்கா மற்றும் மலையன்பன், கந்தசாமி இப்படி இன்னும் சிலர். என் பார்வை என்பதும் என் ரசனை என்பதும் எனக்கு சிலவற்றை உணர்த்துகின்றது. சிலவற்றை உணராமல் விடச் செய்கின்றது. விட்டவற்றில் நல்லவையும் இருக்கலாம்.

புதிதாக கவிதைகள் எழுதுபவர்களுக்கு ஒரு ஆலோசனை. "மரணத்துள் வாழ்வோம்" கவிதைத் தொகுதியை வாசித்துப் பாருங்கள். கடைசியாக அக்கட்டுரையை எழுதிய நான் ஒரு கவிஞன் அல்ல. அப்படியென்றல் எப்படி விமர்சனம் எழுதலாம் என்கிறீர்கள். சினிமாப் படம் பற்றி விமர்சனம் எழுதுவது என்றல் படம் எடுத்துபோட்டோ அல்லது இயக்கி போட்டோதான் சினிமா விமர்சனம் எழுதவேண்டும் என்று அல்ல. சினிமா பற்றி அறிவு இருந்தால் போதும் என்று நினைக்கிறேன்.

இங்கு மூன்று நான்கு சஞ்சிகைகளும் அதேயளவு பத்திரிகைகளும் வெளிவருகின்றது. கவிதை வரும் வேகத்திற்கு சிறுகதைகள் இல்லை. நான் எழுதியது போல் கவிதை எழுத சுகம் என்ற காரணமே! இத்துறையில் பல பேர் நுழைகின்றார்கள். உண்மையில் இலக்கிய வடிவங்களில் சிறுகதைதான் உன்னதமானது. பலபேரைக் தொடக்கூடியதும் அதுதான். சிறுகதை என்பதற்கு வரைவிலக்கணம் ஒன்றில்லை. ஒரு கதையை படிக்கிறோம் என்ற உணர்வை ஏற்படுத்தாமல் கண்ணுக்கு முன்னல் நடந்தது நடக்கின்றது என்ற உணர்வை ஏற்படுத்தியிருக்க வேண்டும். இதை நான் எழுதியிருக்கலாமே என்ற ஆதங்கத்தை வாசகனுக்கு ஏற்படுத்த வேண்டும்.

இங்கு சிறுகதை எழுதியவர்களைத் தேடிய போது ஜோர்ஜ் குருஷேவ், குமார் மூர்த்தி, சபா வசந்தன், வ.ந.கிரிதரன் என்ற நான்கைந்து பெயர்கள் கிடைக்கி ன்றது. நான் பார்த்தவற்றில் சபா வசந்தனும் ஜோர்ஜ் குருஷேவும் சற்று வித்தியாசமாக எழுதுகின்றார்கள். இதுபற்றி இன்னும் பல படைப்புக்கள் வந்த பின் நீண்ட ஒரு விமர்சனம் எழுதலாம் என நினைக்கின்றேன்.

தமிழில் சிறு கதையை சர்வதேச தரத்திற்கு சமமாக எழுதிய புதுமைப்பித்தன் தன்னுடைய சிறுகதை தொகுதியொன்றின் முன்னுரையில் "என் சிறு கதைகள் கலை உதாரணத்திற ' கென்று கங்கணம் கட்டிக் கொண்டு செய்த சேவை அல்ல, உலகை உய்விக்கும் நோக்கமோ எனக்கோ, என் கதைக்கோ சற்றும் கிடையாது. நான் கேட்டது கண்டது காணவிரும்புவது காணவிரும்பாதது ஆகிய சம்பவக் கோவைகள் தான் இவைகள்" என எழுதுகின்றர்.

"மார்க்சியக் கோட்பாடு ஒரு புறம் சமரசவாதமாகவும் இன்னெரு புறம் வறட்டு விஞ்ஞான வாதமாகவும் வழிதவறிப் போயிருக்கின்றது. மார்க்சிய நடை முறை ஒரு புறம் வஞ்சகமான நிறுவனவாதமாகவும் மறுபுறம் இரத்தம் படிந்த பொய்மை நோக்கி மக்களை அழைத்துச் செல்வதுமாகவும் மாறியிருக்கின்றது. அச்சுறுத்தும் இந்த திருப்பு முனையில் வாழும் சுதந்திர ஆய்வாளன் ஒருவனின் முதல் கடமை எல்லாத் துறைகளிலும் மாக்ஸ்சின் அசலான நிலைப்பாடுகளை மறுபடியும் நிறுவுவதும் வளர்ச்சி பெறச் செய்வதுமாகும். அழகியல் துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. . . ."சமீபத்தில் எனக்கு கிடைத்த புத்தகமான "மார்க்சிய அழகியல்" (மலையாள தலை சிறந்த எழுத்தாளர் சச்சிதானந்தனல் எழுதப்பட்டு கவிஞர் சுகுமாரனல் மொழிபெயர்க்கப்பட்டது.) மிக ஆழமாகவும் அருமையாகவும் விவாதத்திற குரியதாகவும் இருந்தது. வாசகர்கள் விரும்பினல் இதிலிருந்து சில பகுதிகளை அடுத்த முறை எழுதலாம் என நினைக்கிறேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



www.tamilarangam.net

பாதையில் ..........

இருப்பை
நம்பிக்கையை, கனவை
அழிவின் மடியை உதைத்து
எழுந்த சிசுவை சுமந்து
நான் முன்னேறியே இருக்கின்றேன்.

என் விழியில், மடியில்
சேதிகள் சொன்ன தோழியை
காலவெளியில் கணநேரப்
பறவையாய்
நோக்கும் நேரத்தில்
மனம் நோகிப் பிரிந்த
அவள் நினைவைச் சுமந்து
நான் முன்னேறியே இருக்கின்றேன்.

தாலாட்டை முரசாக்கி
அரும்பொன்று முளைத்து
ஞாலத்தில் ஒளியை காற
புனலை சுகித்து வேருன்றி
காலத்தின் கனவை கிளை
சுழலால் வீழ்ந்த
அவர்களை எண்ணி
நான் முன்னேறியே இருக்



பா.அ.ஜயகரன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net



றை

யாக்கி

கின்றேன்.



கடற் கரைகளில் ஏறி
தெருவோரோங்களில் நாறி
நக்கும் நாய்களுக்கு உருசியாகி
வீதிகளில் ஈகளுடன் உறவாகி
என நாட்களைக் கொடுத்த
துயரை நினைந்து
நான் முன்னேறியே இருக்கின்றேன்.

எங்கோர் தொலைவில்
முகம் புதைந்த என் தேசத்தின்
எல்லைகளை மீறி
நான் முன்னேறியே இருக்கின்றேன்.

www.tamilarangam.net

# தேடலின் பக்கங்கள்

இந்தியா தனது ஆக்கிரமிப்பு திட்டத்தை கைவிடவில்லை. இலங்கை இனவெறி அரசின் கொலைவெறித் தாக்குதல்களாலும் திட்டங்களாலும், பொருளாதாரத்தடைகள் காரணமாகவும் தமிழர்கள் துன்பத்திற்குள்ளாகி இருந்த நேரம் மக்களுக்கு தங்கள் சக்தியின் மீது எந்த நம்பிக்கையும் கிடையாது. தமது சக்தியை மக்கள் உணர்ந்து கொள்ளாத முடியாதபடி சகலகதவுகளும் சாத்தப்பட்ட நிலைமை. 'எல்லாம் பெடியள் செய்வினம்' என்ற நம்பிக்கையும் பொய்த்துப்போன போது இனி எங்களைக் காப்பாற்ற இந்தியாதான் வரவேண்டும் (வருவானு?)
என்ற மனப்பூர்வமான ஏக்கம்.
இந்த நிலைமை திட்டமிட்டு உருவாக்கி விட்டு காத்திருந்த இந்திய அரசு, சமாதனப்படை என்ற போர்வையில் தமிழ் மக்களின் பிரதேசங்களை மட்டு மல்ல, இலங்கையையே ஆக்கிரமித்தன.

நீண்ட நாட்களுக்கு ஆக்கிரமிப்பு படைகளின் 'சமாதான வேடம்' தாக்குப் பிடிக்கமுடியவில்லை. ஆக்கிரமிப்பு படை தனது கோர முகத்தை மக்களுக்குக் காட்டியது. இந்தியப்படையை பெரும் பான்மை மக்கள் மனப்பூர்வமாக வெறுத்தனர்.

அரசியல் நிர்ப்பந்தங்களால் இந்தியப்படை இலங்கையை விட்டு வெளியேறியது. ஆனுல் இந்தியா இலங்கையை ஆக்கிரமிக்கும் தனது திட்டத்தை கைவிட்டு தோற்றுப்போய் திரும்பி விடவில்லை. தனது ஆக்கிரமிப்பு திட்டத்தினை வேறு வழிகளில் நிறைவேற்றும் திட்டங்களுடனேயே இந்தியப்படை தற்காலிகமாக வெளியேறியது. இதேசமயம் தமிழ் மக்கள் மத்தியில், அரசியல் ரீதியாக இந்தியா அம்பலப்படுத்தப்படவில்லை. இந்தியாவின் ஆக்கிரமிப்புக் கொள்கை களைப்பற்றியும், தமிழ் மக்களின் போராட்டத்தை எவ்வாறு கபடத்தனமான முறையில் இந்தியா பயன்படுத்துகிறது என்பதையும், இந்தியா சமாதானம் என்ற போர்வையில் முன்வைக்கும் தீர்வுகள் தமிழ்மக்களை எந்தளவுக்கு அழிவுக்கு இட்டுச் செல்லும் என்பதை பற்றியும் மக்களுக்கு புரியவைக்கப்படவில்லை. மாருக இந்திய இராணுவம் மக்களை கொன்றது, பெண்களை கற்பழித்தது, நகரங்களை அழித்தது என்ற ரீதியிலான செய்திகளையே மக்கள் கிரகித்து இருந்தனர். மக்கள் மத்தியில் இருந்த இந்நிலைமையை இந்திய உளவுப்படை மூலமாக அரசு தணித்தேவைத்திருந்தது.

இந்தியப்படை வெளியேறி;
புலிகள் அரசு யுத்தம் மூண்டு உணவுத் தடையை இலங்கையரசு விதித்தபோது மறுபடியும் இந்தியா வரவேண்டுமென மக்களில் கணிசமானவர்கள் மனப்பூர்வமாக விரும்புகிறார்கள். இந்த கசப்பான உண்மை இந்தியா பற்றிய மாயைகளிலேயே தமிழ் மக்கள் இருக்கின்றனர் என்பதற்கு எடுத்துக்காட்டாகும். மறுபுறத்தில் இந்தியா, 'என்னை போகச் சொல்லி விட்டீர்கள். இனி நீங்களே பிரச்சினையை தீர்த்துக்கொள்ளுங்கள்' என்றபோலியான செல்லக் கோபத்தை தமிழ் மக்கள் மீது காட்டிக் கொண்டு மறுபடியும் இலங்கைக்குள் எவ்வாறு தலையை நுழைப்பது என்று திட்மிட்டு செயற்பட்டு வருகிறது. ஆனுல் அடிக்கடி இந்தப் பிரச்சினையில், 'இனிமேல் தனக்கு பெரிய அக்கறை இல்லை' என்பது போல் உலகுக்கு பாசாங்கு செய்கிறது.

இந்திய இராணுவம் இலங்கையை விட்டு வெளியேறும் போதே தனக்கு ஆதரவான குழுக்களின் தலைவர்களையும், முக்கியமான உறுப்பினர்களையும் ஏற்றிக் கொண்டே இந்தியா திரும்பியது. பொம்மை அரசின் முதலமைச்சர் வரதாராஜப்பெருமாளை மிகவும் பௌத்திரமாகபாதுகாத்தது இந்திய அரசு. அவர் எங்கு இருக்கிறார் என்றே தெரியாமல் வைத்தது. இப்போது வரதராஜப்பெருமாள் மத்தியப்பிரதேசத்தில் உள்ள சந்தேரி என்ற சிறுநகரில் பலத்த பாதுகாப்புடன் பராமரிக்கப்பட்டு வருகிறார். 24 மணிநேர கமாண்டோ

www.tamilarangam.net

படைக்காவலும் டெல்லியுடன் நேரடித் தொலைபேசி வசதியும் கொண்டுள்ள அவா் குடியிருக்கும் மாளிகையில் . இவரையும் இவரது மனைவி குழந்தைகளையும் பராமரிக்க மத்திய அரசும் மாநில அரசும் இலட்சக் கணக்கில் பணத்தை செலவிடப்பட்டு வருகின்றன.

இங்கே தமிழகத்தில் ஈழ அகதிகள் நிவாரண உதவியும் மருத்துவசதியும் இன்றி அல்லற்படுகிறார்கள். அங்கே ஈழத்துரோகி பெருமாள் சுகமாக வாழ்கிறா். ஈழ விடுதலையின் மீது இந்தியஅரசு கொண்டுள்ள கரிசனையின் இலட்சணம் இதுதான்.இதுமட்டுமல்ல தனக்கு ஆதரவான தமிழ் குழுக்களுக்கு இராணுவப் பயிற்சி, நிதியுதவி என்பனவற்றையும் தனது உளவுப்படையின் மூலம் இந்திய அரசு வழங்கியுள்ளது.

இந்திய உளவுப்படை அதிகாரிகள் இந்தியச்சார்பு தமிழ் குழுக்களுடன் தொடர்ந்தும் உறவுகளை பேணி வருகின்றனர். இந்தியா இவர்களை கைவிட்டு விடவில்லை. தகுந்த நேரத்தில் கை கொடுக்கும் என குழுக்களை உற்சாகப்படுத்தினர். தமிழ் அகதிகள் பெருமளவில் வந்திறங்கும் இராமேஸ்வரத்தில் உளவுப்படை அதிகாரிகள் நாக்கைத் தொங்க போட்டபடி நாய்போல அலைகிறார்கள் என்றும் செய்தி வெளியாகியுள்ளது. தமிழர்களின் மன உணர்வுகளை நாடி பிடித்துப் பார்க்கவே இவ்வாறு உளவுப்படை அலைகிறது. இந்திய அரசியலின் ஸ்திரமற்ற தன்மை மாறி 'ராஜீவ்' மீண்டும் பதவிக்கு வந்தால் முன்னேற்றம் (?) ஏற்படும் என இந்திய சார்பு குழுக்களின் தலைவர்களே கருத்துக்களை வெளியே தெரிவித்துள்ளனர். இந்தியா தமக்கூடாக மீண்டும் இலங்கையினுள் ஏதாவது ஒரு வழியில் தலையிடும் என்று இந்த குழு தலைவர்கள் நம்புவது உண்மையே. இலங்கையை ஆக்கிரமிக்கும் திட்டங்களை இந்தியா கைவிட்டுவிடவில்லை. அதற்கான தயாரிப்பிலேயே ஈடுபட்டிருக்கிறது.

**இந்தியரசின் இரட்டைத் தந்திரங்கள் அம்பமாக்கப்படவேண்டும்.**

இலங்கை அரசு தீவிர இராணுவத் தாக்குதலின் மூலம் போராட்டத்தை நசுக்குவதென கங்கணம் கட்டியுள்ளது. அதேவேளை இந்தியா போராட்டத்தை நசுக்குவதற்கு இரட்டைத் தந்திரத்தை கையாளும்படி இலங்கையை நிா்ப்பந்திக்கிறது. ஒருபுறத்தில் இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டபடி மறுபுறத்தில் ஒரு சமரச வழிமுறையை பின்பற்றும்படி சொல்கிறது. புலிகள் தவிர்த்து பிற துரோகக்குழுக்களையும் தேசவிடுதலைக்கு எதிரான சக்திகளையும் இணைத்து இடைக்கால அரசை வடக்குகிழக்கு மாகாணத்தில் நிறுவும்படி ஆலோசனை வைக்கின்றது. இதன் மூலம் இலங்கையின் மீது மீண்டும் தான் ஆதிக்கத்தை நிறுவ முயல்கின்றது.

இந்திய ஆதரவு குழுக்கள் மூலமாக இடைக்கால அரசை நிறுவுவது இந்தியா தனது ஆதிக்கத்தை செலுத்த வழி வகுக்கும் என்றபயத்தின் காரணமாகவும் தமிழ் மக்களுக்கு எந்தவொரு அதிகாரத்தையும் அளிக்கத் தயாரற்ற நிலையும் ஏதாவது நொண்டிச்சாட்டுக்களை சொல்லி இலங்கைஅரசு இவ் ஆலோசனையை தட்டிக் கழித்து வருகின்றது.

அண்மையில் கொழும்பில் ரஞ்சன் விஜயரத்தின(கொல்லப்படுதற்குமுன்பாக) "இவ்வாறு இடைக்கால அரசை நிறுவுவது என்பது புலிகளின் கவனத்தை பிற இயக்கங்கள் மீது திருப்பிவிடும். இது அவர்களின் பாதுகாப்புக்கு ஆபத்தானது. ஆகவே இத்திட்டம் அமுல்படுத்தக் கூடியது அல்ல." இயக்கங்களின் பாதுகாப்பில் என்னே அக்கறை!

இந்தியாவினால் பிரேரிக்கப்படும் இவ் இரட்டைத் தந்திரத்தின் நோக்கம் ஒரு புறத்தில் தேசவிடுதலை சக்திகளை நசுக்கியபடி மறுபுறத்தில் அமைதி விரும்புவோராகவும் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் அக்கறையுள்ளவராகவும் காட்டிக் கொண்டு மக்களை போர்க்குணம் அற்றவர்களாக்கி விடுவதாகவும் உள்ளது.

'சுயநிர்ணய உரிமை'க்குக் குறைந்த எந்த திட்டத்தின் அடிப்படையிலும் தமிழ் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாது என்பதை கடந்த 40



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவம் காட்டுகின்றது. இதற்குக் குறைந்த தீர்வை ஏற்றுக் கொள்ளுங்கள் என்பதன் அர்த்தம் அடிமைகளாக வாழ்வதற்கு தயராகுங்கள் என்பதாகும்.

தமிழ் மக்களை தேசிய இனமாகவோ, அவர்களின் பாரம்பரிய நிலங்களை அங்கீகரிக்காததுடன் சுயநிர்ணய உரிமை அடிப்படையிலான கூட்டாட்சியையோ,படைவைத்திருப்பதற்கான உரிமையோ இலங்கை, இந்திய அரசுகள் பரீசிலிக்கத் தயராகவில்லை.

இவ் அரசுகள், தமிழர்கள் உரிமையுடன் வாழக்கூடிய எந்தத் தீர்வையும் ஏற்றுக் கொள்ளாது, என்பதையே இது தெளிவு படுத்துகிறது. இனஒடுக்குமுறைக்கு ஜனநாயகரீதியாகத் தீர்வு காணத் தயாரில்லை என்பதையும் நிருபிக்கிறது. இதற்குப்பதிலாக அதிகாரமற்ற மாகாண சபையை ஏற்றுக் கொள்ளும்படியும் ஆயுதங்களை கீழே போடும்படியும் பிரமேதாஸ அரசு சொல்கிறது.

அத்தோடு மக்கள்மீது மிலேச்சத்தனமான ஒடுக்குமுறைகளுக்கும்,தாக்குதல்களுக்கும் துணைபோய்க்கொண்டே இடைக்கால அரசு, வட கிழக்கு மாகாண இணைப்பு, ஜனநாயகத் தேர்தல் என பசப்புகின்றது இந்திய அரசு.

'போடு தோப்புக்கரணம்' என்றால் 'எத்தனை தடவை' யெனக்கேட்கும்; எஜமானிய விசுவாசத்துடன் உழைக்கும் துரோகக்குழுக்களைக் கொண்டு இடைக்கால அரசை நிறுவுவதற்கு முயற்சிக்கின்றது இந்திய அரசு. இதன் மூலம் தனது மேலாதிக்கத்தை நிறுவவும், தேசவிடுதலைப் போராட்டத்தை நசுக்கவும் திட்டமிடப்படுகிறது. இந்திய அரசினது ஒரு பக்கத்தில் நிஜத் தோட்டாக்களையும் மறுபுறத்தில் 'தேன்' தடவிய தோட்டாவையும் பிரயோகிக்கும் "இரட்டைத் தந்திரத்தை" எதிர்த்துப் போராடவேண்டும், அம்பலப்படுத்த வேண்டும்.

---

14ம் பக்க தொடர்ச்சி

எல்லாவிதமான தனிநபர் பயங்கர வாதம், அரச பயங்கரவாதம் மற்றும் வன்முறை அரசியல் என்பவற்றை நாம் நிராகரிக்க வேண்டும். இவ்வாறான அரசியல் மக்கள் தமது பிரச்சினைகளை தீர்ப்பதற்கான வழிவகைகளை கண்டுபிடிப்பதை தடைசெய்து வந்துள்ளது.

எதிர்கால இந்தியாவே எமக்கு முன்னால் உள்ள பிரச்சினை, மக்களின் பிரச்சினைகளுக்கு உண்மையான ஜனநாயகத் தீர்வுகாண்பதே எமது உடனடித் தேவையாகும். கொலைக் கும்பல்கள் அன்றி மக்களே இப்பிரச்சினைகளைத் தீர்ப்பதில் ஈடுபடுத்தப்பட வேண்டும். அராஜகமும் வன்முறையும் கொண்ட சூழலைத் தொடர்ந்தும் பேணிப் பாதுகாப்பதற்கு உதவும் எவராயினும் வல்லரசுகளதும் இந்திய அரசினதும் கைக்கூலியாகவே செயற்படுகிறார்கள். அவர்களின் செயற்பாடுகளை நாங்கள் எதிர்க்க வேண்டும். நாடு எதிர் நோக்கும் பிரச்சினைகளுக்கு நியாயமான தீர்வைக் காண்பதற்கான போராட்டத்தை முன்னெடுத்துச் செல்பவர்களையும் மற்றும் தமது உரிமைகளுக்காக போராடி இந்திய அரசின் வன்முறையினால் பாதிப்புக்கு உள்ளானோரையும் நாங்கள் ஆதரிக்க வேண்டும். அரசியல் வன்முறை மயப்படுத்தப்பட்டதன் விளைவாக சதாரண இந்தியர்கள் சொல்லொணா துன்பங்களுக்கு ஆளாகி யுள்ளனர். இத்தகைய அரசியலுக்கு நாம் ஒரு முடிவு கட்ட வேண்டும். இந்திரா காங்கிரசுக்கோ இந்திய அரசுக்கோ அல்லது அதன் கொள்கைகளை ஆதரிக்கும் வேறு ஏதாவது கட்சிக்கோ எவருடைய அனுதாபமும் ஏற்படுவதை அனுமதிக்கக் கூடாது.


நாட்டின் மீது வன்முறையை ஏவிவிட்டவர்களை ஏதாவது விதத்தில் அனுதாபத்திற்கு உரியவர்கள், பாதிக்கப் பட்டவர்கள் என்றும் காட்டுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மக்களாகிய நாம் இவ்வாறான பிரச்சாரங்களால் ஏமாறாமல் இருப்போமாக. நாம் ராஜீவ் காந்தியின் கொலை யை கண்டிக்கிறோம் ஏனென்றால் இவ்வாறான கொலைச் செயல்கள் இந்திய மக்களின் பொதுவாழ்வை வன்முறை மயப்படுத்தி சாதாரண இந்தியனை துன்ப, துயரத்துக்கு உள்ளாக்குகிறது.

இந்திய அரசியல் வன்முறை மயப்படுத்தலை எதிர்ப்போம்!

இக்கட்டுரை இந்திய முற்போக்கு ஆய்வுக்குழுக்களின் கூட்டமைப்பின் பத்திரிகைகளுக்கான அறிக்கையிலிருந்து தரப்படுகின்றது.

www.tamilarangam.net

# விடிவுக்காய்.....



அங்கு
நீங்கள்
இன்னமும் மக்களுக்காய் .

அந்நிய நாட்டில்
இங்கு
நான் . . . . . .

விடுதலையை
நேசித்ததால்
விலாசமிழந்து
போன நீங்களும் . . . . .

விரக்தியை நேசித்தால்
வெறுமையாய்
இருக்கும் நானும் . . . . .

இன்றுதான் அறிந்தேன்
நண்பர்களே!

மகிழ்ச்சியைத்
தொலைத்தவர்களில்;
மரணத்தைத்
தொலைத்தவன் நான் . . . .

இருப்புக்காய்
இருந்ததில்
வரலாறுய்ப்
போனது நீங்கள் . . . . .

கோரப் பற்களும்
கொடுர நகங்களும்;
காட்டின் புலிகளுக்கு
மட்டும்தான்
என்றிருந்தேன் . . .

நீங்கள்
சாம்பராக்கப்பட்ட
அந்த
மண்ணில்;

விடிவுக்காய் . . . .

இன்னமும்
காத்திருக்கும்;

உங்கள்
உணர்வுகள்.

அமுதன்

www.tamilarangam.net

# அடைப்புக்குறிகளுக்குள் உட்படுத்தப்பட்ட வாழ்க்கை

சுதர்ஷனு

எமது கலாச்சாரப் பின்னனியில் இருந்து வந்த பெண்களின் அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு, இன்றைய உலகின் ஆண், பெண் உறவு முறையின் உளவியல், சமூக, கலாச்சார, பொருளியல், அரசியல் பரிமாணங்களை விளங்கிக் கொண்டதாக எண்ணினேன். இவை, மேற்கத்தேய பெண்களின் அனுபவங்களை விட முற்றிலும் வேறுபட்டவை என்றும் எண்ணினேன். ஆனுல் ஜனட் டென்ச் போன்ற மேற்கத்தேய பின்னனியைக் கொண்ட பெண்களுடனுன கருத்துப் பரிமாறல் என் கருத்துக்களின் அறியாமையை சுட்டிக காட்டியது.

இன, மத, மொழி, கலாச்சார வேறுபாடுகளைக் கடந்து உலகெங்கும் பல பிரச்சனைகளை எதிர்நோக்கும் பெண்களை இணைக்கும் ஒரு பிரச்சனை மையமாக இருப்பது ஆண், பெண்களுக்கிடையிலான அதிகார ஏற்றத்தாழ் வென்றே கூறவேண்டும். தாய்வழிச் சமூகம் மாறித், தந்தைவழிச் சமூகம் உருப்பெற்ற நாள் முதல் மனித இனத்தில் ஆண் உயர்ந்தவனென்றும், பெண் ஆணிற்கு துணையிருக்கவே படைக்கப்பட்ட இரண்டாம் தர மனித இனம் என்னும் பொதுப்படையான கருத்தும் வலுப்பெற ஆரம்பித்தது எனலாம். பொருளாதார ரீதியில் எவ்வாறு அபிவிருத்தி அடைந்த நாடுகள், அபிவிருத்தி குன்றிய நாடுகள் என்று அந்நிலைக்கு வரக்காரண மாயிருந்த நிலைமைகள் கருத்திற் கொள்ளப்ப டாமல் வரையறுக்கப்படுகின்றனவோ; அவ்வாறே மனித இனத்தில் திறமைசாலி, திறமைகுன்றியவன் என்ற பாலடிப் படையிலான ஏற்றத்தாழ்வு, அவ்வேறுபாடு உருவாகி நிலைத்துநிற்க காரணமாயுள்ள நிலைமைகள் கருத்திற் கொள்ளப்படாமல் வரையறுக்கப்படுகின்றன.

எங்கே போகிறோம் என்ற கேள்விக்குப் பதில், நாம் எங்கிருந்து வந்தோம், எப்படிப்பட்ட அனுபவங்களுக் கூடாக சென்று கொண்டிருக்கிறோம் என்பதில்தான் தங்கியுள்ளது. எமது பெற்றோர் காட்டிய வழி நடக்கும் நாங்கள், எங்கள் பிள்ளைகளையும் அவ்வழியே நடத்திச் செல்கிறோம். ஆகவே, மரபுரீதியாகப் பேணப்பட்ட ஆண், பெண் என்ற வர்க்க அடிப்படையிலான அதிகார ஏற்றத்தாழ்வு காப்பாற்றப்படுகிறதேயொழிய, பெண்கள் அனுபவிக்கும் பிரச்சனைகளின் மையம் என்ன என்ற மீளாய்வு, சுயபரிசீலனை நடப்பதில்லை; நடக்க ஊக்கமளிக்கப படுவதுமில்லை.

ஜனட் குறிப்பிட்டது போல், பொருளாதார ரீதியில் கணிப்புப்பெறுத, பணப்பெறுமானம் அற்ற எந்தவொரு வேலையும் ஆணுதிக்க சமூகத்தால் மதிக்கப்ப டுவதில்லை. பிறரால் மதிப்புப் பெறுத வேலையை பெண் "வேலை" என்று கருதாத காரண த்திஞலேதான் காலைமுதல் மாலைவரை ஓயாது செய்யும் வீட்டு வேலைகளை "ஒன்று மில்லை" என்று ஒதுக்கிவிடுகிறுள். இவ் ஒதுக்கலில், தன் சுயமதிப்பு, சுயமரியாதை ஆகியவற்றையும் சேர்த்து ஒதுக்கிவிடுகிறுள். இதே காரணத்தில்தான், கனடாவிலும் நாள் முழுக்க வேலைத் தளத்தில் உழைத்துவிட்டு வீடுவரும் பெண் வீட்டைத் துப்பரவா க்கல், உணவு தயாரித்தல், குழந்தைகளை வயது முதிர்ந்தோரை பராமாரித்தல், ஆகிய கடமைகளையும் தனித்தே செய்கிறுள். இப்படிப்பட்ட உழைத்து மாளும் பெண், பெண்களுக்கே உதாரணமாகவும் தமிழ் மரபினை களங்கமின்றி காப்பவளாகவும் போற்றப்படுகிறுள். மாறுக குடும்ப பொறுப்புக்கள் கணவனுடன் பங்கிட்டு செயல்படும் பெண் கணவ னைக் கொண்டு வேலைவாங்கும் பண்பற்றவளாக தமிழ் பண்பாட்டை மாசுபடுத்தும் துரோகியாகவும் விமர்சிக்கப்படுகிறுள்; இல்லையேல் மேற்கத்தேய நாகரீக மோகத்தால்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பீடிக்கப்பட்டவளாக விமர்சிக்கப்படுகிறாள்.

வாக்குரிமை, விரும்பிய கல்வி, தொழில் துறைகளை தெரிவு செய்யும் சுதந்திரம், வாழ்க்கைத் துணையை தெரிவு செய்யும் சுதந்திரம், விவகாரத்துப் பெறவும், கருத்தடை செய்யவும் சுதந்திரம் பெற்றுள்ள இருபதாம் நூற்றாண்டு பெண் சம உரிமை கோரி குரலெடுக்கும் போது அவள் அடிப்படை உரிமை கோரியல்ல. "மாறாக ஆடம்பர, மேல்மட்ட, மேற்கத்தேய பாங்கிலமைந்த உரிமைகளையே" கோரி நிற்கிறாள் என்ற கருத்து பரவலானது என்றதொன்றே கூறவேண்டும். இக்கருத்து ஆண்கள் மத்தியில் மட்டுமல்ல சில பெண்கள் மத்தியிலும் நிலவுகிறதென்பதை மறுக்கமுடியாது. தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பெண்களுக்கும் சமபங்கு உண்டு என்று உணர்வுபூர்வுமாக ஏற்றுக் கொள்ளப்படாமல்; மனிதசக்தி பற்றுக்குறையை ஈடுசெய்யவும், குறை நிரப்பும் தீர்வாகவே பெண்கள் போராளிகளாக சேர்க்கப்பட்டார்கள் என்ற கசப்பான உண்மைக்கு முகங்கொடுக்க மறுக்கிறோம். போராட்ட சூழலிலும் மரபுரீதியாக பெண்களுக்கு ஒதுக்கப்பட்ட பாத்திரங்களில் (உ+ம்: உணவு தயாரித்தல், காயமுற்றோரை கவனித்தல்) அவர் கள் செயல்பட எதிர்பார்க்கப்பட்டமையும், ஏனைய இயக்கத்தவரால் கைப்பற்றப்பட்ட போது, "நீங்களெல்லாம் சும்மா அடுப்படியில் இருக்கவேண்டியது தானே" என்று எள்ளி நகையாடப்பட்டமையும் இவ்வுண்மையை வலுப்படுத்துகின்றன. கருத்தியல் ரீதியில் ஆணும், பெண்ணும் சரிநிகா் விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்கும் பொறுப்புடைய வா்கள் என்ற மனப்பாங்கு வளர்க்கப் படாமலேயே நாம் வழமைபோல் தேவை கருதி பிர யோகிக்கப்படும் வெறும் கருவிகளானோம். காலங்காலமாக, எவ்வாறு வெளிநாட்டு ப்படையெடுப்பு, உள்நாட்டுப் போர் சூழலில் எதிரியை பலவீனப்படுத்தும் கருவியாக பெண்கள் கற்பழிக்கப்பட்டார்க ளோ அதே போல் இன்றும் எம் சகோதரிகள் பலா் கருவி களாக, மனித சக்தியாக பாவிக்கப்படுகிறார்கள். கருத்தியல் ரீதியான கொள்கைகள் மரபுரீதியான கொள்கைகள் மரபுரீதியான ஆண், பெண் அதிகார ஏற்றத்தாழ்வுகளை சமநிலைப்படுத்தாமல் செயல்படுத்தப்பட் டமையால் அங்கு சிந்தனை, சொல், செயலுக்கி டையிலான ஒருங்கிணைவு வெளிப்படவில்லை. ஆகவே கொள்கையளவில் சமத்துவம் பேசி செயலில் ஏற்றத்தாழ்வுகளை நிலை நாட்டும் வஞ்சகர்களாய் மாறிவிட்டார்; வள்ளு வன் கூறிய கற்பையும் தவறவிட்டார் நம்மவர்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பெண்கள் பங்கு கொண்டமைக்கு 3 காரணிகளை அடையாளம் காணலாம்;

1. தாம் இணைந்த இயக்கங்களின் கொள்கையில், தலைமைத்துவத்தில், ஆயுதம் தாங்கிய போராட்ட முறையில் கொண்டிருந்த மனப்பூா்வமான நம்பிக்கை.

2. சமூக சூழல்களாலும், பெண்கள் காலங்காலமாக அனுபவித்த அடக்கு முறைகளாலும், விரக்தியும் வெறுப்பும் கொண்டு ஈழவிடுதலைப் போராட்டத்தை இவற்றிற்கு ஓா் வடிகாலாய் கருதியமை.

3. சமூக ரீதியில் கணிப்பும், மதிப்பும் பெறாத பட்சத்தில் இவ்வாறான போராட்ட நடவடிக்கையில் ஈடுபாடு தமக்கு மக்கள் மத்தியில் ஒா் மதிப்பை உருவாக்கும் என்ற நம்பிக்கை. ஆகவே, விடுதலைப் போராட்ட சூழலிலோ, அதற்கு வெளியிலோ பெண்களும் பங்குகொள்ளும் சமூக சீா்திருத்தங்களும், சமூக சூழல் களைதலும் இடம் பெறாததால் 1984 85 இல் செயல்பட்ட அன்னையா் முன்னனி சிங்கள இராணுவ ஆக்கி ரமிப்பை நீக்கவும், விசாரணையின்றி மறியலில் வைத்தலைக் கண்டிக்கும் எதிா்ப்பு ஊா் வலங்களை நடாத்துவதிலும் காட்டிய ஆா்வம் இந்திய இராணுவத்தின் அட்டூழியங் களையும், போராட்ட இயக்கங்களின் மனித உரிமை மீறல்களையும் கண்டிப்பதில் காட்ட வில்லை. இவ்வாறான மனித உரிமை மீறல்கள் குறித்து ஒருங்கமைந்த சமூக இயக் கமோ பெண்கள் அமைப்போ கண்டனம் தெரிவிக்கவில்லை. தெரிவிக்கக்கூடிய சுதந்திரமும் இருக்கவில்லை. துணிந்து நியாயம் கேட்ட ஒரு சில தைரியசாலிகள் கொலை செய்யப்பட்டார்கள். ஆகவே எதையும் தாங்கும் தாய்க்குலம் அதையும் தாங்கிக் கொண்டது.

அரசியலில் பழமைபேணும் நடுநிலைவாதிகள், பாரளுமன்ற அமைப்பின் கீழ் இன, மத, மொழி, பால் வேறுபாடின்றி சம அந்தஸ்து யாவருக்கும் உண்டெனவும், பௌத்த மதத்தில் பெண்களையும் உயா்பதவிநிலை ஸ்தானங்களுக்கு அனுமதித்த புத்தா் 2500 வருடங்களுக்கு முன்பே பெண்களுக்கு சம அந்தஸ்து கொடுத்துவிட்டாா் எனவும், நிகழ்கால



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் முன்னெடுப்போர் அர்த்தமற்ற, தேவையற்ற நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள் என்றும் கருதுகிறார்கள். வலதுசாரி அல்லது முற்போக்குவாதிகள் இதற்கு சளைக்காது சோஷலிசம் பெண்களுக்கு சம அந்தஸ்தை கொடுக்கும் எனவும், நிலவும் வேறுபாடுகளும், சுயநலத்திற்காக சுரண்டுதலும் மறைந்துவிடுமென கூறினாலும், இதுவரை கருத்துரீதியாகவேனும் சோஷலிச வாதத்தில் பெண்களின் நிலை, பிரச்சினைகள் பற்றியோ எடுத்தாராயப்படவில்லை.

சில மாதங்களுக்கு முன் சிநேகிதி ஒருத்தியின் வீட்டிற்குச் சென்றிருந்தேன். மணிக்கணக்காக தாய்நாட்டு நிலைமை, அகதி வாழ்வின் அவலங்கள், கனடாவில் தமிழ்ச் சமூகத்தின் தேவைகள் இப்படிப் பலவற்றை அலசிவிட்டு இலங்கையிலும் கனடாவிலும் கையாளும் சில சமையல் யுக்திகளைப்பற்றிப் பேசத் தொடங்கிய போது தொலைபேசி அழைத்தது. பேசியவர் சிநேகிதியின் கணவர், நான் வந்திருப்பதை அறிந்ததும் "என்ன பேசிக்கொண்டிருக கிறீர்கள்?" என்ற கேள்விக்கு சிநேகிதி சுருக்கமாக "சமையல் பற்றி" என்று பதிலளித்தது காதில் விழுந்தது. அதற்கு சிநேகிதியின் கணவர், "இதென்ன வேறுபல நல்ல விடயங்கள் இருக்க போயும் போயும் சமையல் பற்றியா தொலைவிலிருந்து வந்த சிநேகிதியிடம் பேசுகிறீர்" என்று அங்கலாய்த்ததாக சிநேகிதி கூறினார். எனக்கு விடயம் விளங்கவில்லை. (பிறகு விளங்கிற்று) சராசரி ஆணைப்போல் இவரும் பெண்கள் கூடினால் சமையல் பற்றியும், தையல் பற்றியும் மட்டுமே அளவளாவுகின்றனர். பெண்கள் முன்னேற பொதுவிடய அறிவும் வளர்க்கவேண்டும் அவ்வாறு அவர்கள் வளர்க்கப்பட ஆண்களின் ஊக்கமும் வழிநடத்தலும் வேண்டும் என்ற கருத்தை பிரதிபலித்ததாக எனக்குப் பட்டது.

எமது சமூகத்தில் சிறிது முற்போக்கு கருத்துக்களை வெளிப்படுத்தினால், இல்லை உரையாடல்களில் "பெண்ணுரிமை" என்ற சொற்றொடரை உபயோகித்தல், இல்லை மரபுரீதியாக பேணப்பட்டுவரும் ஆண்வர்க்க ஆதிக்கத்தை விமர்சித்தால், கைதவறி கவிதை எழுதினால், "சேலைகட்டிக் கொண்டு ஏன் பேசவேண்டும்? காற்சட்டை அணிந்த கொண்டு சமஉரிமை கோஷமிடலாமே?" என்று பேனாவால் போர் தொடுக்கின்றனர் சிலர்; இதற்கு "ஆமா" போடுகின்றனர் பலர். ஆக, சேலைகட்டிக்கொண்டு சமஉரிமை கேட்கவும் முடியாது. காற்சட்டை அணிந்து கொண்டு தமிழ் பெண்களின் பத்தினித் தன்மையையும் நிலைநாட்ட முடியாது" இக்கட்டான நிலையடா நமக்கு!

ஆணாதிக்க செயல்பாடுகளையோ, அமைப்புரீதியிலான ஆண், பெண் ஏற்றத்தாழ்வுகளையோ சுட்டிக்காட்டுவது மட்டுமல்ல நடைமுறையிலிருக்கும் பத்திரிகைகள், சஞ்சிகைகள், நாவல்கள், திரைப்பட, தொலைக்காட்சி போன்ற பொதுசன தொடர்பு சாதனங்களில் ஊடுருவிக் காணப்படும் இவ் அம்சங்களை விமர்சிப்பதும், மனித உரிமைகள் மதிக்கப்படுவதும், ஓர் சம அந்தஸ்து சமுதாயத்தை உருவாக்கும் பாதையில் நாம்எடுத்து வைக்கவேண்டிய முதலடிகள் எனலாம்.

தமிழ்த்திரைப்பட உலகில் சித்தரிக்கப்படும் இந்த ஆண், பெண் களுக்கிடையிலான ஏற்றத்தாழ்வான அதிகார உறவுமுறை மனித உரிமை மீறல் கள் எமது கலாச்சாரத்தில் நிலைபெற எவ்வளவு தூரம் துணை செய்கின்றன என்பதை சுட்டிக் காட்டுகின்றன.

காட்சி 1 :காதலனோடு தங்கையைக் கண்ட அண்ணன் சீறி விழுகின்றான். தங்கையோ கண்ணீர் வடித்தபடி என்னை அடி. அதற்கு உனக்கு உரிமை இருக்கிறது. .... என்று கூறுகிறாள். ஆகவே ஒரு பெண்ணை அடக்கவும், வதைக்கவும் அண்ணனென்ற அந்தஸ்து ஒர் ஆணிற்கு அதிகாரம் கொடுக்கின்றது.

காட்சி 2: மனைவியை தவறாகச் சந்தேகிக்கும் கணவன் அவளை சொல் செயலால் துன்புறுத்துகிறான். மனைவியோ "உங்கள் வாயால் இந்த அவமானத்தைக் கேட்பதைவிட நான் சாவதே மேல். உங்கள் கைகளாலேயே என் கழுத்தை நெரித்து விடுங்கள்." என்று கழுத்தை நீட்டுகிறாள்.

(இரண்டாம் முறை)

ஆகவே ஒரு பெண்ணின் உயிரை எடுக்கும் அதிகாரத்தை கலாச்சாரம் என்ற ஏதோவொன்று ஓர் ஆணிற்கு கையளிக்கிறது. குட்டக் குட்ட குனிவதால் குட்டுபவனின் அத்துமீறல்களுக்கு எம்மௌனத்தாலும், சகிப்புத் தன்மையாலும் உரமேற்றுகிறோம்; சமூக நல் வாழ்விற்கு

www.tamilarangam.net

உலைவக்கிறோம்.

ஆண்மகன் பலம் வாய்ந்தவனாகவும், கலங்கி கண்ணீர்விடாத புருஷனாகவும் சித்தரிக்கப்பவதால், ஆண் குழந்தை அழும்போது நாம் "நீ ஆண்பிள்ளை அழலாமோ?" என்றும், பெண்குழந்தை அழும்போது, "அவள் பெண்ணல்லவா அதுதான் அழுகிறாள்" என்றும் நியாயப படுத்துகிறோம். (ஆண், பெண்களுக்கடையிலான அதிகார ஏற்றத் தாழ்வு என்ற நச்சுப்பயிருக்கு வித்திடுகிறோம்.) ஆகவே எச் சூழ்நிலையிலும் கலங்காத ஓர் மனிதனாக இருக்க ஆண் எதிர்பார்க்கப்படுகிறான். இயற்கைக்கு விரோதமாக உணர்ச்சிகள் அடக்கப்படும் போது, ஆக்கபூர்வ முறையில் அவை வெளிக்காட்டப்படாதபோது குடிபோதை, குடும்ப, சமூக வன்செயலில் ஈடுபாடு, கோபம் ஆகிய குறிகள் வெளிப்படுவதைக் காணலாம்.

ஜனட் கூறியதுபோல் புதுமையை எதிர்கொள்வதும், மாற்றங்களை எம் வாழ்வில் அனுமதிப்பதும் கடினமானது, துன்பமிக்கது. ஆகவேதான் எமக்கு நாமே தீராத விரோதிகளாகி விடுகிறோம். பழமையை கண் மூடித்தனமாக கட்டிக்காப்பதை பெருமையாகவும், புதுமையைக் கூட தீர அலசி ஆராயாமல் முழுவதுமாய் ஏற்றுக் கொள்வதை நாகரீகமாகவும் கருதுகிறோம். இதற்கிடையிலும் ஓர் நிலையுண்டு என்பதை பல வேளைகளில் ஏற்றுக்கொள்ளத் தயங்குகிறோம்.

ஆகவே இன, மத, மொழி, கலாச்சார வேறுபாடின்றி, சமூக பொருளாதார ஏற்றத் தாழ்வுகளையும் கடந்த விரும்பிய தொழில் துறையில் ஈடுபடவும், உழைப்பிற்கேற்ற ஊதியம் பெறவும், பயமின்றி நடமாடவும், குடும்ப, சமூக வன்செயல்களிலிருந்து காக்கப்படவும், ஆணாதிக்க சமூகத்தின் நுகர்பொருளாய் கருதப்படுவதையும், சித்தரிக்கப்படுவதையும் முறியடிக்கவும் பெண் என்ற மனித இனம் உரிமையுடையது.

கணவனின் தூய்மையை நிருபிக்க ஒரு நகரையே தீக்கிரையாக்கி மனித உரிமை மீறல் செய்த கண்ணகி வேண்டாம்; கணவனின் ஆசையைப் பூர்த்தி செய்ய தாசி வீட்டிற்கு தலையிற் சுமந்து சென்ற பதிவிரதை நளாயினியும் வேண்டாம்; தவறேதும் செய்யாத தன்னை களங்கம் உள்ளவள் என்ற ஊராரின் பழிச்சொல்லிற்கு தலைவணங்கிய இராம பிரானின் பத்தினி சீதையும் வேண்டாம். எந்தவித அநீதியையும் மௌனமாக சகிக்கவல்ல அநீதிக்கு சாவுமணி அடித்து நியாயத்தை நிலைநாட்டவும், ஆக்கபூர்வமான மாற்றங்களை உருவாக்கவும் அழைக்கப்படுகிறோம். அநியாயம், சமூக ஊழல்கள், மனித உரிமை மீறல்கள் ஆகியவற்றை அழித்து புதிய சிருஷ்டிப்புக்கு வழிவகுக்கும் துர்காக்களாக எம் பெண்ணினம் வளரவேண்டும், வாழவேண்டும். 21ம் நூற்றாண்டின் வாயிலில் நிற்கும் மானிட வளர்ச்சியில் பெண்களுக்கான அழைப்பு இதுவே (ஜனட் டென்ஞ் என்பவர் மொன்றியலில் வாழ்பவர். ஒரு சமூக சேவகி. பெண்கள் நிலை சம்பந்தமாக இவர் எழுதிய கட்டுரையே வைத்து இக்கட்டுரை எழுதப்பட்டது.) சுதர்ஷனா

---

குடும்பச் சுமையென குமைந்து வாழ்வதா?
மறுமணம் ஒன்றுதான் வாழ்வென்று இல்லை,
உழைத்துண்டு வாழும் சுதந்திரம் வேண்டும்.

உலகினில் பாதி பெண்களானாலும்
சுதந்திரம் என்பது பெண்களுக்கில்லையே!
தாலியும் வேலியும் இடையினில் வந்தது.
"நாணமும், அச்சமும் நாய்கட்கு" உகந்தது.
எத்தனை காலம் பழமையில் அழிவது.
நவயுகம் காண நங்கைமீர் வாரீர்.

சன்மார்க்கா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வெறும் சமாதியல்ல நான் .

எனதருமைத் தேசமே...,
என் வயிற்றினுள்
உன் புதல்வன் ஒருவன்
உயிரின்றி உறங்குகின்றான்,

புதைத்து விட்டதாக எண்ணி
விதைத்து விட்டுச்
சென்றவர்கள்
அவன் விருட்சமாக
வளருவதை
அறியவில்லை...,

எந்த மண்ணை நேசித்தானோ
அந்த மண்ணே அவனை
மூடியிருக்கிறது.. அதுவும்
தனக்கு பெருமைதானும்,

என் தேசமே..,
அவன் உணர்வுகளின்
வெப்பத்தை நான்
உணருகின்றேன்..
உறுதியான அவன் கால்கள்
வலிமையாக என்
வயிற்றைக்
கிழிக்கின்றன..,
மரணத்துக்குப் பின்னும்
வாழ்க்கையுண்டாம்..
இன்றைய இழப்புக்கள்
நாளைய புதிய பிறப்புக்களின்
பிரசவ வேதனையாம்..

அவனது அஞ்சலிக்காக
எனது தலையில் குத்தப்பட்ட
"ஏ.கே.",
தன்னை மீண்டும் திசை
மாற்றிவிட வேண்டாம் எனத்
தவம் செய்கிறது..

அவன் அன்றுடம்
என்னுடன் பேசுகின்றான்...,
போராட்டத்தில் இழப்புக்கள்
சகஜம் என்பவர்கள்..,
வாழ்வதற்குத்தான்
போராட்டம் என்பதை
அறியவில்லை என்கிறான்.,
கோலங்கள் போடும்
முற்றங்களை
விட., கோட்டான்கள் கத்தும்
மயானங்கள் அதிகமாகின்றன
என்கின்றான்..,
தன் வார்த்தைகளின் சீற்றம்
வாழ்ந்து
கொண்டிருப்பவர்களைச்
சிந்திக்க வைக்கும்
என்கிறான்..

www.tamilarangam.net

உயிரற்ற உடல்கள் உக்க
வைப்பதற்கு மட்டுமே
பயன்பட்டு வந்தேன்..,
ஆனால் இப்போது ...
உண்மைகளை மீண்டும்
உயிர் பெற வைக்கும்
நிறைமாதக் கர்ப்பிணி நான்...
,
போராடும் தமக்கு உரிமை
மட்டுமே
என்றவர்கள் கூட,
இறப்புக்கள் மட்டுமே
தியாகம்
என எண்ணி இடையிடையே
அழிந்து போகிறார்கள்..
அப்போது மட்டும் நான்
ஏனோ கருவுற மறுத்து
மலடியாகி விடுகிறேன்..,

என் தேசமே..,
உடல்களுக்கு மட்டுமே
சமாதி.,
உணர்வுகளுக்கு அல்ல.,

ஓ..
எமது இன்னொரு மைந்தனின்
வலிய கரங்கள் என்
வயிற்றைக்
கிழித்துக் கொண்டு
வானத்தை நோக்கி
மேலே எழுகின்றன.,

நான் காதலிக்கும் என்
தேசமே..,
நாளைய புதிய பிறப்புகளுக்கு
இன்றே உன்னைத் தயாராப்
படுத்திக்கொள்...!

எனதருமைத் தேசமே..,
என் வயிற்றில் விரிசல்கள்
தோன்றுகின்றன.., அந்த
விரிசல்களினூடே
விடியலை நோக்கி அவன்
கைகள்
வேகமாக எழுகின்றன..,
ஓ.. அந்தக்
கைகளுக்குத்தான்
எத்தனை வலிமை..,
செம்மண் பிரண்ட
செழிப்பான கைகள்,
சுட்டு விரலை எட்டத் தூக்கி
சூரியனை உதிக்கச்
சொல்கின்றன..,

எனது தேசமே...,
நான் பூரித்துப் போகிறேன்
இவ்வளவு காலமும்
நானே வெறும் சமாதி..,

சபா வசந்தன்

www.tamilarangam.net

# தாயகம்
## சில கருத்துக்கள்

பதுங்கு குழிகளில் மக்கள் மட்டுமல்ல உண்மைகளும் பதுங்கிவரும் என்று எண்ணிடுவோரின் முட்டாள் தனத்தை அம்பலமாக்கி தொடர்ந்து வெளிவரும் தாயகம் பாராட்டிற்குரியது.

புலம் பெயர்ந்தோரால் மட்டுமல்ல நாட்டிலிருந்தும் வெளிவரும் கட்டுரை, கவிதை, நாடகம், சிறுகதை அனைத்தையும் தொடர்ந்த விமர்சிக்கவே தேடல் விரும்புகின்றது.

இம் முயற்சியில் முதல் அங்கமாக தாயகத்தின் ஏடிட்டோரியல் பற்றி எழுதிட தேடல் முடிவு செய்தது. அதன்படி அதற்கான அறிவித்தலை வெளியிட்டது. இதன் பின்னர் தேடலை நோக்கி கடிதமூலமும், நேரிடையாகவும் பலர் தங்கள் கருத்தினை முன்வைத்துள்ளார்கள். அவர்கள் கருத்துக்களை ஆராய்ந்த பின்னரும் தேடல் தொடர்ந்து தாயக விமர்சனத்தை முன்வைப்பதாகவே முடிவு செய்துள்ளது. எதிர் வரும் இதழ்கழில் விமர்சனம் வெளிவரும்.

சென்ற இதழில் வெளிவந்த அறிவித்தலைத் தொடர்ந்து எமக்குக் கிடைத்த கடிதங்கள் சிலவற்றை இங்கு பிரசுரம் செய்கிறோம்.

இன்றைய காலகட்டம் அராஜகத்திற்கு எதிரான போராட்டத்தை நடாத்த வேண்டிய காலகட்டமாகும். அராஜகத்திற்கு எதிரான படைக்கப்படுகின்ற எந்த படைப்புமே விமர்சிக்கப்பட வேண்டியவையல்ல. அதற்கு மாறாக ஆக்கமும் ஊக்கமும் கொடுக்கப்பட வேண்டியவையே. தாயகம் இன்று விமர்சிக்கப்படுவது உங்கள் புலிகளின் நிலைப்பாட்டை பகிங்கரப்படுத்தும் முயற்சியே அன்றி வேறல்ல.

க.நவநீதன். மொன்றியல்.

தாயகத்தின் ஏடிட்டோரியலோடு முரண்பாடு கொண்ட பலர் தாயகத்திலேயே எழுதி வருகின்றார்கள். இருந்தும் தாயகத்தை ஆதரித்தும் வருகின்றார்கள். புலிகளுக்கு எதிராக குரல் கொடுக்க முடியாமல் இருந்த நிலைதனை மாற்றியதில் தாயகத்திற்குள்ள பங்களிப்பை நீங்கள் மறுக்கின்றீர்களா?

சி.கலாமோகன ஸ்காபரோ,

நான் தொடர்ச்சியாக தேடகம் வந்து போய் கொண்டிருப்பவன். எனது நண்பர்கள் தேடகம் நடத்துபவர்கள் புலிகளின் எதிரிகளல்ல. அவர்களும் புலிகள்தான் என்று அடிக்கடி சொல்வார்கள். நானும் தாயகத்தில் வரும் செய்திகளை பார்த்து உண்மையாக இருக்குமோ என்று எண்ணத் தொடங்கினேன். இம்முறை வெளிவந்த தேடல்; தாயகம் பற்றி உங்கள் நிலைப்பாட்டை தெளிவுபடுத்த தொடங்கியுள்ளது. என் நண்பர்கள் போன்ற பலர் தாயகத்திற்கும் உங்களுக்கும் உள்ள தொடர்பினை சந்தோஷமாகவே பார்க்கின்றார்கள். வழமைபோல் இம்முறையும் காலம் தாழ்த்தாமல் தேடல் தாயக விமர்சனத்துடன் வெளிவரும் என்று எதிர்பார்க்கிறேன்.

எஸ்.நாகராசா வெலஸ்லி,

நண்பர்களே! என்ன நடந்தது? தாயகம் பத்திரிகைக்காக உயிரைக் கொடுத்து வேலை செய்தீர்களே ? இப்பவாவது புரிந்து கொண்டீர்களே அது வரைக்கும் நல்லது தான். இங்கு சில பத்திரிகைகள் புலிகளுக்கு ஆதரவு இல்லையென்று சொல்லிக் கொண்டு புலிகளுக்கு ஆதரவு கொடுப்பது போலன்றி எந்தவித தயக்கமுமின்றி தாயகத்தின் போக்கினை விமர்சியுங்கள். வருமோ, வராதோ என்று நாம் எண்ணுமளவிற்கு காலம் தாழ்த்தாமல் முடிந்த வரை விரைவில் அடுத்த தேடல் எதிர்பார்க்கின்றேன்.

க.சந்திரமோகன ரொரன்ரொ.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பெரிய இடத்து அன்பு

"அம்மா, அம்மா " மிகவும் பயந்த சுபாவத்துடன் கூப்பிட்டான். அதற்கே இம்சை தாங்காதவள் போல மங்களம் முகத்தைத் தணலாக்கிக் காட்டினுள். "கருவாரி, நோக்கு எத்தனே தரம் சொல்கிறது. வாசக்கதவு ஒருக்களிச்சு இருந்தா ஆத்துல சாப்பிட்டுண்டு இருக்கோம்னு, போ, போ, அப்புறம் வா"

"அய்யாட்ட இரண்டு மட்ட கேட்டருந்தேன்."

"எதுவாயிருந்தாலும் சயங்காலம் வா. கேட்டுக்கலாம்."

"சரிம்மா. . ." அவன் திரும்பிய போது, மங்களத்துக்கு ஞாபகம் வந்தது. "ஏய் கருவாரி சாங்காலம் உம் பெண்டாட்டிய சுருக்கா வரச் சொல்லு. கொல்லேல சாணி குவிச்சு கிடக்கு. ரெண்டு நாளா சாணந்தட்டுல. இன்னேக்காவது நேரத்தோட வரச் சொல்லு."

"சரிம்மா" என்று அதற்கும் தலேயாட்டிக் கொண்டான். அவனேத் திட்டினுல் கூட தலேயா ட்டிக் கொள்வது கருவாரிக்கு பழக்கமாகிவிட்டது.

உள்ளுக்குள் ராமமூர்த்தி விட்ட இடத்திலிருந்து தொடர்ந்தார்.

"மங்களம், பருப்பு பொடியை போட்டுட்டு, நெய் ஊத்தாம எங்கடி போன?"

"எல்லாம் உங்களாலதான், அந்த கருவாரி வந்திட்டான். அவனுக்கு ஏதோ மட்டை தரேன்னு சொன்னேளாமே?"

"ஆமாம் சொல்லியிருந்தேன். ஒரு வாரமா நச்சரிக்கிறுன். போனு போறதடி. அந்த கொல்லேல கிடக்குறத கொடுத்துடு"

"உங்களுக்கு ஏன்னு, வாய் கொழுப்பு? வித்தாலும் காசு வரும். அவன் கிட்டே இல்லேன்னு சொன்னு தலேயை எடுத்துடுவனு?"

"மங்களம் நோக்குத் தெரியாதா. அந்தக் கருவாரி என் அப்பா காலத்துலேர்ந்து நம்ப ஆத்துல, குடும்பத்தோட பண்ணேல இருக்கான். தானு ஒரு தேங்காயோ, மட்டையோ அவன் எடுக்கறதில்ல. அவன் கேக்கிறதையும் சமயத்துக்கு கொடுத்தா தாண்டி இன்னும் நம்பிக்கையா இருப்பான். "

மங்களத்துக்கு அர்த்தம் புதிதாய் இருந்தது. அவளேப் பார்த்து புன்னகைத்து இன்னும் காரணம் சொன்னுர். "அது மட்டுமில்லடி; பண்ணேக்கார பசங்கெல்லாம் முன்ன மாதிரி இல்ல. நாம கருவாரிக்கு அப்பப்ப ஏதும் கொடுத்தோம்னுதான் மத்தவாளே இவனே 'கண்ட்ரோல்' பண்ற அளவுக்கு நம்மேலேயும் ஒரு பிரியமாக இருப்பான்" பேச்சுக்கிடையே மறந்து விட்டதை அவசரமாய்க் கேட்டார்.

"அதுக்கும் வயசாயிடுத்தே. ஆனு நான் ஆத்த வூட்டு அந்தாண்ட இந்தாண்ட நகர்ந்தா மட்டும் கூடவே வந்துடறது. இந்த எச்ச சாதத்த அதுக்குப் போடு."

தனக்கு முக்கால் வயிறு நிரம்பியவுடன் வழக்கம் போல ராமமூர்த்திக்கு தன் செல்லப்பிராணி ரோஸ்னியின் ஞாபகம் வந்தது. மதியம் சாப்பிட்டவுடன் ரோஸ்னியுடன் கொஞ்ச நேரம் ஆங்கிலத்தில் கொஞ்சி ஓய்ந்தால்தான் ராமமூர்த்திக்கு தூக்கம் வரும்."

" ஹேய் ரோஸ்னி . . கமான் டியர். . ."

அதன் கழுத்தில் இறுகலாய் இருந்த பெல்டைத் தளர்த்தி பிடரியை நீவி கொடுத்தார்.

மங்களத்துக்கு அதைப் பார்க்க சகிக்கவில்லே. "ரொம்பத்தான் நாயைக் கொஞ்சறேள், பெத்த புள்ளேயாட்டமா"

நோக்கு என்னடி தெரியும்.ஒவ்வொரு நா நான் வயலுக்கும் தோப்புக்கும் போறச்சே எனக்குத் துணையா ரோஸ்னி தாண்டி வரும். அந்த கருவாரி பய கூட சமயத்துல இருக்கமாட்டான். ஆனா நம்ப ரோஸ்னி இருக்குப் பாரு, பிறத்தியார் யாரையும் என்னண்ட விடாது

"ஒருதரம் அப்படித்தான் நம்ப குத்தகை நிலம் தகராறு சம்மந்தமா என்னண்ட பேச நம்மூர் சப்இன்ஸ்பெக்டர் வந்திருந்தார். அவர் பாட்டுக்கு சகஜமா வந்ததுதான்

www.tamilarangam.net

தாமசம். நம்ப ரோஸ்னி 'குபீர்ன்னு' அவர் மேல பாஞ்சுடுத்து"
"அய்யய்யோ அப்புறம்" மங்களம் பாரதக் கதை கேட்பது போல வாயைப் பிளந்தாள்.
"அப்புறம் என்ன, நான் குரல் குடுத்தோண்ணே நகர்ந்துடுத்து. அப்புறமும் எஸ்.ஐ முகத்தயே உத்து, உத்து பாத்து முறைச்சுது"
"அவர் ஏதும் கோவப்படலயா ?"
"எனக்கும் என்னடா திடீர்னு இப்படி ரோஸ்னி திருடன பிடிக்குறாப்பல எஸ்.அய். மேல தாவிடுத்தேன்னு கொஞ்சம் சங்கோஜந்தான். ஆனா அவர் பக்கா ஜென்ட்டில்மேன். 'எங்க டி.அய்.ஜி.க்கு இது தேவலாம்னு ஜோக் அடிச்சிட்டு போயிட்டார்.' அந்த அளவுக்கு ரோஸ்னிதான் எனக்கு பாதுகாப்பு. அதான் அதை வயசாயிடுத்தேன்னு நாய் புடிக்கிறவங்கிட்ட கொடுக்காம வச்சிருக்கேன்"
"போறும். உங்க நாய் புராணம். இப்ப ரோஸ்னி இருக்குற நிலைக்கு தெருநாய் புடிச்சாக் கூட தாங்காது. அவ்வளவு வீக்கா இருக்கு. அது சீக்கு புடிச்சு நம்ப பிராணனை வாங்கற துக்குள்ள தலை முழுகுங்கோ"
"ஆமாண்டி மங்களம். இத மாதிரியே வேற நல்ல நாயா நம்ப கணக்குப் புள்ளையவுட்டு பார்க்கச் சொல்லனும்"
"நீங்க பணத்தை செலவழிச்சு ஏதாவது ஒரு நாய வாங்கச் சொல்லாதேள். நல்லா ஜாதி நாயா பாத்து வாங்குங்கோ"
மங்களம் நாய் வளர்ப்பிலும் ஆச்சாரத்தைக் கடைப்பி டித்தாள்.
"சரி, சரி மங்களம் நான் பாட்டுக்கும் தூங்கிடுவேன். நீ மறக்காம சாயங்காலம் அஞ்சு மணிக்கெல்லாம் என்னை எழுப்பி விடு. கொற்கைக்கு போயி அந்த தோப்பு விஷயமா கருவாரிகிட்ட காட்டனும். அவனும் வருவான். என்னையும் மறக்காம எழுப்பிவிடு"
ராமூர்த்தி ஊஞ்சலில் பரந்து சாய்ந்தார். ரோஸ்னி அவர் காலுக்கடியில் தலை சாய்த்து கிடந்தது.

"காருவாரி வந்துட்டியா ? வா, வா சீக்கிரம் போயி வண்டியைக் கட்டு ராமூர்த்தி வாய் வழிய வெற்றிலை குதப்பியும் மரபு மாறாமல் இன்னுமொரு வெற்றிலைக்கு முதுகில் சுண்ணாம்பால் தடவிக் கொடுத்து, கழுத்து நெறித்து, வாயில் திணித்தார். அப்படி அவர் வாய் வழியப் போட்டு உதட்டை நீவி விட்டுக் கொண்டு, தலையை ஒரு சொடுக்கு சொடுக்கினால் கருவாரிக்கு அர்த்தம் புரிந்துவிடும். மாட்டை வாசற்படியோரம் அணைத்து ஒட்டி வண்டியை வாகாய் நிறுத்தினான். ராமமூர்த்தி முதலில் ஏற, ரோஸ்னியும் (நாயும்) வண்டியில் ஏறி அவர் பக்கம் அணைந்து கொண்டது.

ஆனாலும் அதன் நடவடிக்கை முன்னைப் போல் சுறுசுறுப்பாய் இல்லை. முன்பு ராமமூர்த்தி எங்காவது புறப்பட்டால், அமைச்சர் வந்தால் தாண்டி குதிக்கும் அதிகாரிகளைப்போல இருந்த ரோஸ்னி, இப்பொழுதெல்லாம் ஓட்டு போட்டு வந்தவன் போல் எதையோ எதிர்பார்த்து களைத்து கிடந்தது. ராமமூர்த்தி வெற்றிலை விசிறித் துப்பிவிட்டு கனைத்துக் கொண்டார்.
"கருவாரி நேத்து உங்கிட்ட சொன்னதெல்லாம் ஞாபகமிருக்கா? இடத்தக் காட்டத்தான் இப்ப உன்னையும் அழைச்சிண்டு போறன்."
காருவாரிக்கு அவர் ஆரம்பித்த வார்த்தை உள்ளுக்குள் காலை உதைத்தது மாதிரி இருந் தது. இருப்பினும் உடன் எதிர்ப்பை வெளிப்படுத்த முடியாமல் திணறினான். அது எதிர்ப்பு கூட கிடையாது. இருப்பினும் முதலாளியிடம் தன் விருப்பத்தை தெரிவிப்பதே எதிர்ப்புத்தான் என்பதை அனுபவமாக கற்ற காரணத்தால் தயங்கினான். "அதனால பரவாயில்ல எசமான், நானே தோப்பக் கண்டுக்கிறன். தினம் பகல்ல மட்டும் போயி வந்துடறேன்."
"போடா! அபிஷ்டு. அங்க ராக்காவலுக்கு சரியான ஆளு வேணுன்னுதான் உன்னப் போடறேன்"
"அப்ப தினம் ராவுல மட்டும் போகட்டுங்களா?"
"என்னடா, நோக்கு என்னாச்சு, பயப்படற, உனக்கு தோப்பு ஓரத்துலேயே ஒரு வீடு கட்டித் தரேன். கொட்டா போட்டுண்டு,நீயும் உன் பெண்டாட்டி ராசம்மாவும் ஜோரா இருங்களேன்."
ராமமூர்த்தி தன் ஆசையை சுலபமாய் பின்னி முடித்தார். ஆனால் கருவாரி பிடித்தமில்லாமல் தலையாட்டினான். ஏற்கனவே அந்த தோப்பை பற்றி அவனுக்குத் தெரியும், அந்த தோப்போரம் சாராய ஊறல், புதைக்குற கும்பல்

www.tamilarangam.net

நிரந்தரமாக உண்டு. அவங்க தேங்கா பறிச்சாக் கூட எதிர்த்துக் கேட்டா வெட்டுக் குத்துத்தான். அதுவும் முன்னுடி காவக் காத்த மாரிமுத்து இங்க ஏண்டா சாராயங் காய்ச்சிறிங்கன்னு கேட்டதுக்கு, அவனே பொலிஸ் ஸ்டேசன்லயே வச்சு உதச்சு இடுப்பெலும்பு முறிஞ்சிடுச்சி! அந்த தோப்பை பற்றி ஏற்கனவே காது புகுந்த சேதி பெரிய வம்பில் மாட்டிக் கொண்டதை உணர்த்தியது. வண்டியை ஓரங்கட்டி தோப்பு முழுவதையும் ராமமூர்த்தி கருவாரியிடம் காண்பித்தார். வேலிகட்ட வேண்டிய இடம், காருவாரிக்கு வீடு கட்ட வேண்டிய தோப்புக் கடைசி எல்லாவற்றையும் பாசத்தோடு காண்பித்தார்.

"இங்க பாரு கருவாரி. நீ எங்க அப்பா காலத்லேர்ந்த பண்ணேல இருக்க, உன்னேவிட பொறுப்பா பாத்துக்க யாரு இருக்கா? இது உன் இடம் மாரி. பாத்துக்கோ"

"சரி...ங்...கய்....யா" நா குழற, கருவாரி தலேயாட்ட, நெற்றி வியர்த்தது.

தோப்பைத் தாண்டி சேரி வழியே வரும் பொழுது கருவாரிக்கு ஞாபகம் வந்தது.

"எங்கய்யா அது?"

ராமமூர்த்தி திரும்பிப் பார்த்தார். பின்னே ஒரு இருபது அடி தாண்டி, அது வந்து கொண்டிருந்தது. ரோஸ்னியை தொடர்ந்து சேரி நாய்கள் உறுமின. ரோஸ்னி பதிலுக்கு உறுமியதே ஒழிய முன்னேப் போல நின்று முறைக்க முடியாமல் ஊன்றி, வாலடக்கி நடந்தது. ஒரு நாய் பாய்ந்ததுதான் தாமதம். எல்லா நாயும் பாய்ந்து சீறி ரோஸ்னி மேல் புழுதி கிளப்பி ஒரே அலறல் சத்தம். வண்டி வரைக்கும் வந்து ஏறி அமர்ந்து விட்ட ராமூர்த்தியைப் பார்த்து காருவாரி வேண்டினுன்.

"ஏய்யா, கொஞ்சம் இருங்க ரோசினியை இழுத்திட்டு வந்துடரேன்."

"ஏய். . . ஏய் . . . போனு போகுது. இங்க வா. அதுக்கும் சீக்கு வந்து முன்ன மாதிரி இல்ல, வந்தா பின்னுடியே ஆத்துக்கு வரட்டும். செத்தா ஒழியட்டும் விடு. வேற வாங்கியாகனும். இந்த நேரத்ல நீ வேற போகாதே. உம் மேலே விழுந்து பிடுங்கிறப் போறது. நாளேக்கு முக்கியமான காரியம் வேறு இருக்கு. நாய் கடிச்சா நாற்பத்தெட்டு ஊசிடா"

காருவாரி திரும்பிப் பார்த்த பொழுது ரோஸ்னி கழுத்தெங்கும் சிகப்பாய் புரண்டது. கருவாரிக்கு மனது பாரமாயிற்று.

"எத்தன தடவ அய்யா பின்னுடியே, யாரும் அவரத் தொடவுடாம அது வரும். இப்ப அது போனு போவட்டும். வேற வாங்கலாம்னு சொல்ல எப்படி மனசு வருதோ?" கருவாரி மௌனத்தில் உறைந்தான்.

எப்பொழுதோ ஒரு முறை ராமமூர்த்தி சொன்னது அவன் நினேவுக்கு வந்தது.

"டேய் கருவாரி இந்த ரோஸ்னி மாதிரி, நீயும் எம்பக்கத்துலேயே இருந்தா நேக்கு என்னடா கவல?"

கருவாரி முன்பெல்லாம் அந்த வார்த்தையை நினேத்து பெருமை கொள்ள முடிந்தது. இப்போது லேசாய் அவனுக்கு உண்மை அர்த்தம் விளங்க ராமூர்த்தியை நிமிர்ந்து பார் க்க . . . .

"ஏய் என்னடா கருவாரி மலேச்சு நிக்குற? ஓட்டு வண்டிய . . ." கட்டளேயிட்டார்.

வண்டியோடு காருவாரிக்கு மனசும் உருண்டது. இப்பொழுதுதான் பாதை தெரிந்த மாதிரி கண்களே அகல வரித்தான். கண்ணுக்கெட்டும் தூரத்தில் சுதந்திரமாய் தன் கூட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்த குருவிகள் கருவாரியின் சிந்தையைக் கவர்ந்தன.

நன்றி; புதிய கலாச்சாரம்.

www.tamilarangam.net

# சுளை அறியாத பலாமரங்கள்

நொய்ஸ். சிவபாலன்

இழந்த கண்ணில், ஒளி வந்த போது உலகை இருள் கவ்விக் கொண்டதான வேதனை . முள்ளில் படுக்கை இட்டு பூராவும் மூடாதிருந்த கண்களுக்குள்ளே.... ஊரிகள் அணிவகுத்துச் செல்வது போன்ற உருட்டல். விடிந்துவிட்ட போதும், அவளைப் பொறுத்தவரை இதுவரை இல்லை!
இன்றும் அவள் அலுவலகம் செல்லும் நேரம் தாண்டிவிட்டது. . .
படுக்கையிலிருந்து எழுந்திருக்கவே இல்லை.
மனத்தில் இனந்தெரியாத ஒரு படபடப்பு. எதையோ போட்டுடைத்து விட்டதான அந்தப் பயவுணர்விலிருந்து அவளால் மீளமுடியவில்லை.
சீ . . . ஏன் இந்த விபரீதமான ஆசை எனக்கு . . . ?
அப்படியே இருந்திருக்கலாமே!
இந்த அண்மைக்கால பிரச்சினைக்குள் ஏன் ஆளாக்கப்பட்டேன்?
எப்படியெல்லாம் கட்டுப்பாடுகளை விதித்திருந்தேன். இந்தப் பாழாய்ப்போன உணர்வுகள் என்னை அடிக்கடி பரிகாசம் செய்தனவே . . .?
இவைகளைக் கட்டுப்படுத்தி வாழ்கிறோம் என்று சொல்பவர்கள், உண்மைதான் சொல்கிறார்களா?
ஏதோ ஒரு விடயத்துடன் தொடர்பாக அவளது சிந்தனை ஒவ்வொன்றும் 'யக்பின் ' களாகக் கொழுவப்பட்டன.
நேற்றைய நிகழ்வுகளோடு . . . அந்த அண்மைக் காலத்தின் ஆறுதல்கள் அவளது மனத்திரையில் படமாக விரிந்தது.
'ரமணன்'.... சுமார் இரண்டரை ஆண்டுகளுக்கு மேல் அதே அலுவலகத்தில் பார்த்த உருவம் . . . சிரிப்புக்கு . . . சிரிப்பு. உதவிகளுக்கு . . "தாங்ஸ்" . . . .
இவ்வளவோடு ஒரு சக ஊழியன் என்ற மட்டத்தில் நின்றுவிட்டது.
விலகிப் போய்விட எண்ணியும் . . . நிமிர்ந்து பார்க்கிறாள்.
அனுசரணைமிக்க அவனது பார்வையில். . . அன்று ஆயிரம் மடங்குகள் அதிகரித்துக் காணப்பட்டது.
பார்வையை எதிர் கொள்ள முடியாமல், 'கௌரி' தன் தலையைத் தாழ்த்திக் கொள்ளுகிறாள். . . . .
கரிய 'ஜீன்ஸ்' ஸில் ஒழிந்து நிற்கும் அவனது கால்களை மேய்கிறது அவள் பார்வை.
"குட் ஈவினிங்" மௌனம் கலைகிறது.
"குட் ஈவினிங்" பதிலுக்கு அவளும் சொல்லிவிட்டாள்.
"உங்களிடம் ஒரு உதவி... ."அவள் நகர்ந்து விடுவாளோ என்ற அவசரத்தில் 'ரமணன்' பேச்சை ஆரம்பித்து விட்டான.
'என்ன உதவி சொல்லுங்கோ' என்பது போல அவளுடைய முகம் தன்னை நேராக்கிக் கொண்டது.
"சுருக்கெழுத்தில ஒரு லெட்டர் . . அதை தமிழில் இயல்பான எழுத்திலேயே 'ரைப்' பண்ணித் தரவேணும்...
SO! இரட்டைச் சிரமம் . . ." "நாளைக்கு 'ஒவ்வீசில' செய்து தாறன்"
நீளும் போல இருந்த பேச்சுக்கு நிறுத்தற் குறியிட்டுவிட்டு நகர்கிறாள்.
"தாங்ஸ்" கூறிக் கொண்டு தன்னை சுதாகரித்தபடி 'ரமணன்'.............
பார்வையோடும் புன்னகையோடும் மட்டும் நின்றுவிட்ட தொடர்புபடி தாண்டி விட்டிருந்தது.
அன்று பேசியதைப் பற்றிய பயஉணர்வும் பேச்சை இடையே முறித்து விட்ட ஏக்கமும், என்னவென்றில்லாத அமைதியீனமும் . . . அவளை ஆட்கொண்டன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எனக்குள் ஏதோ! என்ன வென்றில்லாமல் என்னுடைய கட்டுப்பாட்டையும் மீறி...
'ரமணன்' என்னைக் ......
ஒரு போதும் இருக்க முடியாது.
வாட்ட சாட்டமான உடல், வாகாயமைந்து விட்ட முகம். . . சீதனச் சந்தையில்
கணிசமான மதிப்பிருக்கும், புத்தம் புதிய மலர்களின் போட்டிக்குரியவன்.
என்னை எப்படி விரும்புவான்?
சுருக்கெழுத்திலிருந்த அந்தக் கடிதத்தைப் பார்த்து விடுவோமா?
சுருக்கி வைத்திருந்த ஆவல் விரிகிறது?'கான் பாக்கில்' கை சென்ற போது ..
"கௌரி" அம்மாவின் அழைப்பு அவளை வந்தடைந்தது.
அலுவலகம் முடிந்து வந்து வழமையாகச் செய்யும் பணிகளில் ஏற்பட்ட தாமதத்தை
அறிவிக்கும் இறுக்கம்! அந்த அழைப்பிற் தொனித்தது.
எழுந்து சென்றாள். எல்லாவற்றையும் அவசர அவசரமாக முடித்து விட்டு படுக்கைக்கு
வந்தாள். எதையும் இதுவரை வரைந்து கொள்ளாத ஒரு வெள்ளைத் தாள்...
அதை மாசுபடுத்த ஒரு பேனா.. இவைகளை கையிலெடுத்துக்கொண்டு
இறுக்கி இருந்த தன் நெஞ்சைத் தலையணையில் சாய்த்துக் கொண்டு சுருக்கெழுத்தை
முன்னே வைக்கிறாள்
அவளுடைய கண்களையே அவளால் நம்பமுடியவில்லை.
திடீர் என்ற மின்சார அதிர்வு ....
"கௌரி"!
என்றழைத்தது அந்தக் கடித ஆரம்பம். "உன்னுடைய பாதிப்பு உலகில் புதியதல்ல.
ஆனால் உன்னுடைய அமைதியும், தூய்மையும், அடக்கமும் உலகில் இல்லாதவை ....
இழப்பையே எண்ணிக் கொண்டு .. உன்னை நீ தாழ்த்திக் கொள்வதை நான்
முழுமையாக வெறுக்கிறேன்...
எது உனக்கு வேண்டாம் என்கிறாயோ அது வேண்டும் என்கிறேன்.."
சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு மேலும் ஆர்வமாகப் படிக்கிறாள்....
கையிலிருந்த பேனாவுக்கு வேலையில்லாத காரணத்தால் ...
அது தானாகவே நழுவிக் கொள்கிறது.........
"கௌரி நீ திருமணம் செய்து சந்தோஷமாக வாழவேண்டும்...
இது உன்னால் ஏற்றுக் கொள்ளப்படுமாயின்!
என் மனதிற்குப் பிடித்து விட்டவளான உன்னை ....
ஏற்றுக் கொள்வதை நான் பாக்கியமாகவே கருதுவேன்...!
ஆம் ..! என்ற வார்த்தை மட்டும் உன்னிடமிருந்து எதிர்பார்க்கிறேன். அப்பா, அம்மா
மற்றும் அனைத்து ஒழுங்குகளும் என்னுடையவை.."
'ரமண்'
தலையணையின் ஓரம் ஈரமாயிருந்தது. கண்ணீரின் காரணம் அவளுக்கே தெரியவில்லை.
நாக்கு வளைக்கும் நாலாபுறத்துப் பெண்மணிகளும் . . .
அலுவலகத்தின் முதுமை ஊழியர்களும் இடையிடையே அப்பா அம்மாவும்......
எண்ணத் திரையில்வந்து மிரட்டி விட்டுச் சென்றனர்.
வருபவர்களையெல்லாம் மார்பில் பிடித்துத் தள்ளிக்கொண்டிருந்த அவளது மனதிடம்
மேலோங்கி நின்றது. இயல்பான உடல் உணர்வுகளை ஏன் நீ
எரித்துக்கொள்ள வேண்டும் என்றது?
கடிதத்தை மறுபடியும் மறுபடியும்...... கண்கள் மூடிக்கொள்ள மறுத்தன.
மறுநாள் காலை... புதுவிதமான மலர்வு அவள் முகத்தில் .... இருந்தும் காய்ந்து
போனது போலத்தெரிந்த தன்கண்களைத் திரும்பவும் மெருகூட்டிப் பார்க்கமுனைகிறாள்.
தங்கை 'சுகுணா'வின் பாவனையிலிருந்த சாயப் பென்சில்கள், மைகள்....
அன்று அவை அவசியமாகவே பட்டன.
இரண்டாண்டுகள் தீண்டாத அவைகளை .... இன்று தீண்டும்போது...?
தயங்கித் தயங்கி முடிவெடுக்கவே நேரமாகி விட்டது.
"கௌரி"......
அம்மாவின் அழைப்பில் பஸ்ஸுக்கு நேரமாகி விட்ட அறிவிப்பும் .....

www.tamilarangam.net

வழமையைவிட வேறுபாடான தன்மையினை உணர்ந்து கொண்டதான தொனிப்பும் கலந்து கிடந்தன.
எந்த முடிவுமில்லாமல் அலுவலகத்துள் நுழைந்து விட்டாள்.
கவிழ்ந்த தலைநிமிராமல் காகிதங்களும், 'காபனும்' தட்டச்சுப் பொறியில் தடுமாற விடப்படுகின்றன.
காலடி ஓசைகள் எல்லாம் 'ரமண'னாக இருக்குமோ
என்ற அங்கலாய்ப்போடு அவதானித்தாள்.
அன்று மாலைவரை அவன் அவளைச் சந்திக்கவே இல்லை.
"என்னுடைய எந்தத் தீர்மானமும் அப்பா அம்மாவின் முடிவுகளை அனுசரித்தே இருக்கும்."
நீண்ட வெள்ளைக் காகிதத்தின் நடுவில் இந்த இரண்டு வரிகள்...
தட்டச்சின் உருளையிலிருந்து காகிதம் விடுபட்ட போது ..... அடிமைத்தனம் அறுபட்டதான உணர்வோடு அவளிடம் ஒரு மகிழ்வு.
முடிவு எதுவானாலும் சமாளிக்கும் தைரியத்தை வலிந்து வரவழைத்துக் கொண்டவனாக ... 'ரமணன்'
அலுவலகம் முடியும்வேளை அவளுடைய மேசை அருகே செல்கிறான்.
அவள் .... தன்னுடைய எந்த உணர்வுகளையும் வெளிப்படுத்தாமல் ...
'ரைப்' பண்ணிய அந்தத் தாளை மட்டும் மேசை மீது வைத்துவிட்டு எழுந்து நின்றாள்.
மேசை மீதிருந்த காகிதங்கள் எல்லாம் இரவுத்தங்கலுக்காக 'லாச்சிகளு'க்குள் சென்றுவிட இது மட்டும் தனித்து மேசை மீது இருந்ததும்.
'இதோ இருக்கிறது' என்பது போல அவளது பார்வை காட்டியதும் சேர.....கடிதத்தை 'ரமணன்' உடனே எடுத்து விடுகிறான்.
எந்த வார்த்தைகளும் இன்றி அவளும் வீடு வந்துவிடுகிறாள்.
அவளுடைய உடலில் ஒரு தெம்பு பிறக்கின்றது. சுறுசுறுப்பும் சற்று அதிக மாகிவிட்டிருந்து.
யதார்த்த உலகில் ஆசாபாசங்களுக்கு அணைபோடுவது என்பது கஷ்டமான பணிதான் என்பதை அனுபவபூர்வமாக உணர்ந்து கொள்கிறாள்.
அறையில் ..... வீட்டில் .... வீட்டின் சுற்றுப்புறங்களில் எல்லாம் .. அப்படியே போடப்பட்டிருக்கும் பொருட்கள் அன்று அவள் கண்களிற் சுமையாகத் தெரிந்தன.
வீட்டார் விசேடமாக எண்ணுதவகையில் அவைகளை இயலுமான அளவு ஒழுங்கிற்குள் கொண்டுவந்தாள்.
உடல் அசதிகள் எல்லாம் ஓடிவிட்டிருந்தன. இன்றும் .... விழிகள் தூக்கத்தைத் தூரத்திலேயே நிற்க வைத்திருந்தன.
யன்னலோரமாக வரும்போதெல்லாம் "உன்னை எனக்கேன்" என ஒதுக்கித் தள்ளிய அந்த நிலா ஒளி... இன்று காட்டிற் காயாமாற் பூஞ்சோலையிற் காய்வது போன்ற உணர்வு அந்தப் பௌர்ணமியை அன்று முழுமையாக ரசித்துவிட்டாள்.
'சூரியனை'ச் சேவைக்கு அழைத்துவிட்டு 'நிலா' ஓய்வுக்குப் போய்விட்டது.
அன்று ஒரு சனிக்கிழமை அலுவலகம் இல்லாத ஒரு நாள்.
சுமார் ஒன்பது மணிக்கெல்லாம் குளியலறையால் வெளியே வந்துவிட்டாள்.
வழமை போல இறுகப் பின்னுமல் தலைமுடிக்கு சற்று விடுதலை கொடுக்கப்பட்டு .... கழுத்திற்குக் கீழே இறுக்கமற்ற ஒரு கட்டு...
தன்னுடைய அந்த சுருள் கேசத்தையே ரசித்தபடி .... நாசுக்காகத் தன்னை அலங்கரித்துக் கொண்டிருந்தாள்...
சுமார் பதினொரு மணி இருக்கும்.
யாரோ வருவதை அறிவித்து விட்டுப் பின்புறமாக ஓடிய நாய் மீண்டும் சுருண்டு கொண்டது.
'ரமணன்' இவ்வளவு அவசரமாக எதிர்பார்க்கவில்லை...
எதைச் செய்வது, எதை சொல்வது, கொடுப்பது என்பதெல்லாம் குழப்பம். கை கால் ஓடவில்லை.

www.tamilarangam.net

பரீட்சை மண்டபத்தில் முதல் நாள் உட்காரும் போதுள்ள அந்தப் பயஉணர்வினைப் போல பன்மடங்கு அதிகமான ஒரு உணர்வு.
அவள் வெளியே வரவில்லை.
"வாங்கோ தம்பி" அம்மா வரவேற்பதும். மூக்குக் கண்ணுடியைத் தாழ்த்தி அப்பா குறிப்பறிவதும், அவளால் அங்கிருந்தபடியே அவதானிக்க முடிந்தன.
தன்னைத்தானே அறிமுகம் செய்து கொள்ள வேண்டிய சங்கடமான நிலையிலிருந்து ...... வந்த விடயத்திற்கு வந்துவிட்டான
சம்பாஷணையின் வளர்ச்சியோடு சேர்ந்து 'கௌரி'யின் காதுகளும் கூர்மையாகிக் கொண்டிருந்தன.
"ஏதோ விதிவசம் அவள் காதலிச்சோ அல்லது விரும்பியோ இல்லை. நாங்களாகவே பாத்து ... நல்ல குணமான பையன், எல்லாம் நிறைஞ்சவன், 'சவுதி'யில 'சேவையரா' இருந்தவன் இரண்டு மாத லீவில வந்தபோது செய்து வைச்சம்...
ம் .... இப்பிடி நடக்கும் எண்டு யார்தான் கண்டது..?
அவர் இறந்ததில இருந்து அவளுடைய நடவடிக்கைகளுக்கு முன்னுல இப்படியான ஒரு யோசினை வர முடியவேயில்லை.
இப்பவும் அறையில் அவருடைய படமும் நினைவுமாகவே வாழந்து கொண்டிருக்கிறுள்..."
இப்படி ஒரு குட்டிப் பிரசங்கம் அப்பாவிடமிருந்து வந்தது.
"எதற்கும் கௌரியிடம் ஒரு வார்த்தை கேட்டு விடுங்க........"
இடையே 'ரமணன்' பேசினுன்.
"எப்பிடித் தம்பி...?"
அவளுடைய நடவடிக்கைகளில் அந்த விருப்பை அவதானித்திருக்காத அவளது தந்தை 'ராமநாதனுக்கு' இது பெரும் மனப் போராட்டமாகப் போய்விட்டது.
"இங்கே பாருங்கோ தம்பி என்ர அம்மாவும் என்னை வயித்தில வைச்சிருந்த வேளையிலேயே வெள்ளையுடுத்தியவ..
என்னுடையே சீவிச்சுப் போட்டு போய் சேர்ந்திட்டா.....
ஏதோ என்ர பிள்ளை ஒண்டுக்கும் இப்பிடி ஆகிப் போச்சு....
இறைவன் விட்டது. எண்டு நினைச்சு ஒருத்தனுக்காகவே வாழ்ந்திட்டுச் சாகிறதுதான் தம்பி நல்லது.....
கந்தோருக்குப் போற பிள்ளையெண்டதால கலர்ப்புடவை கட்டுறதுக்கே ஊர் சொல்ற கதைகள்....."
"ம் கந்தோரில காதலாம் எண்டால்.. பேசவே வேணும். இளமையில இதுகள் ஒண்டும் பார்க்க மாட்டேன் என்பார்கள்....
நாள் போகப் போகப் பழையதுகளைக் கிளறி வேதனைப் படு..."
தாயாரின் பிரசங்கத்தைத் தடுத்து நிறுத்தி விட்ட 'ரமணன்'
"நான் அந்த ரகம் இல்லை" என்றுன்.
"உங்களுடைய முடிவுகளுக்கு மாற்றமாக கௌரியின் மனவிருப்பு அமைந்திருந்தால்?"
மீண்டும் ரமணன்.
'சேட்' பையுள் கைகளை வைத்து கடிதத்தை எடுக்க முனையும் போது ...
"'ப்ளீஸ்' வேண்டாம்"
என்று இரங்கும் அவளது முகம் 'யன்னல்' வழியே தன்னைக் காட்டி மறைந்தது.
"தம்பி, எங்களுடைய பிள்ளையை எங்களுக்குத் தெரியாமலும் இல்லை.
ஊருக்குப் பதில் சொல்லவும் எங்களால் முடியாது."
என்று சொல்லிக் கொண்டு இதற்கு மேல் கதைப்பதில் தமக்கு விருப்பம் இல்லை என்பதைப் போல நடந்து கொண்டனர்.
இறுதிச் சொட்டுத் தேனீரையும் உறிஞ்சி விட்டு எழுந்த ரமணன் விடைபெற்றுன்.
அவளது உள்ளத்தின் ஆசைகளும் மீண்டும் விடைபெற்றன.
அந்த இளம் உள்ளம் இருளிற் குமிறுகிறது.

*நன்றி ; அறுவை (ஜேர்மனி)*

www.tamilarangam.net

# கொடியும் பாட்டுமே சுதந்திரமல்ல

யுத்த சிறைக்குள்
பாரதமாதா.

எரிகின்ற பனிமலையும்
காய்கின்ற காவிரியும்
படும்பாட்டை அறியாத
பட்டத்து அரசர்களுக்கு
பாங்காய்ப் பதக்கங்கள்.

இயந்திரத் துப்பாக்கிகளின்
பாதுகாப்பில்
சமாதானத் திருவிழா.

நாடு என்பது
காடும் மேடுமல்ல.
சுதந்திரம் என்பது
கொடியும் பாட்டுமல்ல.
ஒற்றுமை துப்பாக்கி முனையில்
நிறுத்தப்படுவதுமல்ல.

சிவா





# கொலையும் கற்போம்

ரத்தம் சிந்துவது மிகக் கொடியது
கொலை செய்யக் கற்றுக் கொள்வ
மிக மிகக் கடினம்
வாழ்நாளுக்கு முன்னே
சாகும் மக்களை பார்ப்பது
மோசமானது
ஆனால்
நாம் கொலை செய்ய கற்றுக்
கொள்ள வேண்டும்
வாழ்நாளுக்கு முன்னே
மக்கள் சாவதை பார்க்கவும்
வேண்டும்
நாம் ரத்தமும் சிந்த வேண்டும்
இனியும் ரத்தம் சிந்தவே
கூடாதென்பதற்காக.

ஹானஸ் ஜல்லா
(கீழை ஜேர்மனிய மாக்சிஸ இசை அறிஞ

நன்றி; புதிய கலாச்சாரம்

www.tamilarangam.net

# படிப்பினைகள் பாடமாகட்டும்

கடந்த இரு தசாப்த படிப்பினைகளை மறந்து இன்று குற்றுயிராக தன்னுயிரை காத்துக்கொள்ள, போராடிக் கொண்டிருக் கின்ற ஜனதா விமுக்த்தி பெரமுன (JVP) தொடர்ந்தும் தனது பழைய பாணியிலேயே போக முற்படுகிறது.

வரலாற்றின் ஊடாகவே படிப்பினைகளைக் கற்றுக்கொள்ளவேண்டும் என்று சமூக விஞ்ஞானக் கோட்பாடு கூறுகிறது. எனவே (JVP) பற்றிய வரலாற்றுத் தவறுகளை ஆய்வு செய்வதன் மூலமே எமது நாட்டில் எவ்வாறுகப் புரட்சிகரச்சக்திகள் இனிவரும் காலத்தில் புரட்சியொன்றை முன்னெடுத்துச் செல்வதற்கு உதவும்.

1971ல் ஓர் கிளர்ச்சியை தனது சூழ்நிலையையோ, வர்க்க நிலைப்பாடுகள் பற்றியோ தெளிவான எண்ணப்பாடோ, புரிந்துணர்வோ இல்லாமல் JVP இக் கிளர்ச்சியைத் தொடங்கியது. JVPதன்னை ஸ்தாபனப்படுத்திக் கொள்வதற்காக சிங்களம் பேசும் மக்கள் முன் வைத்த முக்கிய கருத்து இந்திய விஸ்தரிப்புவாதமே. இதன் மூலம் இலங்கையில் பாரியளவு தொழிலாளர் சமூகத்தைக் கொண்ட இந்திய வம்சாவளித் தோட்டத் தொழிலாளர்களை இந்திய விரிவாதிக்கத்தின் 'பகடைக்காய்கள்' என்ற பிரச்சாரத்தை சிங்களம் பேசும் மக்கள்முன் வைத்தது. இதன் மூலம் இலங்கையில் சிங்கள பாசிச வாதிகளால் ஸ்தாபனப்படுத்தப்பட்ட இனவாதத்தை இவர்கள் பயன்படுத்திக் கொண்டதாகவே அமைந்தது. ஆகையால் புரட்சியில் பாரியளவு தொழிலாளர்களின் பங்களிப்பை இல்லாமல் செய்வதற்கு இது உடந்தையாக இருந்தது.

ஏற்கனவே அமைப்பு ரீதியில் திரட்டப்பட்டுள்ள நகர்ப்புற தொழிலாளர்கள் புரட்சிக்கு முன்வர மாட்டார்கள், கிராமப்புற இளைஞர்களும், மாணவர்களுமே புரட்சிக்கு



சுட்டுக் கொலை செய்யப்பட்ட ஜே.வி பி இன் தலைவர் ரோகண விஜயவீரா

உகந்தவர்கள் என்றும், அவர்களைக் கொண்ட ஓர் அமைப்பே ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற முடியும் என்றும் நம்பினர்கள். இதனுல் இவர்கள் சகல அணிகளையும் கொண்ட ஒரு புரட்சிகர வேலைத்திட்டத்தை மறுத்ததன் மூலம் தோல்விக்குத் தள்ளப்பட்டார்கள். இருந்தும் இவர்கள் தங்களை மாக்சிச, லெனினிச, மாவோய்ஸ்ட்டுக்கள் என்று கூறிக்கொண்டு. பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட இளம் போராளிகளை சிங்கள பாசிச அரசாங்கத்திற்கு பலியும் கொடுத்தனர்.

1975ல் ஆரம்பிக்கப்பட்ட 'அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான இயக்கம்' 77ல் வலுப்பட்டதால் தேர்தலில் போட்டியிட்ட பாரளுமன்றக் கட்சிகள் தாம் பதவிக்கு வந்தால், JVPயை விடுதலை செய்வதாக தமது தேர்தல் பிரச்சாரத்தில் முக்கிய வாக்குறுதியாக கூறிக் கொண்டன. 77 தேர்தலில் UNP ஆட்சிக்கு வந்து JVPஐ விடுதலை செய்தது.

77ல் வெளிவந்த தலைமை பின்வருமாறு தன்னை சுயவிமர்சனம் செய்து கொண்டது. புரட்சிகர மாக்ச்சிச கோட்பாடுகளை புறக்கணித்து, வர்க்கப்போராட்டத்திர்க்குப் பதிலாக வர்க்க சமரசத்தைக் கடைப்பிடித்து, சர்வதேசியத் திற்குப் பதிலாக குறுகிய தேசிய வெறியில் மூழ்கியதை, தமது வரலாற்றில் ஓர் இருண்ட அத்தியாயம் என்று


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கூறிக்கொண்டது. மேலும் ஈழத்தமிழர் தனித் தேசிய இனம், மொழி மற்றும் பிற சம உரிமைகள் கொடுக்கப்பட வேண்டும் என்றும், மலையகத் தமிழ் தோட்டத் தொழிலாளர்களை புறக்கணித்தது தவறு என்றும் ஒப்புக்கொண்டது. 1977ல் இருந்து 80வரை தமிழ் தேசிய இனத்திற்கு எதிராக அரச பயங்கரவாதத்தை ஏவி அடக்குவதையும் உரிமை மறுப்புக்களையும் எதிர்ப்பதாகக் கூறி ஒன்றுபட்ட 'இலங்கையில் ஒர் சோசலிச புரட்சியே இனப்பிரச்சனை தீர்வு' என்றும் கூறியது.

1982மே இல் JVP மத்திய குழு கூடி இனப்பிரச்சனைக்கு முதலாளித்துவக் கட்சிகள் தான் (UNP, SLFP) ஈழம் கோரும் நிலைக்குத்தள்ளுகின்றனர் என்றும், பயங்கரவாத இயக்கம் கேடானது என்றும் மக்கள் நலனுக்கு உகந்தது அல்ல, ஆகவே நாம் ஈழப்போராட்டத்தை எதிர்க்கிறோம் என்றும் கூறி 82ல் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் UNPக்கும் SLFPக்கும் எதிராக தானும் போட்டியிட்டடு கணிசமான வாக்குகளைப் பெற்று மூன்றுவது இடத்தைப் பெற்றுக் கொண்டது.

இதிலிருந்து இவர்களுக்கு அதிகாரம் கிடைக்க வேண்டும் என்பதே முக்கிய குறியாக இருந்திருக்கின்றதே தவிர ஒர் சமூக மாற்றத்திற்கான அடித்தளம் இக்கால கட்டத்தில் இருக்கவில்லை, மேலும் இன முரண்பாட்டை முதலாளித்துவக் கட்சிகள் போலவே JVP உம் பயன்படுத்திக்கொண்டது. இதேபோன்ற நிகழ்வுகள் 87களில் சில ஈழக் குழுக்களும் தேர்தலில் அதிகாரப் போட்டிக்காக பங்கெடுத்தது குறிப்பிடத தக்கது.

1983ல் நாடுதழுவிய இனக்கலவரம் நடைபெற்றபோது தென் இலங்கை ஜனநாயக சக்திகளும் அதிர்ந்த வேளையில் நடக்கும் பிரச்சனைக்கும் தனக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்பது போல் மௌனமாக இருந்தனர். சிறுபான்மை இன மக்கள் மீது நடாத்தப்பட்ட அராஜகத்திற்கு எதிராக தன் பங்களிப்பை மறுத்ததன் மூலம் தானும் அதே இனவாத குட்டையில் ஊறிய மட்டைதான் என்று தொடர்ந்தும் நிருபித்தது. UNP அரசு ஈழப்போராட்டக் குழுக்களுக்கும் JVPக்கும் தொடர்பு இல்லை என்று தெளிவாகத் தெரிந்திருந்தும், சிங்களம் பேசும் மக்கள் மத்தியில் ஈழப் போராட்டக் குழுக்களுக்கும் JVPக்கும் தொடர்பு இருப்பதாக்க் கூறி JVPஐ தடைசெய்தது. இத்துடன் நவசமசமாஜக் கட்சியும், ஸ்ரீலங்கா கம்யூனியுஸ்ட் கட்சியும், JVP உடன் சேர்த்து தடைசெய்யப்பட்டன, ஆனால் நவசமசமாஜக் கட்சியும், ஸ்ரீலங்கா கம்யூனியுஸ்ட் கட்சியும் இப்படுகொலைகளை வன்மையாகக் கண்டித்ததே இவர்களை UNP அரசு தடை செய்வதற்கு காரணமாய் இருந்தது.

தென் இலங்கையில் இரகசிய அமைப்புக்களை கட்டி வளரவேண்டிய நிலைக்கு JVP தள்ளப்பட்டது. JVP இனால் கட்டப்பட்ட இரகசிய அமைப்புக்கள் மக்கள் புரட்சிக்கு இட்டுச் செல்லக் கூடிய வண்ணம் இல்லாமல் பயங்கரவாத இயக்கத்துக்குரிய தன்மையைக் கொண்டே கட்டியமைக் கப்பட்டன. ஈழப்போராட்டக் குழுக்களின் போராட்ட தந்திரோபாயங்கள் வழி முறைகளின் பாதிப்பு பெருமளவு காணப்பட்டது. சமூக அமைப்பை மாற்றாமல் சமூக சீர்திருத்தங்களை மேற்கொள்ளும் நடமுறையும் காணப்பட்டது.

இதே காலகட்டத்தில் சிறுபான்மை தேசிய இனப் பிரச்சனையில் சீறிலங்கா அரசின் இராணுவத்தீர்வு தவறு என்றும் அரசியல் தீர்வொன்றை முன்வைக்க வேண்டும் என்றும் சிங்களம் பேசும் மக்கள் மத்தியில் தனது கருத்துக்களை ஆணித்தரமாக வைத்து அதற்காக பாடுபட்ட 'சுதந்திர மாணவர் அமைப்பு' (ISU), JVP இன் கட்டுப்பாட்டின் கீழ் இயங்க மறுத்ததால் ISU இன் முக்கிய உறுப்பினரான பல்கலைக்கழக மாணவ தயாபத்திரன JVP இனரால் பேச்சுவார்த்தைக்கு என அழைக்கப்பட்டு கொலைசெய்யப்பட்டார். இதே போன்று வட கிழக்கில் இருந்த தமிழ் குழுக்களாலும் பல முற்போக்கு சக்திகளை அழிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

JVP தன்னைப் பலப்படுத்திக் கொண்ட நாட்கள் இலங்கை, இந்திய ஒப்பந்தத்தின் பின்பே முன்பு JVP இனால் வைக்கப்பட்ட இந்திய விஸ்தரிப்பு வாதக் கருத்துக்கள் JVPக்கு சான்றாக அமைந்தது. இது JVP அரசியில் மேலான்மையை காட்டி

www.tamilarangam.net



ஜே.வி.பி ஈழக்குழுக்கள் போல் நடத்திய விளக்குக் கம்ப கொலைகளில் ஒன்று

நின்றதால் பல தேசபக்த சக்திகளை JVP இனால் கவர்ந்து இழுக்கமுடிந்தது. இதனால் மீண்டும் பலம் பெற்று இதன் ஓர் அங்கமாக DJV என்னும் வெகுசன அமைப்பையும் உருவாக்கியது. இவ்வெகுசன அமைப்பு சிங்களம் பேசும் மக்கள் மத்தியில் பெரும் செல்வாக்கை செலுத்தியது.

DJV ஐந்து பிரதான கருத்துக்களை முன்வைத்தது

(1) இந்திய இலங்கை ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட வேண்டும்

(2) இந்திய ஆக்கிரமிப்பு இராணுவம் வெளியேற வேண்டும்

(3) JVP இன் மீது அரசாங்கத்தினால் விதிக்கப்பட்ட தடை நீக்கப்பட வேண்டும்

(4) JR ஜெயவர்த்தனா பதவி விலக வேண்டும்

(5) நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு புதிய தேர்தல் நடத்தப்பட வேண்டும்

ஆனால் எந்தவிதமான கோரிக்கை ஏனும் நாட்டின் முக்கிய பிரச்சனையான சிறுபான்மை இன மக்களின் பிரச்சனை சம்பந்தமாகவும், அவர்களின் பாதுகாப்பு நலன்கள் சம்பந்தமாகவும் கருத்துக்கள் ஏதும் DJVஆல் முன்வைக்கப்படவில்லை.

ஒடுக்குமுறை இயந்திரமான முப்படைக்குள்ளும், அரச ஊழியர்கள் மத்தியிலும் பாரிய ஆதரவை பெற்றிருந்த JVP இவ் ஆதரவை தனக்கு சாதகமாகக் கொண்டு அரசுக்கு எதிரான பல நடவடிக்கைகளை வெற்றிகரமாக மேற்கொண்டது. இதனால் அரச சிவில் நிர்வாகம் சீர்குலைந்தது. பெருளாதரத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. குறிப்பாக அரசுக்கு எதிரான வேலைநிறுத்தம் பூரண வெற்றியைக் கொடுத்தது.

இத்திடீர் வளர்ச்சியினால் தன்னை பலம் பொருந்திய அமைப்பாக காட்டிக்கொண்ட JVP பல தவறான அணுகுமுறைகளை கையாண்டது. தமிழ் குழுக்கள் போல அவர்களை மிஞ்சும் அளவிற்கு பல அதிரடி நடவடிக்கைகளில் இறங்கியது. அரச வேலையில் இருப்பவர்கள் முப்படையில் இருப்பவர்கள் மூன்று நாள் அவகாசம் கொடுக்கப்பட்டு அவர்கள் அனைவரும் இராஜினமா செய்து வெளியேறவேண்டும் இல்லையேல் வெளியேறாதவர்கள் மீது மரணதண்டனை நிறைவேற்றப்படும் என்றும்

www.tamilarangam.net

அறிவித்தது.

எவ்விதமான மாற்றுத்திட்டமும் இல்லாததன் காரணமாக அரச ஊழியர்களோ முப்படையினரோ வெளியேறவில்லை இதனல் ஆத்திரமுற்ற JVP மூர்க்கத்தனமாக மனிதாபிமானமற்ற முறைகளில் அரச ஊழியர்களும், முப்படையினரும் அவர்கள் குடும்பத்தினரும் JVPன் கொலைவெறிக்கு இலக்கானுர்கள். இதனுல் ஆரம்பத்தில் ஆதரித்து வந்த பல அடிமட்ட முப்படை யினரினதும் மற்றும் சாதரண அரச ஊழியர்களின் தீவிர எதிர்ப்புகக்கும உள்ளானுர்கள். இதை தனக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்ட ஸ்ரீலங்கா அரசு JVPஐ இலகுவாக அழித்தொழித்தது. மீண்டும் ஓர் முறை தனது வரலாற்றுப் படிப்பினைகளை சிந்திக்க மறுத்ததன் மூலம் தனதழிவை தானே தேடிக்கொண்டது.

தொழிலாளர் வர்க்கப் புரட்சியின் நண்பர்களாகிய சாதாரண மத்தியதர வர்க்க, மற்றும் தொழிலாள வர்க்க அறுபதுஆயிரம் இளைஞர், யுவதிகளை இக்கால கட்டத்தில் இழந்ததன் மூலம் இலங்கையின் வர்க்கப் புரட்சி பின்தள்ளப்பட்டது.

இலங்கையில் வர்க்கபேதமற்ற ஓர் சமூதாயத்தைப் படைக்கவேண்டும் என்ற உணர்வுள்ள மக்கள் இருக்கிறுர்கள் என்பதற்கு சான்று பகிர்வதாக தெற்கிலும் தற்போது வட கிழக்கிலும் நடந்த, நடக்கின்ற போரட்டங்கள் இருக்கின்றன. ஆனுல் இம் மக்களின் சக்தியை ஒழுங்காக ஸ்தாபனப்படுத்தி தலைமையைக் கொடுக்க இன்னமும் ஓர் முற்போக்கு சக்தி இல்லை என்பதே வருந்தத்தக்கது. இனிவரும் காலத்தில் புரட்சியை முன்னெடுக்கும் சக்திகள் கடந்தகால வரலாற்றுப் படிப்பினைகளை பாடமாகக் கொண்டு இனவாத, மதவாத, மொழிவாதங்களைக் களைந்து ஓர் புதிய சனநாயகப் புரட்சியைச் செய்வதன் மூலம் இலங்கையில் இன மொழி வர்க்க பிரச்சனைகள் தீர்க்கப்படும்.

இக்கட்டுரை 20 ஆண்டுகளின் முன்னர் நிகழ்ந்த JVP இன் கிளர்ச்சியினை நினைவு கூர்ந்து எழுதப்பட்டிருக்கிறது

கி.சே.ச

"தனி நபர்களைப் பழிவாங்கும் நோக்கம் புரட்சி நடவடிக்கைகளின் அம்சமாகாது. ஏகாதிபத்திய இராணுவத்தின் சிப்பாய்களைப் போன்றவர்களல்ல நாங்கள். அவர்கள் மனித இயந்திரங்கள் எவ்வித ஈவிரக்கதும் இன்றி கட்டுப்பாடர்கக் கொலை செய்வதற்கு மட்டுமே கற்பிக்கப்பட்டவர்கள் அவர்கள். நாங்கள் மனிதனை மதிக்கிறேம். மனித உயிர்களை வார்த்தைகளால் விவரிக்க முடியாத அளவிற்கு நேசிக்கிறேம்"

*பகத்சிங்*

www.tamilarangam.net

566 பாராளுமன்ற வீதி
ரொறன்ரோ

# தேடகம்
## நூலகம்

இந்தியா, இலங்கையில் இருந்து
புதிய பத்திரிகைகள், சஞ்சிகைகள்
தருவிக்கப்படுகின்றன.

தேடகம் திறக்கப்படும நேரம்:
கிழமைநாட்களில் : 05. 00பி ப. - 10.30பி.ப
வாரஇறுதி நாட்களில் :12.00மதியம் - 11.00பி.ப
புலம் பெயர்ந்த தமிழ் இளைஞர்களால் வெளியிடப்படும் சகல தமிழ் ஆங்கில சஞ்சிகைகளும் ,பத்திரிகைகளும் தருவிக்கப்படுகின்றன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

